# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 32 | சுடர் 31 | கதிர் 286 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆவணி 22, புதன்கிழமை 07.09.2016


## கோப்பாய் விபத்தில் பெண் ஒருவர் சாவு

*படி வாகனத்துடன் சாரதி தப்பியோட்டம்*

யாழ்ப்பாணம், செப். 7

படி - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் படுகாயமடைந்து சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். மோதி யதாகக் கூறப்படும் படி

>> 28ஆம் பக்கம்

சுன்னாகம் சித்திரவதைக் கொலை;

## 8 பொலிஸாரையும் நீதிமன்றில் முற்பட நேற்று உத்தரவு

### விடுத்தார் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன்

யாழ்ப்பாணம், செப். 7

சித்திரவதைக் கொலைக்குற்றச்சாட்டுச் சுமத்தப் பட்டுள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள் ளிட்ட 8 பொலிஸாரையும் யாழ். மேல் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நேற்று உத்தரவிடப்பட்டது. சந்தேகநபர்களைக் கைது

>> 27ஆம் பக்கம்





தமிழீழ விடுதலைப் புலிகளின்

## தலைவர் பிரபாவுக்கு இராணுவ அதிகாரி பெரும் பாராட்டு

கொழும்பு, செப்ரெம்பர் 7

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகர னின் உயர்ந்தபட்ச ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியன குறித்துப் புகழ்ந்துரைத்த இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்ற தளபதியான மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன, இறுதிநிமிடச் சமர் வரையில் பிரபாகரனின் தலைமைத்து வம் மிகச் சிறந்ததாக இருந்தது என்றும் தெரிவித்தார்.

இராணுவத்தில் இருந்து நேற்றுடன் ஓய்வுபெற்றுள்ள மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன, 800 பக்கங்களில், 'நந்திக்கட லுக்கான பாதை' என்ற நூலை எழுதி நேற்று வெளியிட்டார்.

இது தொடர்பில் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு வழங்கி ய செவ்வியில், விடுதலைப் புலிகளின் தலைவரின் ஆளுமையை அவர் பெரிதும் புகழ்ந்துரைத்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

பிரபாகரன் படிக்காதவராக இருக்கலாம், ஆனால் அவர் தனக்குள்ளேயும், தன்னைச் சுற்றியும், கடுமையான ஒழுக் கத்தைப் பேணினார்.

தற்கொலைத் தாக்குதல் கலையைக் கட்டியமைத்தது இவர் தான். அல் - குவைதாவின் முதலாவது, தற்கொலைக் குண்டுதாரிக்கு முன்பாகவே, பிரபாகரன்

>> 06ஆம் பக்கம்

காணி விடுவிப்புத் தொடர்பில்

## யாழ். செயலரிடம் விளக்கம் கேட்கிறார் வடக்கு முதலமைச்சர்

யாழ்ப்பாணம், செப். 7

நலன்புரி நிலையங் களில் தங்கி யுள்ள மக் களின் காணிகளைக் கையளிப்பது தொடர் பில் யாழ். மாவட்ட இரா ணுவத் தளபதியால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் தொடர்பில், யாழ். மாவட்டச் செயலரிடம் விளக்கம் கேட்டுள்ளார் வடக்கு மாகாண முதல மைச்சர் க.வி.விக் னேஸ்வரன்.

நலன்புரி நிலையங் களில்

>> 27ஆம் பக்கம்

## பலாலியில் 1000 ஏக்கர் காணி கேட்கிறது இராணுவம்

### யாழ். தளபதி கோருவதாக முதலமைச்சர் விக்கி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 7

பலாலியில் படை முகாம் அமைப் பதற்கு ஆயிரம் ஏக்கர் நிலம் தேவை என்று, யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மகேஸ் சேன நாயக்கா தெரிவித்ததாக, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வட்க்கு மாகாண சபையின் 61 ஆவது அமர்வு, கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலி. வடக்குக் காணி விடுவிப்புக் கள் தொடர்பில் மாவட்ட இராணு வத் தளபதியுடன் பேச்சு நடத்தி னேன். இதன் போது பலாலியில் இராணுவமுகாம் அமைப்பதற்கு ஆயிரம் ஏக்கர் நிலம் தேவை என்று அவர்

>> 27ஆம் பக்கம்

வடக்கு – கிழக்கு இணைப்பு

## அரசின் புதிய வியூகத்தால் கிழக்கில் வலுக்கிறது எதிர்ப்பு

கொழும்பு, செப். 7

வடக்கு - கிழக்கை இணைப்பது நல்லாட்சி அர சின் இருப்புக்கு ஆபத்தாக மாறிவிடும் என்று அரசு கருதும் அதேநேரம், தமிழ்த் தேசியக் கூட்டமைப் பையும் பகைத்துக்கொள்ள முடியாத நிலையில் உள்ளது.

>> 27ஆம் பக்கம்

## தூதுவர் மீதான தாக்குதலில் ஈழத் தமிழருக்குத் தொடர்பில்லை

### சபையில் தெரிவித்தார் ரணில்

கொழும்பு, செப். 7

தமிழக, நாம் தமிழர் கட்சியின் மலேசியக் கிளையி னரே இலங்கைத் தூதுவர் மீது தாக்குதல் நடத்தி னர். இலங்கைத் தமிழர்கள் எவரும் இந்தச் சம் பவத்துடன் தொடர்புபடவில்லை.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளு மன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று

>> 04ஆம் பக்கம்

## குடும்பத்தலைவர் அடித்துக் கொலை

### தெல்லிப்பழையில் துயரம்

யாழ்ப்பாணம், செப். 7

உறவினர்களுக்கு இடையே இடம்பெற்ற கைகலப் பில், குடும்பத்தலைவர் ஒருவர் விக்கெட் உள்ளிட்ட தடிகளால் அடித்துக் கொலை செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். அந்தக் குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரது பிள்ளை கள் தலைமறைவாகியுள்ளனர். அவர்களும் விரை வில் கைது செய்யப்படுவர்

>> 27ஆம் பக்கம்

## தூதுவர் மீதான தாக்குதலை கண்டிக்கிறது கூட்டமைப்பு

கொழும்பு, செப். 7

மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் இப்ராஹிம் அன்ஷார் மீதான தாக்குதலை பிரதான எதிர்க் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மை யாகக் கண்டித்துள்ளது.

குற்றவாளிகளுக்கு எதிராக

>> 29ஆம் பக்கம்








Digitized by Noolaham Foundation.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## பஸ் சாரதிக்கு 50 ஆயிரம் தண்டம்

சாவகச்சேரி செப். 7
வழித்தட அனுமதிப் பத்திரமின்றி யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் பயணிகளை ஏற்றிச் சென்ற சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்று நேற்று 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.
சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவினர் வீதிப் பரிசோதனையில் ஈடுபட்டவேளையில், பயணிகளுடன் வந்த பஸ்ஸை சோதனையிட்ட போது, வழித்தட அனுமதிப் பத்திரமின்றிப் பயணிகளை ஏற்றி வந்தமை கண்டறியப்பட்டது.
அதனால் அந்தச் சாரதிக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து, அவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார் நீதிவான். (வ- 9)

# தொழிற்சாலைகளை வடக்கு அரசிடம் கையளிக்கவேண்டும்

## வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், செப்.7
வடக்கின் முக்கிய தொழில் மையங்களான காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற் சாலை, ஒட்டிசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம் ஆகியவற்றின் நிர்வாகங்களை வடக்கு அரசிடம் கையளிக்க வேண்டும்.
இவ்வாறு வலியுறுத்தும் தீர்மானம் நேற்று வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டது.
வடக்கு மாகாண சபையின் 61 ஆவது அமர்வு நேற்றைய தினம் கைதடியில் உள்ள பேரவைச் செயலகத்தில் இடம் பெற்றது. அவைத்தலைவர் சீ.வி.கே.சிவ ஞானத்தினால் மேற்படி பிரேரணை முன்வைக்கப்பட்டது.
வடக்கின் முக்கிய தொழில் மையங்களாக விளங்கிய காங்கேசன் துறை சிமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, ஒட்டிசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம் ஆகியவற்றை இன்னும் முழு இயங்கு நிலைக்கு கொண்டு வரப்படாதமை வருத்தத்திற்குரியது.
எனவே இவற்றை மீள இயக்கி வடக் கின் பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ளவும், வேலை வாய்ப்பை வழங்கும் பொருட்டும் இந்தத் தொழிற்சாலைகளின் நிர்வாகங்களை வடக்கு மாகாணத்திடம் கையளிக்கவேண்டும் என ஜனாதிபதி, பிரதமர் மற்றும் கைத்தொழில் அமைச்சரைக் கோரப்படும் என்று பிரேரணையில் தெரிவிக்கப்பட்டது.
இந்தப் பிரேரணையை வழிமொழிந்த வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், இது தொடர்பாக உரியவர்களிற்கு கடிதம் அனுப்பி வைக்கப்படும் என்றார். (வ-101)

கிரிக்கெட் மைதானத்தில் கொலை;

## 6 எதிரிகளுக்கு அழைப்பாணை

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் 2014 இல் இடம்பெற்ற கொலை வழக்கில் குற்றம் சாட்டப்படும் 6 சந்தேகநபர்களையும் யாழ். மேல் நீதிமன்றில் 20ஆம் திகதி முன்னிலையாகுமாறு நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்று உத்தரவிட்டார்.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடை யில் வருடாந்தம் கிரிக்கெட் போட்டி நடைபெறுகின்றது. யாழ்ப்பாணக் கல்லூரி கிரிக்கெட் மைதானத்தில் 2014 ஆம் ஆண்டு மார்ச்15 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் மைதானத்தில் வைத்து ஜயரட்ணம் தனுசன் அமலன் என்பவர் கொலை செய்யப்பட்டிருந்தார்.
சட்டமா அதிபரினால் சிவசண்முகநாதன் மதுன், இந்திரசீலன் பிருந்தாபன், ரமேஷ் வெண்டில்கரன், நேசரட்ணம் கஜேந்திரன், நாகராஜா காந்தரூபன், சுந்தரலிங்கம் பிரகாஷ் ஆகிய 6 பேருக்கு எதிராகக் கொலைக் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டு விசாரிக்குமாறு யாழ். மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
இந்த வழக்கு யாழ். மேல்நீதிமன்றில் முதற் தடவையாக நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. அரச தரப்புச் சட்டத்தரணி நாகரட்ணம் நிசாந்தன், எதிரிகளை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை பிறப்பிக்குமாறு கேட்டார்.
இதனையடுத்து எதிர்வரும் 20ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு, அழைப் பாணை பிறப்பிக்கப்பட்டது.
இந்த வழக்கில் 12 தடயப் பொருள்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. 16 பேர் சாட்சிகள் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். (கு-4)

பரவிப்பாஞ்சான் மக்கள்

## இன்று முதல் உணவு தவிர்ப்பு போராட்டம்

கிளிநொச்சி, செப். 7
இராணுவத்தினர் வசமுள்ள பரவிப்பாஞ்சான் காணிகளை விடுவிக்கக்கோரி 7ஆவது நாளாகவும் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்திவரும் மக்கள், இன்று தொடக்கம் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அறிவித்தனர்.
தமது காணிகளை மீளப் பெற்றுதருமாறு வலியுறுத்தி பரவிப்பாஞ்சான் பிரதேச மக்கள் கடந்த மாதம் பல நாள்களாகத் தொடர் போராட்டங்களை முன்னெடுத்தனர். கடந்த மாதம் 17ஆம் திகதி அந்தப் பகுதிக்கு வருகை தந்த எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனிடம், பாதுகாப்பு செயலாளருடன் தொலைபேசியூடாகப் பேசி இரண்டு வாரங்களுக்குள் மக்களின் காணிகளை மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்ததால் கடந்த மாதம் போராட்டம் கைவிடப்பட்டது.
எதிர்க்கட்சித் தலைவர் வாக்குறுதியளித்த காலக்கேடு முடிந்துள்ளதாகவும், தமது காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை எனவும் தெரிவித்த அப்பகுதி மக்கள், கடந்த புதன்கிழமை போராட்டத்தை ஆரம்பித்தனர். இந்தக் கவ்னவீர்ப்புப் போராட்டம் நேற்று வரை தொடர்ந்தது.
"பாதுகாப்பு அமைச்சின் செயலாளரோ அல்லது மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனோ பரவிப்பாஞ்சானுக்கு நேரடியாக வந்து எங்களுடைய காணிகளை விடுவித்தாலே இன்று ஆரம்பிக்கப்பட உள்ள உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நிறுத்துவோம். இல்லையேல் என்ன நடந்தாலும் போராட்டத்தைக் கைவிடமாட்டோம்" என்று அந்த மக்கள் தெரிவித்தனர். (வ-21)

இராணுவம் நடத்தும் முன்பள்ளிகளுக்கு

## வடக்கு மாகாண சபையின் நிதி முறையற்ற வகையில் செலவு

### எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 7
கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவில் இராணுவத்தினரால் நடத்தப்படும் முன்பள்ளிகளுக்காக, வடக்கு மாகாண சபையின் நிதி 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் முறையற்ற விதத்தில் பயன்படுத்தியுள்ளதாக கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு வடக்கு மாகாண எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.
கைதடியில் உள்ள பேரவைச் செயலகத்தில் வடக்கு மாகாண சபையின் 61ஆவது அமர்வு அவைத்தலைவர் சீ.வி.கே.சிவ ஞானம் தலைமையில் நேற்று இடம் பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவில் இராணுவத்தினரால் நடத்தப்படும் முன்பள்ளிகளுக்காக வடக்கு மாகாண சபையின் நிதி 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தற்போதைய மாகாண சபை உருவாக்கத்தின் பின்பும் வடக்கு மாகாண சபையின் பணமே வழங்கப்பட்டுள்ளது.
இவ்வாறு வழங்கப்பட்ட நிதி தொடர்பில் வரவு - செலவுத் திட்டத்தின் அனுமதியோ அல்லது அமைச்சரவை அங்கீகாரமோ கிடையாது. மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கான சான்றுகளும் இல்லை என்றார் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா.
இது தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்ததாவது:
2013ஆம் ஆண்டில் மட்டுமே மாகாண சபைக்கான தேர்தல் காலத்தில் அப்போதய ஆளுநரின் பணிப்பின் பெயரில் 37. 5 மில்லியன் ரூபா கணக்கிடப்பட்டு, அங்கு கல்வி பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் வங்கியில் வைப்பிடப்பட்டது.
இதனை 2013ஆம் ஆண்டு கணக்கறிக்கையில் காட்டி காண்பித்துச் சீர்செய்யுமாறு கோரியிருந்தனர். அதற்கமைய ஒரு தொகைக்கான ஆவணம் பெற்று சேர்ப்பிக்கப்பட்டது. அவ்வாறு சேர்ப்பிக்கப்பட்ட தொகையைக் கழித்து, ஆவணம் முன்வைக் காத தொகையே 2014 இல் காட்டப்படும். அதன் பின்பு 2015 இல் முழுமையான ஆவணம் முன்வைக்கப்பட்டதன் பிரகாரம், தற்போது அந்தவிடயம் கணக்காய்வு அறிக்கையில் இருந்து சீர் செய்யப்பட்டுள்ளது - என்றார். (வ-4,101)

கோல்ப் கிளப்ஸ் அமைக்க

## 550 ஏக்கர் காணி ராணுவத்துக்கு தேவையாம்

யாழ்ப்பாணம், செப்.7
பலாலியில் நிலைகொண்டுள்ள படையினர் தமக்கு கோல்ப் கிளப்ஸ் அமைக்கவென 550 ஏக்கர் நிலத்தினைக் கோருகின்றனர் என்று வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.
வடக்கு மாகாணசபையின் 61ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
படையினர் தமக்கு கோல்ப் கிளப்ஸ் அமைக்கவென 550 ஏக்கர் நிலத்தினையும், தென்னிலங்கை ஊடக நிறுவனம் ஒன்றுக்கு என்றுகூறி குறிப்பிட்ட அளவுடைய காணியையும், பொருளாதாரத் தேவை என்றுகூறி 32 ஏக்கர் நிலமும் வேண்டும் என்று கேட்டுள்ளனர். இது என்ன திட்டத்தின்கீழ் நடைபெறுகின்றது என்பதே தெரியவில்லை. மக் களின் நிலங்களை எவ்வாறு எல்லாம் அபகரிக்க முயல்கின்றனர். இவற்றினை அனுமதிக்க முடி யாது - என்றார் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர். (வ-101)

## காணாமற்போன முதியவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், செப். 7
இளவாலையில் ஒரு வாரத்துக்கு முன்னர் காணாமற்போனதாகக் கூறப்பட்ட முதியவர், பற்றைக்காடு ஒன்றிலிருந்து நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இளவாலையைச் சேர்ந்த கனகசபை பொன்னம்பலம் (வயது - 86) என்ற முதியவரே சடலமாக மீட்கப்பட்டார்.
தெல்லிப்பழை - சங்குசுட்டிச் சந்திப் பகுதியில் இருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் உள்ள பற்றைக் காடு ஒன்றுக்குள் உருக்குலைந்த நிலையில் அவரது சடலம் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (வ-4,107,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலி விமானத் தள சீரமைப்பு இந்தியாவிடம் வழங்கவில்லை

## அரசு நேற்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 7

பலாலி விமான நிலையத்தை நவீனமயப்படுத்துவதற்காக இந்திய அரசுடன் உடன்படிக்கை எதுவும் கைச்சாத்திடப்படவில்லை என்று இலங்கை அரசு நேற்றுத் தெரிவித்தது.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் நிரோஸன் பெரேரா மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

"பலாலி விமான நிலையத்தைப் பிராந்திய விமான நிலையமாக மாற்றுவதாக இருந்தால், அதற்குப் பெருமளவு காணி சுவீகரிக்க வேண்டி ஏற்படும். பெருமளவு தொகை செலவிடப்பட வேண்டி ஏற்படும். எனவே, அது பற்றி இன்னும் யோசிக்கவில்லை.

எனினும், இதன் சாத்தியப்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காகவே இந்திய தூதுக் குழுவொன்று இங்கு வந்திருந்தது. அதற்கு அமைச்சரவையின் அனுமதி தேவையில்லை" – என்றார் பிரதி அமைச்சர் நிரோஸன் பெரேரா. (வ-5)

தேவை

கச்சேரியை அண்மித்த பகுதியில் இயங்கி வரும் உணவகம் ஒன்றுக்கு உணவு தயாரிப்பவர், கொத்துறொட்டி தயாரிப்பவர், உதவியாளர் தேவை.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 512 5982

வான் விற்பனைக்கு

Toyota Townace
CR27 Model
வாகனம் விற்பனைக்கு

077 757 1931/ 077 563 1415

# யாழ். செயலகத்தில் தங்க ஆபரணம் கண்டெடுப்பு

யாழ்ப்பாணம், செப். 7

கடந்த 30ஆம் திகதி யாழ். மாவட்டச் செயலக வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட தங்க ஆபரணம் மாவட்டச் செயலாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தத் தங்க ஆபரணத்தைத் தவறவிட்டோர், உரிய முறையில் அடையாளத்தை உறுதிப்படுத்தி அது தொடர்பான ஆவணங்களையும் காண்பித்து, அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் அறிவித்தார். (வ-ரி)

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி



Spoken English
Veta Fluency Diploma

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Mon, Wed, FRI 8.30 a.m. | Tue, Thu 3.30 p.m. | Tue, Thu 8.00 a.m. | Mon,Fri 11.00 a.m. | Sat, Sun 8.00 a.m. |
| Sat, Sun 10.30 a.m. | Sat, Sun 3.30 p.m. | Tue, Thu 10.00 a.m. | Mon, Fri 9.00 a.m. | Sat, Sun 10.00 a.m. |
| Sat, Sun 3.30 p.m. | | | | |

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்

DMI
COMPUTER EDUCATION

சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள்
IELTS
IELTS Life Skills (A1,B1)
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு
100%

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

DMI COMPUTER EDUCATION

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, | M.M.V. வீதி, | No. 174, கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No. 130, K. K. S வீதி, NSB வங்கி அருகில் | No.19, A9 வீதி, |
| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 |

# விபத்தில் காயமடைந்த குடும்பத்தலைவர் நேற்று உயிரிழப்பு

முல்லைத்தீவு, செப். 7

முல்லைத்தீவு தண்ணீரூற்றுப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த குடும்பத்தலைவர், சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார் என்று முள்ளியவளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

முள்ளியவளைப் பகுதியைச் சேர்ந்த அலித்தம்பி றிச்பால் (வயது – 34) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

கடந்த 2ஆம் திகதி விபத்து இடம்பெற்றது. வீதியால் சென்றவர்கள் காயமடைந்தவரை மீட்டு மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்த்தனர். மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு அவர் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,107)

# அவன்கார்ட் தலைவர் நிசங்க சேனாதிபதி நேற்றுக் கைதானார்

கொழும்பு, செப். 7

அவன் கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிசங்க சேனாதிபதி மற்றும் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ ஆகிய இருவரும் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்தது.

இருவரிடமும் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. அரசுக்கு 11.4 பில்லியன் ரூபா இழப்பை ஏற்படுத்தினர் என்று அவன் கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிசங்க சேனாதிபதி, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தர்பய ராஜபக்ச, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் தமயந்தி ஜயரத்ன, முன்னாள் கடற்படைத் தளபதிகளான சேமதிலக்க திஸாநாயக்க, ஜயந்த பெரேரா, ஜயநாத் கொலம்பகே, ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல்களான கே.பி. எகொடவல, பாலித பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்தது. (வ-4)

BIRMINGHAM CITY
University




RICS Accredited BSc (Hons)
Quantity Surveying

Apply now for September Intake 2016

Our professionally accredited Quantity Surveying course gives you a detailed understanding of the building industry and thorough preparation for a future career in surveying practice. Learning practical skills relevant to current Quantity Surveying gives you a competitive advantage in the job market. You will also benefit from outstanding employer links which will help you make the contacts needed for your future career.

Duration
01
Year

Entry Requirements
- HND or Equivalent Qualifications Accepteble to the University
- Progression Routes for NDT, NDES, C&G, HNDE

» Progression Route to RICS
BSc + APC + MRICS

For registrations or more informations
Roy - 077 074 6553

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector
www.icbt.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

எமது கொழும்பு நிறுவனத்தில் வேலைக்கு ஆள்கள் தேவை. O/L, A/L படித்த, வேலை பழக விருப்பமுள்ளவர்கள் தேவை. தெளிவான கையெழுத்தும், எலக்ரோனிக்ஸ் துறையில் நல்ல ஆர்வமும் உள்ள 25 வயதுக்கு உட்பட்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். அடிப்படைச் சம்பளம் 20,000 இல் இருந்து கிடைக்கும். உணவு, தங்குமிடம் இலவசம்.

Kumar - 077 771 0785

**SATS Tech Engineer's**

No: 51/102, wolfendhal Street, Colombo - 13

## தேவை

யாழ் நகரில் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கி வரும் ஆங்கில மருந்தகத்திற்கு தராதரமுள்ள மருந்தாளர் தேவை. Pharmacist Certificate உள்ள மருந்தாளர் விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விளம்பர இல - 5113
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## கேள்வி கோரல்

அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசாமி கோயில் பஞ்சதள இராஜ கோபுரம் அமைப்பதற்கான கேள்வி கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களை 07.09.2016 ஆம் திகதி முதல் 09.09.2016 ஆம் திகதி வரை மாலை 04.00 மணிமுதல்06.00 மணிவரை மயிலியற்புலம் கந்தசாமி கோயிலில் பெற்றுக் கொள்ளலாம்.

- இராஜகோபுர உயரம் 65 அடி 4 அங்குலம் (விவரங்கள் ஆலய இராஜகோபுர திருப்பணி சபையிடம் பெற்றுக் கொள்ளலாம்)
- விண்ணப்பதாரி குறைந்தது 5 கோபுரங்கள் அமைத்திருத்தல் வேண்டும்.
- விண்ணப்பங்கள் மூடிய தபாலுறையில் இடது பக்கத்தில் " **பஞ்ச தள இராஜகோபுரம் அமைப்பதற்கான விண்ணப்பம்** " என தலைப்பிட்டு செயலாளர், மயிலியற்புலம் கந்தசாமி கோயில் இராஜகோபுர திருப்பணிச்சபை என முகவரியிட்டு நேரடியாக செயலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.
- உள்நாட்டு கட்டடகலைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் **01.10.2016** அன்று மாலை 05 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். -

**ஆலய பரிபாலன சபை - இராஜகோபுர திருப்பணிச்சபை
மயிலியற்புலம் கந்தசாமி கோயில்
அராலி வடக்கு.**

## தொழிலாளர்கள் தேவை

**சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் தொழிலாளர்கள் பதவிக்கான விண்ணப்பங்கள் 20- 50 வயதுக்குட்பட்ட ஆண்களிடமிருந்து கோரப்படுகின்றன.**

**சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை 15.09.2016 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.**

- அதிபர் -

(ச/25194) (11,17,18)

## கூறுவிலை கோரல்

1. யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்துக்குச் சொந்தமான கட்டடத்தில் வலப்பக்கத்தில் உள்ள முதலாம் தளத்தளம் மற்றும் இரண்டாம் தளம் ஆகியவற்றுக்கு வர்ணம் பூசுதல் (உட்பக்க சுவர், சீலிங், யன்னல்)
2. யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான இல.373, பிரதான வீதி, வஸ்ரியன் சந்திக்கு அருகிலுள்ள கட்டடத்துக்கு
   1. வர்ணம் பூசுதல்
   2. மின்சார இணைப்பு வேலைகள்

மேற்படி காட்டப்பட்ட வேலைகளுக்காகப் பொருத்தமான ஒப்பந்த காரர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. இக்கட்டடங்களை **கிழமை நாள்களில் முற்பகல் 8.30 - பிற்பகல் 5.00 மணிவரையும் சனிக்கிழமைகளில் முற்பகல். 8.30 - பிற்பகல் 1.30 மணிவரையும்** பார்வையிட்டுக் கொள்ளலாம் என அறியத்தருகின்றோம். மேலும் இதற்கான தங்களின் கூறுவிலை விவரத்தினை மூடிய உறையினுள் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். அல்லது பதிவுத்தபாலில் **தலைவர், யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து), இல.127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**மேற்படி கூறுவிலைகளை சமர்ப்பிப்பதற்கான
முடிவு திகதி: 2016.09.14**

**தலைவர்,
யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம் -(வ-து)
இல.127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**


# இலங்கைப் பாடசாலைகளில் ஆபத்து மிக்க உடற்பயிற்சிகள்

உலகம் முழுவதிலும் தடை செய்யப்பட்ட உடற்பயிற்சி முறைகள் இலங்கைப் பாடசாலைகளில் பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு விளையாட்டுவிஞ்ஞானம் தொடர்பிலான நிபுணத்துவ மருத்துவர் அசாங்க விஜேரட்ன தெரிவித்தார்.

அமெரிக்க விளையாட்டு விஞ்ஞானக் கல்லூரி, பிரிட்டன் விளையாட்டு விஞ்ஞானக் கல்லூரி மற்றும் இராணுவ உடற்பயிற்சி முறையிலிருந்து நீக்கப்படவேண்டுமென 108 உடற்பயிற்சி வகைகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இந்த உடற்பயிற்சி வகைக்ள் முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

கழுத்தைச் சுற்றுதல், இடுப்பை வளைத்துக் கால் விரல்களைத் தொடுதல், முழங்காலைச் சுற்றுதல் உள்ளிட்ட 108 வகை உடற்பயிற்சிகள் தற்போது பாவனையில் இல்லை.

இந்த உடற்பயிற்சிகளினால் முதுகெலும்புக்கும் நரம்புகளுக்கும் பாதிப்பு ஏற்படுவதாக ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. இந்த ஆபத்தான உடற்பயிற்சிகளில் ஈடுபடுவதனால் பாடசாலை மாணவர்கள் உபாதைகளை எதிர்நோக்க நேரிடும் என்று மருத்துவர் அசாங்க விஜேரட்ன மேலும் தெரிவித்தார்.

(த-5)


## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

**இலங்கையில் பிரபல்யமான தொலைத்தொடர்பு நிறுவனத்துக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு சிம் அட்டை விற்பனை பிரதிநிதிகள் மற்றும் விற்பனை பிரதிநிதிகள் தேவை.**

078 500 0580

## தேவை

- தமிழ், ஆங்கில தட்டச்சு (ரைப்பிங்)
- நிழற்பிரதி (போட்டோ கொப்பி)
- பாடசாலை உபகரண விற்பனையாளர்
- சிட்டை எழுதுநர்

**தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை.**
(அண்மையில் உள்ளவர்கள்,
முன்னனுபவம் உள்ளவர்கள்
விரும்பத்தக்கது)

பிரகாந்த் போட்டோ கொப்பி சென்ரர்
திருநெல்வேலி -
076 622 4473

## விஷேட பல் வைத்திய சேவை

- **பல் முக சீராக்கல்** (Consultant Orthodontist)
- **முக சத்திரசிகிச்சை** (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- **மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)**
- **ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்**
- **நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல்** (Crown & Bridges, Implants)
- **வேர்முறை சிகிச்சை** (Root Canal Filling)
- **நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்**
- **பற்களை வெண்மையாக்குதல்** (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)


## தூதுவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிற்பகல் ஒரு மணிக்கு பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத் தாக்கல், வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று ஆகியன முடிவடைந்த பின்னர், நிலையியற்கட்டளை யின் 23/2 இன் கீழ், மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் இப்ராஹிம் அன்ஷார் பன்னாட்டு விமான நிலையத்தில் வைத்து தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளிக்கையில் பிரதமர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைத் தூதுவர் மீதான தாக்குதலை இலங்கை அரசு வன்மையாகக் கண்டிக்கிறது. அதற்காக இலங்கைக்கான மலேசியத் தூதுவர் அழைக்கப்பட்டு அரசின் அதிருப்தி வெளியிடப்பட்டது. சம்பவம் தொடர்பில் அந்தநாட்டு அரசிடம் அறிக்கை கோரப்பட்டுள்ளது.

நாம் தமிழர் கட்சி இந்தியாவின் தமிழ்நாட்டில் இயங்கிவருகிறது. இதன் கிளையொன்று மலேசியாவிலும் இயங்கிவருகின்றது. இவர்களே தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்கள் என்று தெரியவந்துள்ளது. அதைவிடுத்து முன்னர் இலங்கையில் இருந்தவர்களோ அல்லது தற்போது இலங்கையில் இருப்பவர்களோ அல்லது இலங்கைப் பெற்றோரைக் கொண்டவர்களோ இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டிருக்கவில்லை. அதில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மலேசியத் தமிழர்கள். ஒருவரும் இலங்கையர் கிடையாது .

அத்துடன், நாம் தமிழர் கட்சியின் மலேசிய கிளைக்கு அந்தநாட்டின் ஜனநாயக செயல் கட்சியுடன் தொடர்பு இருக்கின்றது. போர்க் குற்றங்களுக்காக இலங்கையைப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்வதற்காக தீர்மானமொன்றை நிறைவேற்றுவதற்காக மலேசியா, ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அங்கத்துவத்தைப் பெற்றுப் பரிந்து பேசவேண்டும் என்று அந்தக் கட்சியின் இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மலேசியாவில் புலிகள் அமைப்பின் செயற்பாடுகள் பற்றி அரசு விழிப்பாகவே இருக்கின்றது. கடந்த அரசு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்ட கே.பியுடன்தான் புலிகளின் மலேசியக் கிளைக்குத் தொடர்பிருந்தது. இவ்வாறு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களைத் தீர்ப்பதற்காகத்தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்பட்டு வருகின்றார்.

அதேவேளை, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் பிரதமர்கள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும்போது அயலுறவு அமைச்சில் தேவையான அனைத்து உதவி, உபகார ஏற்பாடுகளும் செய்துகொடுக்கப்படும். எனினும், வெளிநாடொன்றுக்கு சென்றதன் பின்னர், அங்கு வழங்கப்படக்கூடிய பாதுகாப்புக்கு சம்பந்தப்பட்ட நாட்டின் அரசே பொறுப்புக்கூறவேண்டும்.

மகிந்த ராஜபக்ச மலேசியாவில் எதிர்கொண்ட பிரச்சினை பற்றி விசாரிக் கின்றோம். அவருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்பட நாம் இடமளிக்கமாட்டோம்.மகிந்த ராஜபக்சவுக்கான பாதுகாப்புத் தொடர்பில் அரசு அக்கறை கொண்டுள்ளது. பிரச்சினை எதுவும் இருந்தால் தீர்ப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். எமது நாட்டிலிருந்து வெளிநாடொன்றுக்குச் செல்லும் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் என அனைவருக்கும் சம்பந்தப்பட்ட நாட்டின் அரசினாலேயே பாதுகாப்பு வழங்கப்படும் - என்றார் ரணில்.

(வ-4)


## SARUKAYA CONSTRUCTION (pvt) Ltd

Sarukaya Construction (pvt)Ltd is a CIDA C4 Graded Construction Company which Incorporated 7 years ago in construction of building, Water supply, irrigation and roads work.

Due to rapid expansion and growth the company is currently inviting application from dynamic result oriented personnel with the proven track record and knack for team work, to join our team of professionals in the above capacity to work on our ongoing and new construction projects.

**VACANCY**



**Assistant Quantity Surveyor**
- Should possess a HND in Quantity Surveying or NCT (QS) or Equivalent.
- At least 1 year experience in post contract administration.
- Attractive Salary and relevant allowances will be paid.

**Technical Officer**
- Should possess a HND in Civil Engineering or NCT (Civil) or Equivalent
- At least 1 year experience in construction industries.
- Attractive Salary and relevant allowances will be paid.

Please forward your CV to *vacancynsc@gmail.com* or
No 207, Navalar Road, Jaffna - (021) 221[redacted]3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் பின்தள்ளப்படுவதற்கு ஆணைக்குழு காரணமல்ல

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

உள்ளூராட்சித் தேர்தலுக்கான எல்லை நிர்ணயப் பணிகள் இந்த மாதம் நிறைவடையவுள்ளன. இருப்பினும் தேர்தல் பிற்போடப் படுவதற்கு தேர்தல்கள் ஆணைக் குழு பொறுப்பல்ல. எங்கள் மீது வீண் குற்றச்சாட்டுக்களைச் சுமத்த வேண்டாம். தேர்தலை நடத்து வதற்கு எமக்கு தற்போதைக்கு அதிகாரம் கிடையாது -

இவ்வாறு தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தேர்தல்கள் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எல்லை நிர்ணயச் சட்டத்தில் திருத் தம் செய்யப்பட்டு நாடாளுமன்ற அனுமதி கிடைத்ததன் பின்னரே தேர்தலை நடத்துவதற்கு எமக்கு அதிகாரம் கிடைக்கும். எனினும் அந்தக் கால தாமதத்திற்கு அரசி யல் ரீதியான காரணங்களை என் னால் கூற முடியாது என்று அவர் குறிப்பிட்டார். (ந-5)

# பலாலி ஆரோக்கிய மாதா ஆலய பெருநாள் 29 அன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம் பலாலியில் மீள்குடியமர்வு செய்யப்படாத பகுதியில் உள்ள புனித ஆரோக் கிய மாதா ஆலய வருடாந்த பெருநாளைக் கொண்டாடச் செல்வோர் தொண்டமானாறு வளலாய் வீதி வழியாக ஆலயத்துக்கு வர முடியும் என்று ஏற் பாட் டாளர்கள் தெரிவித்தனர்.

நாளைவியாழக்கிழமைகாலை திருப்பலி ஒப்புக்கொடுக் கப்பட்டு பூசை வழி பாடுகளும் இடம்பெறவுள் ளன.

பலாலி வடக்கு ஜே. 254 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள ஆயிரத்து 500 குடும் பங்கள் புனித ஆரோக்கிய மாதா ஆலய வருடாந்த திரு நாள் திருப்பலி ஆவணி மாதம் 29 ஆம் திகதி கொடியேற் றத்துடன் ஆரம்பிக்கப்பட்டு, புரட்டாதி மாதம் 08 ஆம் திகதி பெருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, வெகு விமரி சையாக அந்தப் பகுதி மக்கள் கொண்டாடுவர்.

போரின் பின்னர் அந்தப் பகுதி மக்கள் மீள்குடியமர் வுக்கு அனுமதிக்கப்படாததால் ஆலயத்துக்கு சென்று பூசை வழிபாடுகளை செய்வதற்கு இராணுவத்தினர் அனுமதி மறுத்தனர். 2010 ஆம் ஆண்டு ஒரு முறை அந்தப் பகுதி மக்கள் ஆலயத்துக்கு சென்று பூசை வழிபாட்டில் ஈடுபட்டனர்.

கடந்த 6 நாள்களுக்கு முன் னர் அப்பகுதி மக்கள் யாழ். ஆயர் யஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகையிடம் ஆலயத்துக்கு சென்று பெரு நாள் கொண்டாடு வதற்கு யாழ்.மாவட்ட பாதுகாப்புப் படைத் தலைமையகத்திடம் அனுமதி பெற்றுத் தருமாறு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க யாழ்.பாதுகாப்புப் படைத்தலைமையகம் பெருநாள் கொண்டாடு வதற் கான அனுமதியை நேற்று முன்தினம் வழங்கியது.

வருடாந்த பெருநாள் உற் சவத்தில் அந்தப் பகுதி மக் களை பங்கு பற்றி புனித ஆரோக்கிய மாதாவின் அரு ளைப் பெற்றுக்கொள்ளு மாறு அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது. அங்குள்ள புனித செபஸ்திரியார் ஆலயம் இரா ணுவத்தினரால் முற்றாக இடிக் கப்பட்டு ஆலயத்தில் உள்ள சொரூபங்கள் புனித ஆரோக் கிய மாதா ஆலயத்தில் வைக் கப்பட்டுள்ளாது. புனித செபஸ் திரியார் ஆலய பங்கு மக் களும் இத்திருப்பலி பூசை யில் பங்கு கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது.(ந-106)

## இடதுசாரி கட்சிகளை ஒன்றிணையுமாறு அழைப்பு

கொழும்பு, செப். 7

சிறிலங்கா சுதந்திரக் கட்சி யுடன் இடதுசாரிக் கட்சிகளை ஒன்றிணையுமாறு அந்தக் கட்சியின் பொதுச் செய லாளரும் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க அழைப்பு விடுத்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு அழைப்பு விடுத் தார்.

அடுத்த அரசை அமைக் கும் வகையில் இடதுசாரிக் கட்சிகள் இணைந்து செயற் பட வேண்டும். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெற்று தனியாக ஆட்சியமைக்கும். சிறி லங்கா சுதந்திரக் கட்சியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே தலைமை தாங்கி வழிநடத்துவார் என்று குறிப்பிட்டுள்ளார். (ந-5)

## காங்கேசன் துறைமுக அபிவிருத்தியில் தேசிய பாதுகாப்புக்கு முக்கியத்துவம்

கொழும்பு, செப். 7

காங்கேசன் துறைமுகத்தில் அபி விருத்திகளை மேற்கொள் ளும்போது பொருளாதாரத்தை கவனத்தில் எடுப்பதைப் போன்று தேசிய பாதுகாப்புக்கும் முக்கி யத்துவம் வழங்கப்படும்.

இவ்வாறு துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

துறைமுக அதிகார சபையின் அதி காரிகளை நேற்று செவ்வாய்க் கிழமை சந்தித்தபோது இந்தக் கருத்தை அமைச்சர் வெளி யிட்டுள்ளார் என்று அமைச்சரின் ஊடகப் பிரிவால் அனுப்பப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், யாழ்ப்பாணத் துக்கான கண்காணிப்பு பயணத் தின் பொழுது தாம் கண்டறிந்த கார ணிகள் தொடர்பாக இலங்கை துறைமுக அதிகார சபை அதி காரிகளிடம் அமைச்சர் தெரிவித் தார்.

வட மாகாணத்துக்கான கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் பியால் டி சில்வா, காங்கேசன்துறை துறை முகத்தின் தற்போதைய நிலை தொடர்பாக அமைச்சரிடம் குறிப் பிட்டார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் கருத்து வெளியிட்ட அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, இந்திய துணைக்கண் டம் ஊடாக இலங்கைக்குக் கடத் தப்படும் போதைப்பொருள் வர் தகத்தை நிறுத்துவதற்கான சிறந்த இடமாக காங்கேசன்துறைத் துறை முகம் விளங்குகின்றது என்று கூறினார்.

குறித்த பிரதேசத்தில் போதைப் பொருள்கள் போன்ற அநாவசிய மான பொருள்கள் நாட்டுக்குள் கொண்டு வரப்படுகின்றது என்றும், காங்கேசன்துறைத் துறைமுகத்தை அபிவிருத்திச் செய்யும் பொழுது இந்த விடயம் தொடர்பாக சிறப்பு அவதானம் செலுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

தற்சமயம் கிழக்குப் பிரதேசத்தில் துறைமுகமொன்றை நிர்மாணிப் பதற்கு இந்தியா சிறப்பு அவதானம் செலுத்தியுள்ளது என்று கூட்டு வர்த்தக முறைக்கமைய காங் கேசன்துறை துறைமுகத்தின் வர்த்தகத்தை அபிவிருத்திச் செய்ய இயலும் எனவும் அமைச்சர் அர்ஜீன ரணதுங்க தெரிவித்தார். (ந-5)

## யோகாசன வகுப்புகள்

யாழ்ப்பாணம், செப். 7

நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு இல வசமாக புதிய யோகாசன, தியான வகுப்புக்கள் ஆரம் பமாகவுள்ளன என்று இந்து சமய கலாசார அலு வல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தி யோகத்தா கே.சுதாகரன் தெரிவித்தார்.

சனி மற்றும் ஞாயிறு ஆகிய வார இறுதி நாள் களில் மூன்று பிரிவுகளாக இந்த வகுப்புக்கள் நடை பெறவுள்ளன. காலை 6 மணி முதல் 7 மணி வரை யும் மற்றும் காலை 7 மணி முதல் 8 மணி வரை யும் ஆண்கள் பிரிவும், காலை 8 மணி முதல் 9 மணி வரை பெண்கள் பிரி வும் நடைபெறவுள்ளன.

மூன்று மாதங்கள் நடை பெறவுள்ள இந்தப் பயிற்சி நெறியை பூரணமாக பூர்த்தி செய்பவர்களுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தால் சான்றிதழ்கள் வழங்கப்படும் எனவும் அவா தெரிவித்துள்ளார். (ந-ரி)

## சவுக்கடி துறைமுகத்தை விரைவில் சீரமைத்துத் தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.7

சுழிபுரம் கலைமகள் கடற் றொழிலாளர் கூட் டுறவுச் சங்கத் தொழி லாளர்களின் பயன் பாட்டில் இருந்த சவுக் கடித் துறைமுகம் வாடைக் காற்றாலும், வெள்ளத்தாலும் சேத மடைந்துள்ளது. தொழில் செய்யும் மீனவர்கள் இதனால் பெரும் சிரமங் களை எதிர்கொள்கின் றனர். துறை முகத்தை சீரமைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கலைமகள் கடற்றொழிலாளர் கூட் டுறவுச் சங்கத் தலைவர் கோரிக்கை விடுத்தார்.

கடந்த செவ்வாய்கிழமை வலி. மேற்குப் பிரதேச செயலகத்தில் பிரதேச அபிவிருத்திக் கூட்டம் நடத்தப்பட்டது. அதில் இவ்வாறு கோரிக்கை விடுக் கப்பட்டது.

இந்தத் துறைமுகம் 2012 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. குறுகிய காலத்தில் சேதமடைந்தமை தொடர்பான விவரங் களை மீனவர்கள் எமக் குத் தெரியப்படுத்தினர். இது தொடர்பில் கவனம் எடுத்துள்ளோம். செயற் றிட்ட அறிக்கை ஒன்றை சம்பந்தப்பட்டவர்க ளுக்கு அனுப்பியுள் ளோம். அனுமதியும், நிதியும் கிடைத்தவுடன் துறைமுகச் சீரமைப்பு உடனடியாக ஆரம் பிக்கப்படும் - என்று கூட்டத்தில் கலந்து கொண்ட கடற்றொழில் நீரியல்வள அதிகாரி தெரிவித்தார்.

அதிகாரிகள் மக்கள் நலன் சார்ந்த விட யத்தில் கரிசனை யோடு செயற்பட வேண்டும். அபிவிருத்தி விடயங்கள் தொடர்பில் எமக்கும் ஒரு பிரதியை அனுப்ப வேண்டும். சம்பந்தப் பட்ட அமைச்சுகளுடன் பேசுவதற்கு அது உதவி யாக இருக்கும் என்று இணைத் தலைவர்கள் அதிகாரிகளுக்குச் சுட் டிக்காட்டினர். (ந-ரி7)

தெல்லிப்பழை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
திருமஞ்சத் திருவிழா
காலம் : இன்று (07.09.2016)
(ஆவணி 22 ஆம் நாள்)
புதன்கிழமை
நேரம் : மாலை 6.00 மணி
அனைத்து அடியவர்களும் அம்பாளின் திருமஞ்சப் பெருவிழாவைத் தரிசித்து நல்லருள் பெற வேண்டுகிறோம்.

விழா உபயகாரர்
நிர்வாக சபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

75 ஆவது பிறந்தநாள் 40 ஆவது திருமண நாள்
Happy Birthday
வாழ்த்துக்கள்
Wedding Wishes

விநாயகபுரம் முழங்காவிலைச் சேர்ந்த
" சோதிட மணி, சோதிட ஆலோசகர் "
திரு . திருமதி சு. ஞானசேகரம் கமலாதேவி
இன்று (07.09.2016) புதன்கிழமை
75 ஆவது பிறந்தநாளையும்
40 ஆவது திருமண நாளையும்
கொண்டாடும் தம்பதியினரை
நூற்றாண்டுகள் வாழ்கவென
மனதார வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
மகன், மகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சிவா மொபைல்ஸ் முழங்காவில்
சிவஸ்ரீ செ.தெட்சணாமூர்த்தி தம்பதியினர்,
சிவஸ்ரீ தேவபிரசன்னா குருக்கள் தம்பதியினர்,
பிரம்மஸ்ரீ தெட்சணா - சரன்ராஜ்சர்மா தம்பதியினர்,
தனுஷ்கா, திருஷிகா
மயூராபதி சோதிட நிலையம்
இல.6 "மயூராபதி"
சிவன்கோயில் வீதி, சாவகச்சேரி.
(தே.4100)
(18.15.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவர்...

200 தற்கொலைக் குண்டுதாரிகளை வைத்திருந்தார். பெரும்பாலான தற்கொலைக் குண்டுதாரிகள் பெண்களாகவே இருந்தனர். தமது தலைமையின் கட்டளைக்கு பணிந்து தமது உயிரைக் கொடுக்கவும் அவர்கள் தயாராக இருந்தனர். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அவர் பெண் போராளிகளை தவறாகப் பயன்படுத்தியமைக்கு எந்தச் சான்றுமே கிடையாது.

பிரபாகரன் ஒரு அன்பான குடும்ப மனிதராக இருந்தார். பிரபாகரனினதும், அவரது குடும்பத்தினரதும், விடுதலைப் புலிகளின் நிகழ்வுகளினதும், 10 ஆயிரம் ஒளிப்படங்களை இராணுவத்தினர் கைப்பற்றினர். ஆனால் ஒரு படத்தில் கூட மதுபானக் குவளையுடன் பிரபாகரனைக் காண முடியவில்லை. அவர் ஒரு ஒழுக்கமான தலைவராக இருந்தார்.

ஷரியா சட்டத்தை விடவும் மேலான சட்டத்தை பேணுபவராக அவர் இருந்தார். நீங்கள் திருடியிருந்தால் ஷரியா சட்டத்தின்படி கையைத் தான் இழக்க நேரிடும். ஆனால் பிரபாகரனின் சட்டத்தின் கீழ் வாழ்க்கையை இழப்பீர்கள். அவர் ஒரு இந்துவாக இருந்தாலும், கடவுளை நம்பவில்லை. கடவுள் சக்திவாய்ந்த நாடுகளில் தான் இருக்கிறார் என்று அவர் ஒருமுறை கூறியிருந்தார். அவர் ஒரு வித்தியாசமான தலைவர். பலரும், கற்க வேண்டிய பல நல்ல பண்புகள் அவரிடம் இருந்தன. பிரபாகரன் ஒரு உறுதியான முடிவை எடுப்பவராக இருந்தார். எடுக்கும் முடிவு சரியோ, தவறோ அதையிட்டு கவலைப்படமாட்டார். அந்த முடிவை நடைமுறைப்படுத்துவார்.

ராஜீவ்காந்தி கொலை அவரது விவேகமற்ற ஒரு முடிவுகளில் ஒன்று. ராஜீவ்காந்தியைக் கொல்வதன் மூலம் இந்தியா முழுமையாகவும், உலகமும் தனக்கு எதிராகத் திரும்பும் என்று அவருக்கு தெரியும். ஆனால் விடுதலைப் புலிகளை அழிக்க இலங்கையில் இந்திய அமைதிப்படையை நிறுத்தியதற்குப் பழிவாங்க அவர் விரும்பினார். எனவே அவரைக் கொலை செய்தார். ஏனெனில் அவர் இரக்கமற்றவர்.

அவரிடம் பொறுமை நிறையவே இருந்தது. தனது பயணங்களுக்கு அவர் அவசரப்படவில்லை. தாக்குதலுக்கு சரியான தருணம் வரும் வரை காத்திருந்தார். பிரபாகரனின் தலைமைத்துவம், இறுதிநிமிடச் சமர் வரையில் மிகத்திறமையானதாகவே இருந்தது. ஏனைய தளபதிகளால் பானு, ரட்ணம் மாஸ்டர், சூசை ஆகியோரும் மிகச்சிறந்த தலைமைத்துவத்தை வழங்கினர்.

இறுதி சில நாட்களில் சூசையின் கட்டளைகளினால் யாரும் திரும்பிச்செல்ல விரும்பவில்லை. இந்த தளபதிகளின் கீழ் புலிகளின் கொமாண்டோக்கள், மிகநன்றாகவே செயற்பட்டனர். வேவுபார்க்கும் போராளிகள் தொடக்கம், தற்கொலைப் போராளிகளுக்கான வெடி பொருள் நிபுணர்கள், ஆட்டிலறி குழுக்கள், ஆட்டிலறி அவதானிப்பாளர்கள், எல்லோருமே, ஆற்றலுள்ள போராளிகளாகவே இருந்தனர். இறுதிச்சமரின் கடைசி சில மணித்தியாலங்கள் வரையில், விடுதலைப் புலிகளின் தலைமை கடுமையாகவே போரிட்டது-என்றார். (வ-5)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### இராசலிங்கம் மகேஸ்வரி

தோற்றம் 28.07.1932 — மறைவு 08.08.2016

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்கில் பங்கு பற்றி உதவிகள் புரிந்தவர்களுக்கும் அனைத்து வழிகளிலும் உறுதுணை புரிந்தவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன்

இன்று (07.09.2016) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மாவடிலேன்,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
(J 4380)
(14,17,18)
குடும்பத்தினர்.
077 134 5908

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
### மதிவதனகாந்தி [காந்தி] சிவனேஸ்வரன்

தோற்றம் 05.06.1964
மறைவு 08.08.2016
திதி: ஷஷ்டி

மாதம் ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எங்கள் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

34/7, வளாகவீதி,
திருநெல்வேலி.
(J 4381)
(14,17,18)
உங்கள் நினைவில்
சகோதரர்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 11.03.1931 — மறைவு 09.08.2016

### அமரர் இ.கதிரமலைநாதன்

கடந்த 09.08.2016 இறைபதமடைந்த அமரர் இ.கதிரமலைநாதன் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் ஏழாலை தெற்கு சூராவத்தையில் உள்ள அவரது இல்லத்தில் நாளை(08.09.2016) வியாழக்கிழமை நடைபெற உள்ளது. அந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு தயவன்புடன் வேண்டுகின்றோம். அவரது மறைவு அறிந்து வந்து கலந்து கொண்ட அன்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஏழாலை தெற்கு,
சூராவத்தை.
குடும்பத்தினர்.
திருமதி. நவமலர் கதிரமலைநாதன்
(மனைவி)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
29.07.1954



ஆண்டவன் அடியில்
20.08.2015

### திருமதி கமலாதேவி சிவலிங்கம்

திதி: சஷ்டி

ஆண்டொன்று மறைந்ததம்மா நீங்கள்
எம்மைப் பிரிந்து நாள்தோறும் தவிக்கின்றோம்
உங்களை இழந்து, வாழ வைத்த தெய்வம்
எங்கள் அன்பு அம்மா சென்ற தெங்கே!
தினம் தோறும் தேடுகின்றோம் காலமெல்லாம்
வாழ்வோம் உங்கள் நினைவோடு
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (07.09.2016) புதன்கிழமை அவரது நினைவு அஞ்சலியில் கலந்துகொள்வதுடன் அன்று நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிருவத்தம்பை
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.
நீங்கா... குடும்பத்தினர்.

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாய் மடியில் 29.10.1980 — தாய் மண்ணில் 07.09.2006

### நவரத்தினம் கருணைதாசன் (கரன்)

(உரிமையாளர் - நவம்ஸ் தொலைத்தொடர்பகம் - சுழிபுரம்)

நண்பா கருணைதாசா
பத்தாண்டுகள் பறந்ததடா உன் பாசமுகம் பார்த்து
எம்மைப் பரிதவிக்க விட்டு
பறித்துச் சென்றானே கொடுங்காலன்
மீளாத்துயில் கொண்டாய் - நீ
நண்பனே உன் நட்பை என்றும் மறக்க மாட்டோம்

[illegible]ணா நிறுவனத்தினர்,
சுழிபுரம்.
(J 4375)
(14,17,18)
நவம்ஸ் நண்பர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண சபையால் 371 பேருக்கு நியமனங்கள்

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.7
வடக்கு மாகாண சபை உருவாக்கத்தின் பின்னர் இதுவரை 371பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன. அவர்களில் 71 பேர் நிரந்தரமாக்கப்பட்டனர்.
இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
வடக்கு மாகாண சபையின் 61ஆவது அமர்வுநேற்று அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானத்தின் தலைமையில் நடைபெற்றது. அதில் உறுப்பினர் சு.சுகிர்தனின் வாய்மூல கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
வடமாகாணசபைபொறுப்பேற்ற பின்னர் இதுவரை ஒவ்வொரு அமைச்சுக்கள் மற்றும் அமைச்சுக்களின் கீழ் உள்ள திணைக்களங்களில் ஒப்பந்த, தற்காலிக அடிப்படையில் மற் றும் சேவை நீடிப்பில் எத்தனை பணியாளர்கள் உள்வாங்கப்பட்டனர்?.

> வடக்கு மாகாண சபை உருவாக்கத்தின் பின்னர் வடமாகாண அமைச்சுக்களின் கீழ் உள்ள திணைக்களங்களில் 371பேர் நியமிக்கப்பட்டனர். அவர்களில் 71பேர் நிரந்தரமாக்கப்பட்டனர். 71 பேருக்கு 2014ம் ஆண்டின் ஒக்டோபர் மாத சுற்று நிருபத்திற்கமையவே நிரந்தரம் வழங்கப்பட்டது.

அவர்களில் எத்தனை பேர் நிரந்தரமாக்கப்பட்டனர்?. எந்த அடிப்படையில் உள் வாங்கப்பட்டனர்? என அவர் கேள்வி எழுப்பினார்.
முதலமைச்சர் தெரிவித்ததாவது-
வடக்கு மாகாண சபை உருவாக்கத்தின் பின்னர் வடமாகாண அமைச் சுக்களின் கீழ் உள்ள திணைக்களங்களில் 371பேர் நியமிக்கப்பட்ட னர். அவர்களில் 71 பேர் நிரந்தரமாக்கப்பட்டனர். 71 பேருக்கு 2014ம் ஆண்டின் ஒக்டோபர் மாத சுற்று நிருபத்திற்கமையவே நிரந்தரம் வழங்கப்பட்டது.-என்றார்.
371 பேர் என்ற எண்ணிக்கை முதலமைச்சரின் அமைச்சு களுக்கு உட்பட்டதா அல்லது 5 அமைச்சுக்களுக்கும் உட்பட்டதா என்ற கேள்வியும் எழுப்பப்பட்டது. அதுகுறித்துப் பரீட்சித்து அவைக்குத் தெரியப்படுத்தப்படும் என்று பதிலளிக்கப்பட்டது.
(ற-10)

# வடக்குத் திணைக்களங்களில் நடந்தது ஊழல் என கூறவில்லை

## வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் விளக்கம்

யாழ்ப்பாணம், செப்.7
வடக்கு மாகாணத்துக்குட்பட்ட திணைக்களங்களில் 678 மில்லியன் ரூபாவுக்கான கணக்குகளில் இடம்பெற்றது ஊழல் என்று கூறவில்லை.
இவ்வாறு வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.
வடக்கு மாகாண சபையின் 61ஆவது அமர்வு கைதடியில் உள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.
கடந்த அமர்வில் எதிர்க்கட்சித் தலைவர் கணக்காய்வு தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோது வடக்கு மாகாணத்துக்குட்பட்ட திணைக்களங்களில் 674 மில்லியன் ரூபா ஊழல் இடம் பெற்றது என்று தெரிவித்தார்.
அவ்வாறு கன்சாட்டில் பதிவதானால் எதிர்க்கட்சித் தலைவர் ஆதாரங்களைச் சபையில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், அல்லது குறித்த வசனம் நீக்கப்படும் என்றும் அவைத் தலைவர் தெரிவித்தார்.
அதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர்-
ஊழல் என்ற வார்த்தை பிரயோகித்தமை ஞாபகத்தில் இல்லை. மீண்டும் அதைப் பார்க்க வேண்டும். அதிகாரிகள் ஆவணங்களைச் சமர்ப்பிக்காது விடில் ஊழலுக்கே வழி வகுக்கும் என்பதையே நான் சுட்டிக்காட்டினேன்.- என்றார்.
கணக்காய்வு அறிக்கையைப் பொறுத்தவரையில் உரிய அதிகாரிகளிடம் விளக்கம் கோரப்பட்டு அதற்குப் பதலளிக்காத பின்னரே அறிக்கையில் இடம் பெறும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.
அங்கு கருத்துத் தெரிவித்த மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் அரச ஊழியர்களைப் பொதுப்பட குற்றஞ்சாட்டும் போது அவர்கள் மன உளைச் சலுக்கு உள்ளாவார்கள் என்று குறிப்பிட்டார்.
ஊழல் என்ற சொல்லுக்குப் பதிலாகத் தவறு என்று பயன்படுத்தலாம் என்று முதலமைச்சர் ஆலோசனை கூறினார்.
அதிகாரிகள் பலர் தமக்கு வழங்கப்பட்ட மேலதிக வாகனங்களைப் பயன்படுத்திக் கொண்டு உத்தியோகபூர்வ வாகனங்களை மனைவியின் பயன்பாட்டுக்கு விடுகின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் மீண்டும் குற்றஞ்சாட்டினார்.
ஒரு சிலர் செய்யும் தவறுக்காக அனைத்து அதிகாரிகளையும் குற்றஞ்சாட்ட முடியாது என்று அவைத் தலைவர் குறுக்கிட்டுக் கூறினார். எதிர்க்கட்சித் தலைவர் அதை ஏற்றுக் கொண்டார்.
(ற-10)

## தெருவெளி நாடகம்

'எங்கே போகின்றோம்' எனும் தெருவெளி நாடகம் இன்று புதன்கிழமை வேலணை பிரதேச செயலக முன்றிலிலும் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலத்திலும் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.
கியூடெக் கரித்தாஸ் சர்வமத சகவாழ்வு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புகைத்தல், குடி, போதைவஸ்து பாவனை தவிர்ப்பும் பெற்றோர் பொறுப்புக்களும் மக்களிடத்தில் சென்றடைய தெருவெளி நாடகம் மூலம் யாழ் பிரதேசம் எங்கும் நடத்தப்படுகின்றது.
இதன் ஒரு அம்சமாகவே இந்த நாடகம் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.
இந்தத் தெருவெளி நாடகம் அல்லைப்பிட்டி மண்டைதீவு, மாதகல், மணியந்தோட்டம், உதயபுரம், பூம்புகாரிலும், நல்லூர் திருவிழா காலத்திலும், குருநகர் தொடர்மாடி முன்றிலிலும், பெற்றோர் பொறுப்புணர்வும் மது போதை பாவனை தவிர்ப்பிலும் மக்கள் பங்களிப்புடன் விழிப்பூட்ட யாழ்ப்பாணம், வேலணை பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் இந்த தெருவெளி நாடகம் நடத்தப்பட்டு வருகின்றது.
(ற-ரி)

# கசிப்பு உற்பத்தி செய்தவருக்கு இரண்டு மாதக் கட்டாயச் சிறை

கிளிநொச்சி, செப். 7
கசிப்பு வழக்கு ஒன்றில் நீதிமன்றால் ஏற்கனவே தண்டனைக்கு உட்படுத்தப்பட்ட ஒருவர் மீண்டும் கசிப்பு தொடர்பான வழக்கொன்றில் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டார். அவருக்கு இரண்டு மாத கட்டாய சிறைதண்டனை வழங்கியது கிளிநொச்சி மாவட்ட நீதிமன்று.
கிளிநொச்சி தருமபுரம் புளியம் பொக்கணை காட்டுப்பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டபோது தருமபுரம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இரு சந்தேக நபர்கள் விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். அவர்களில் ஒருவருக்கே மன்று சிறைத் தண்டனை விதித்தது.
கடந்த இரு தினங்களுக்கு முன்னர் புளியம்பொக்கணை காட்டுப்பகுதியில் கிளிநொச்சி தருமபுரம் பொலிஸார் மேற்கொண்ட சுற்றி வளைப்பில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள் என்று தெரிவித்து இருவர் கைது செய்யப்பட்டனர்.
அவர்களிடமிருந்து 28 போத்தல் கசிப்பு மற்றும் 271போத்தல் கோடாவும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.
பொலிஸாரின் விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள், மற்றும் மீட்கப்பட்ட பொருள்கள் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டன. நீதிமன்ற விசாரணைகளின் போது சந்தேக நபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் காரணத்தால் முதலாவது சந்தேக நபருக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. கட்டத்தவறின் 4 மாதகாலம் சமூகசேவையில் ஈடுபடுமாறு உத்தரவிடப்பட்டது.
இரண்டாவது சந்தேக நபர் ஏற்கனவே நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட நிலையில் அவருக்கு ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறும், இரண்டு மாதம் கட்டாய சிறைத் தண்டனையும் தண்டம் கட்டத் தவறின் 15 மாதம் சமூக சேவையில் ஈடுபடுமாறும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ ஆனந்தராஜா உத்தரவிட்டார்.
(ற-21,ரி3)

# ஆளுநர் அலுவலகம் சென்றதால் ஆளுநரின் பக்கம் என்றில்லை

## வடக்கு உறுப்பினர் அஸ்மின் கூறுகிறார்

யாழ்ப்பாணம், செப் 7
ஐ.நா. பொதுச் செயலாளரை நாம் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு பல தரப்பினரிடமும் கேட்டோம். ஆளுநர் அலுவலகத்தில் சந்திப்பதற்கான நேரம் ஒதுக்கித் தரப்பட்டது. இதுவே நடந்தது. நாம் ஆளுநர் பக்கம் அல்ல.
- இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் தெரிவித்தார்.
வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்த கருத்துக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
ஐ.நா. பொதுச் செயலர் யாழ்ப்பாணத்திற்கு வந்த போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் அவரை ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்தார். அஸ்மின் ஆளுநர் பக்கமா? அல்லது எமது பக்கமா? என்பதை தெளிவுபடுத்த வேண் டும் - என்று சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.
அஸ்மின் தெரிவித்ததாவது-
ஐ.நா. பொதுச் செயலரை நாம் சந்தித்து எமது விடயம் தொடர்பில் மனுக் கையளிப்பதற்கு நேரம் கோரியிருந்தோம். அயலுறவுத்துறை அமைச்சுடன் இணைந்தே நிகழ்ச்சி நிரல் தீர்மானிக்கப்படுவதால் அவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு பதில் வழங்கப்பட்டது. முஸ்லிம்கள் சார்பையும் புறந்தள்ள முடியாது எனவும் ஏற்றுக் கொண்டனர்.
நூலகத்தில் இடம்பெறும் கூட்டமைப்பின் சந்திப்பின்போது அங்கு சென்று மனுக் கொடுக்க முயன்ற வேளையில் அங்கு வைத்து வழங்க முடியாது எனவும் ஆளுநர் செயலகத்தில் மனுவை கையளிக்க முடியும் என்று தெரிவித்தனர். இதன் பிரகாரமே ஆளுநர் அலுவலகத்துக்குச் சென்று எமது மனுவை கையளித்தோம். இது பிரிவினை கிடையாது.
நூலகத்தில் கூட்டமைப்பின் தலைவர்களான சம்பந்தன், மாவை.சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், செல்வம்.அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், க.சுரேஸ் பிரேமச்சந்திரன் உள்ளிட்டவர்களை சந்தித்த போதும் அதனுடன் இல்லாமல் முதலமைச்சர் சார்பில் தனிமையில் சந்தித்ததே தமிழர்கள் இரண்டுபட்ட நிலையாகவுள்ளது - என்றார்.
(ற-5-10)

## சேதமாக்கப்பட்ட குவிவாடிகள் பொருத்தப்படும்

யாழ். நகருக்குள் வீதிகளின் சந்திகளில் போக்குவரத்தை இலகுவாக்க அமைக்கப்பட்டிருந்த இரு குவிவாடிகள் சேதமாக்கப்பட்டன. அவை மாற்றி அமைக்கப்படும்.
- இவ்வாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார்.
கே.கே.எஸ். வீதியில் இந்துக் கல்லூரிச் சந்தி, நாவலர் வீதியில் பாப்பையா கடைச் சந்தி ஆகிய இடங்களில் பொருத்தப்பட்டிருந்த குவிவாடிகளே சேதமாக்கப்பட்டன.
(ற-17)

# கொடிகாமத்தில் சனியன்று டெங்குத் தடுப்பு நடவடிக்கை

தென்மராட்சி, செப்.7
கொடிகாமம் நகரப் பகுதியில் எதிர்வரும் சனிக்கிழமை டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. 52ஆவது படையணியின் ஏற்பாட்டில் இது முன்னெடுக்கப்படவுள்ளது.
கொடிகாமம் சந்தை, நகரப் பகுதி வர்த்தக நிலையங்களில் டெங்குஉற்பத்தியாகக்கூடிய இடங்களை இனங்கண்டு அவற்றைக் கட்டுப்படுத்தும் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
சாவகச்சேரி பிரதேச சபை, தென்மராட்சி பிரதேச செயலகம், சாவகச்சேரி சுகாதார திணைக்களம், பிரதேச பொது அமைப்புக்கள் இதில் இணைந்து கொண்டுள்ளன.
வியாபாரிகள், பொதுமக்களுக்கு சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தால் விழிப்புணர்வுக் கருத்துரைகள் வழங்கப்படும்.
வீடுகளில் சேகரிக்கப்பட்ட கழிவுப் பொருள்களைப் பைகளில் இட்டு வீதியோரங்களில் வைக்க வேண்டும் என்று பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
கொழும்பு டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தென்மராட்சிப் பிரதேசம் டெங்குத் தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்று தெரிவிக்கப்பட்டது.
(ற-9)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வருடாந்த மகோற்சவம்

யாழ்ப்பாணம், செப். 7
ஸ்ரீ வரத விக்ன விநாயகர் (சம்பந்தப் பிள்ளையார்) ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா இன்று புதன் கிழமை மு.ப. 10. 30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடாந்து பத்து நாள்கள் நடைபெறவுள்ளன என்று ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்தனர்.
எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.45 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.
உற்சவ காலங்களில் மு.ப. 11 மணிக்கு மற்றும் இரவு 7 மணிக்கு வசந்தமண்டப் பூசைகள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி)

## மின் தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், செப்.07
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று 7ஆம் திகதி புதன் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரையும் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் மறவன் புலோ கேரதீவு வீதி, கோகிலாக் கண்டி ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்படும்.
வவுனியாப் பிரதேசத்தில் சாம்பல்தோட்டம் கிராமம், தோணிக்கல் சிவன்கோயில் பிரதேசம், குட்செட் வீதி, குருமன் காடு சந்தியிலிருந்து குருமன் காடு பிள்ளையார் கோயில் வரையான பிரதேசங்களில் மின் தடைப்படும். (ற-ரி)

# போரால் பாதிக்கப்பட்ட கிணறுகளை சீர் செய்க

## ஒட்டுசுட்டான் பிரதேச விவசாயிகள் கோரிக்கை



முல்லைத்தீவு, செப்.7
முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் போரால் அழிவடைந்துள்ள கிணறுகளைச் சீர் செய்து தர வேண்டும்.
இவ்வாறு அந்தப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.
ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் வாழ்வோரில் பெரும்பாலானோரின் வாழ்வாதாரத் தொழிலாக விளங்குவது விவசாயமே. போர் இடம்பெற்றபோது ஏவுகணைகளாலும், இராணுவ நடவடிக்கையாலும் பலரின் விவசாயக் கிணறுகளும், குடி தண்ணீர் கிணறுகளும் சிதைவடைந்துள்ளன. சில விவசாயக் கிணறுகள் சீரமைக்கக் கூடிய நிலையிலும், தூர்வாரி உபயோகிக்கக் கூடிய நிலையிலும் உள்ளன. அவற்றைச் செய்வதற்கு வசதியற்ற நிலையில் விவசாயிகள் உள்ளனர்.
தற்போது புதிய விவசாயக் கிணறுகளையும், குடி தண்ணீர் கிணறுகளையும் உருவாக்கும் திட்டம் எமது மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. பகுதியளவில் பழுதடைந்துள்ள எமது கிணறுகளையும் சீரமைத்துத் தர வேண்டும் என்று அதிகாரிகளிடம் கோருகின்றோம். - என்று விவசாயிகள் குறிப்பிட்டனர்.
போரில் பாதிப்புக்குள்ளான கிணறுகளைச் சீரமைப்பதற்கு எமக்கு இதுவரை நிதி கிடைக்கவில்லை. புதிதாக கிணறுகளை அமைப்பதற்கே முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பிரதேச ரீதியாக வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.- என்று முல்லைத்தீவு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ஜி.வில்வராஜ் தெரிவித்தார். (ற-ரி7,102)

## சூழ்நிலைகளில் மனோதிடம் சிறப்பு நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், செப். 7
சூழ்நிலைகளில் மனோதிடம் சிறப்பு நிகழ்ச்சி இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு சாவகச்சேரி கந்தையா வீதியில் நடைபெறவுள்ளது என்று பிரம்ம குமாரிகள் நிலையம் தெரிவித்தது.
சென்னை பல்கலைக்கழகத்தில் இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் பொறியியற்றுறையில் பட்டப் படிப்பை நிறைவு செய்து 17 வருட காலமாக ஆன்மிக சமூக சேவையில் முழுநேர கடமையாற்றும் மூத்த தியான ஆசிரியர் ஜான்சிராணி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.
தென்னிந்தியாவில் இருந்து வந்துள்ள இவர் பிரம்ம குமாரிகள் உலக ஆன்மிகப் பல்கலைக்கழகத்தின் தமிழக பிராந்திய தலைமையகத்தைச் சோந்தவர் என அந்த நிலையம் தெரிவித்துள்ளது. (ற-ரி)

## சுனாமி ஒத்திகை

யாழ்ப்பாணம், செப்.7
இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் மற்றும் இந்து சமுத்திர சுனாமி எச்சரிக்கை முறைமை என்பவை இணைந்து பிராந்திய மற்றும் தேசிய ரீதியான சுனாமி முன்னெச்சரிக்கை ஒத்திகையை இன்று முற்பகல் நடத்தவுள்ளன. யாழ். மாவட்டத்தில் மருதங்கேணி பிரதேச செயலக பிரிவில் ஆழியவளை மற்றும் உடுத்துறைப் பகுதிகளில் ஒத்திகை நடத்தப்படும்.
இலங்கையின் 14 கரையோர மாவட்டங்களில் சுனாமியால் பாதிப்புக்குள்ளாக கூடிய கிராமங்களில் ஒத்திகை நடத்தப்படவுள்ளது.
இது ஓர் ஒத்திகைச் செயற்பாடு என்பதால் பொதுமக்கள் யாரும் பதற்றம் அடையத் தேவையில்லை என மாவட்ட செயலாளர் அறிவித்துள்ளார். (ற-ரி)

## தொழில் முயற்சியாளர் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

அச்சுவேலி, செப்.7
யாழ்ப்பாணம் தொழில் துறை மன்றமும் தேசிய தொழில் முயற்சி அதிகார சபையும் இணைந்து வழங்கும் வடக்கு மாகாண தொழில் முயற்சியாளர் விருது 2015 க்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விருதுக்கான விண்ணப்ப இறுதித் தினம் எதிர்வரும் 23ஆம் திகதி என அறிவிக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழில்துறை மன்றமும், கைத் தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய தொழில் முயற்சி அதிகார சபையும் இணைந்து வருடாந்தம் வடக்கு மாகாணத் தொழில் முயற்சியாளர் விருதை வழங்குகின்றன.
விருதுக்கு வடக்கு மாகாணத்தில் உள்ள மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த தொழில் முயற்சியாளர்கள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.
தொழில் முயற்சியாளர் விருதுகள் உற்பத்தித்துறை, விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்வளங்கள், விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத்துறை சேவைத்துறை என்ற நான்கு பிரிவுகளில் பெரியது, சிறியது, நடுத்தரம், நுண்ணியது என்ற நான்கு வகைப்பாடுகளின் கீழ் வழங்கப்படவுள்ளன.
விருதுகள் நவம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் விழாவில் வைத்து வழங்கப் படவுள்ளன விருது தொடர்பான மேலதிக விவரங்களுக்கு 021222 6609, 024 222 4313, 0773949598 தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-1)

# தயா மாஸ்ரருக்கு எதிரான வழக்கு 28ஆம் திகதிக்கு பின்தள்ளப்பட்டது

## அரச சட்டத்தரணியின் கோரிக்கையால்



வவுனியா, செப். 7
பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட தயா மாஸ்ரர் என்றழைக்கப்படும் வேலாயுதம் தயாநிதிக்கு எதிரான வழக்கு எதிர்வரும் 28ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.
வவுனியா மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டு பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் கடந்த மாதம் தயா மாஸ்ரர் கைது செய்யப்பட்டார். பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட அவர் நேற்று வவுனியா மேல்நீதிமன்றில் விசாரணைக்காக முன்னிலையானார்.
நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழான அனைத்து வழக்குகளின் கோவைகளும் சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவை இன்னமும் திருப்பி அனுப்பப்படாததால் வழக்கை வேறு திகதிக்கு ஒத்தி வைக்க வேண்டும் - என்று அரச சட்டத்தரணி நீதிபதியிடம் கேட்டுக் கொண்டார். வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.
தயா மாஸ்ரர் சார்பில் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையானார்.
பயங்கரவாதம் மற்றும் குறிப்பிட்டு பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு எதிரான சட்ட நடவடிக்கை எனத் தெரிவித்து 2006 ஆம் ஆண்டு டிசெம்பர் 6ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விதிமுறைகளில் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு அமைய தயா மாஸ்ரர் என்று அழைக்கப்படும் வேலாயுதம் தயாநிதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
பயங்கரவாதத் தடைச் சட்டம் குறித்த விதிமுறைகள் வெளியிடப்பட்டபோதே அவை மனித உரிமைகளுக்கு மாறானவை, சாதாரண நீதிக்கு மாறானவை என்று பல அமைப்புகளும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் எதிர்ப்பு வெளியிட்டன. இந்த விதிமுறைகளைப் பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்ய மாட்டோம் என விதி முறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்களுக்கும், விசேடமாக ஊடகங்களுக்கும் அப்போதைய அரசு உறுதியளித்தது.
இத்தகைய விதிமுறைகளின் கீழ் தயாமாஸ்ரருக்கு எதிராக இந்த வழக்கில் தொடுக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு சட்டவலு அற்றது என முதல் நிலை நீதிமன் றத்தில் முன்வைத்து வாதிடுவதற்காகவே நான் நீதிமன்றத்தில் முன்னிலையானேன்.
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளை மீளப் பெற்று அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கின்றோம். புதிதாக வழக்குகள் பதிவு செய்வதற்கு எதிராக நாங்கள் முறைப்பாடுகளைப் பதிவு செய்திருக்கின்றோம்.
அரச சட்டத்தரணி கால அவகாசம் கேட்டதால் வழக்கு விசாரணை 28 ஆம் திகதிக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இப்படியான அடிப்படை சட்ட ஆட்சேபனையை எழுப்புகிறேன் என திறந்த நீதிமன்றத்தில் நான் தெரிவித்துள்ளேன். - என்று அவர் தெரிவித்தார்.(ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச, தனியார் பஸ்களுக்கான

# இணைந்த நேர அட்டவணை இன்று முதல் நடைமுறையில்

யாழ்ப்பாணம், செப்.7

அரச, தனியார் பஸ்களுக்கான இணைந்த நேர அட்டணைப் போக்குவரத்துச் சேவை கடும் நிபந்தனைகளுடன் இன்று முதல் வடக்கில் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. இன்றிலிருந்து ஒருமாதம் பரீட்சார்த்த ரீதியில் இது நடைமுறையாகும்.

போக்குவரத்துச் சேவையைக் கண்காணிப்பதற்கு மாகாணத்தின் முக்கிய 21 இடங்களில் இலங்கைப் போக்குவரத்துச் சபை, தனியார் பஸ் உரிமையாளர் சங்கம், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு என்பவற்றின் நேரக் கண்காணிப்பாளர்கள் மற்றும் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

சட்டத்தை மீறும் சாரதி, நடத்துநர், உரிமையாளர்களுக்கு எதிராக பிரிவு 43இன் கீழ் 10 ஆயிரம் ரூபாவுக்குக் குறையாத தண்டம் அல்லது இரு ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தித் திணைக் களத்தின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் இது தொடர்பில் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன.



அதில் கலந்துகொண்ட வடக்கு போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்ததாவது-

அண்மையில் வீதி விபத்தினால் யாழ். மாவட்டத்தில் ஒரு வைத்தியரை இழந்துள்ளோம். இழப்புக்களுக்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. கண்மூடித்தனமான போட்டித்தன்மை, ஒரு சில சாரதிகளின் அசமந்தப்போக்கு, முந்திச் செல்ல வேண்டுமென்ற நோக்கில் வீதி ஒழுங்கு விதிகளை பின்பற்றாமை, ஒருங் கிணைந்த நேர அட்டவணை ஒன்று இல்லாமை என்பன முக்கிய காரணிகளாகக் காணப்படுகின்றன.

வடமாகணத்தில் இணைந்த நேர அட்டவணை இன்று முதல் நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒரு மாத காலத்திற்கு பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்தப்படும் இந்தக் காலப்பகுதியில் பல்வேறு கள ஆய்வுகள் மற்றும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும். ஒருமாத காலப் பகுதியின் பின்னர் சம்பந்தப்பட்ட சேவை வழங்குநர்களை உள்ளடக்கியதான சிறப்புக் கலந் துரையாடல் மேற்கொள்ளப்பட்டு சாதக பாதக நிலைகள் கருத்தில் எடுக்கப்பட்டு புதியதும் இறுதியானதுமான இணைந்த நேர அட்டவணை தீர்மானிக்கப்படும்.

சேவை வழங்குநர்கள் இலாபத்தை மட்டும் பாராமல் போக்குவரத்து சேவையில் பொதுமக்களின் பாதுகாப்பையும் அவர்களது சௌகரியத்தையும் முக்கியமாக கருத்தில் எடுக்க வேண்டும். வழி அனுமதிப் பத்திரத்தின் நிபந்தனைகள் மற்றும் கடப்பாடுகளை சாரதி, நடத்துநர் மற்றும் உரிமையாளர்கள் சரியாக பின்பற்றுதல் அவர்களது முதன்மையான கடமை. அவை மீறப் படும்போது உரிமையாளர்கள் தமது அனுமதிப் பத்திரத்தை இழக்க நேரிடும். இலங்கைப் போக்குவரத்துச் சபையினராக இருப்பின் அந்த வீதியால் செல்வதற்கு அனுமதி மறுக்கப்படும் - என்றார்.

(ற-5,21)

## கணினிக் கருத்தரங்கு

வவுனியா, செப். 7

கணினிக் கல்விக் கருத்தரங்கு விரிவுரையும் வினாக்களுக்கு விடையளித்தலும், கற்றல் கற்பித்தலில் கணினியின் பங்கு என்ற தொனிப் பொருளில் கணினிக் கல்வி கருத்தரங்கும் வவுனியாவில் இடம்பெற உள்ளன.

வவுனியா தமிழ்ச்சங்கத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மு.பகல் 10 மணிக்கு வவுனியா வைரவர் கோவில் வீதியில் உள்ள என்சொப்ட் கல்வி நிலைய மண்டபத்தில் கருத் தரங்கு நடைபெறும்.

நிகழ்வில் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் தமிழருவி த. சிவகுமார், லண்டன் பல்கலைக் கழக கணினித் துறை விரிவுரையாளர் சிவாப்பிள்ளை கோல்ட்ஸ்மித், யாழ். பல்கலைக் கழக வவுனியா வளாகத்தைச் சேர்ந்தகணினித் தொழிநுட்ப போதனாசிரியர் பொ. மோகன் ஆகியோர் கலந்து கொள்வர்.

வவுனியாவைச் சேர்ந்த அனைத்து மாணவர்களும் கலந்துகொண்டு பயன் பெறலாம் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

(ற-21)

# வலி.மேற்கு பிரதேச சபையை கீழ்த் தளத்துக்கு மாற்றுங்கள்

## மாற்றுத் திறனாளிகள், வயோதிபர்கள் சேவை பெறுவதில் சிரமம் என சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப்.7

வலி.மேற்குப் பிரதேச சபைக்கு வரும் மாற்றுத் திறனாளிகள், வயோதிபர்கள், கர்ப்பிணிகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். நான்கு சுற்றுப் படிகள் ஏறியே அவர்கள் சேவைகளைப் பெற வேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சங்கானை வர்த்தக கைத்தொழில் உரிமையாளர் சங்கம் கோரிக்கை விடுத்தது.

வலி. மேற்குப் பிரதேச சபைக்கு தினமும் நூற்றுக் கணக்கானோர் சேவைகளைப் பெறுகின்றனர். பிரதேச சபையின் தலைமையகம் மேல் தளத்தில் அமைந்துள்ள தால் சில சிரமங்கள் ஏற்படுகின்றன. தலைமை அலுவலகத்தை கீழ்த் தளத்துக்கு மாற்ற வேண்டும். அல்லது மின் தூக்கி வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

மின் தூக்கி வசதி ஏற்படுத்துவதற்கு தற்போது பிரதேச சபையிடம் நிதி மூலங்கள் இல்லை. வேறு ஏதாவது திட்டத்தின் கீழ் நிதி அளிக்கைகள் கிடைக்கும்போது இது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் - என்று வலி.மேற்குப் பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார்.

(ற-ரி,50)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்ற விசாரணை இலங்கை மீது நடத்த உதவவேண்டும் மலேசியா

## அந்தநாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் வலியுறுத்தல்

கொழும்பு, செப் 7
ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் மலேசியா உறுப்பினராக உள்ளதைப் பயன்படுத்தி இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பானவிசாரணைகளுக்கு ஒத் துழைப்பு வழங்கவேண்டும் என்று அந்த நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் கஸ்தூரி பட்டோ வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் மனித உரிமைகள் மீறல் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளுக்கு ஒரு தீர்மானத்தை எடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் மலேசியா உறுப்பினராக உள்ளமை பயனுள்ளது.

**“ரோமானியச் சட்டத்தின் கீழ், இலங்கையில் இடம்பெற்ற படு கொலைகள் மற்றும் போர்க் குற்றங்களுக்கு அந்தக் கால கட்டத்தில் இருந்த ஜனாதிபதியே பொறுப்பு கூறவேண்டும்”**

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்குப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தால் மட்டுமே தீர்வு காண முடியும் என்றும் மலேசியாவால் தன்னிச்சையாக எதையும் மேற்கொள்ள முடியாது.

ரோமானியச் சட்டத்தின் கீழ், இலங்கையில் இடம்பெற்ற படுகொலைகள் மற்றும் போர்க் குற்றங்களுக்கு அந்தக் கால கட்டத்தில் இருந்த ஜனாதிபதியே பொறுப்பு கூறவேண்டும் எனவும் அதனால் குற்றங்களுக்குக் காரணமான மகிந்த ராஜபக்சவுக்குத் தண்டனை கிடைக்க வேண்டும் என்று மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் கஸ்தூரி பட்டோ தெரிவித்திருந்தார்.

மலேசியா, ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் நிரந்த உறுப்பினர் இல்லை என்பதுடன் இன்னும் 4 மாதங்கள்மட்டுமே அதன் உறுப்பினர் காலம் செல்லுபடியாகும் எனவும் இதனால் விரைந்து செயலாற்ற வேண்டும் எனவும் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சீனா, பிரான்ஸ், ரஷ்யா, பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்தை கொண்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

# மலேரியாவிலிருந்து விடுபட்ட இலங்கை

## உலக சுகாதார நிறுவனம் பிரகடனம்

கொழும்பு, செப் 7
மலேரியா நோயில் இருந்து விடுபட்ட நாடாக, உலக சுகாதார நிறுவனம் இலங்கையை நேற்று முன்தினம் பிரகடனப்படுத்தியுள்ளது. நுளம்புகளால் பரவும் மலேரியா நோயை முற்றாக ஒழித்துள்ள நாடுகளின் வரிசையில் இலங்கையும் இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மலேரியாவின் பாதிப்பு அதிகம் இருந்த நாடுகளில் ஒன்றாக இலங்கை விளங்கியது.

தற்போது, அந்த நோயை முற்றாக இல்லாதொழித்த நாடுகளின் வரிசையில் இலங்கை இடம்பெற்றுள்ளமை முக்கியமான சாதனை என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

தெற்காசியாவில் மாலைதீவுகளை அடுத்து, மலேரியாவை முற்றாக அழித்த இரண்டாவது நாடாக இலங்கை இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

### தாஜுதீன் கொலை வழக்கு

# முடிவெடுக்க உதவவில்லை சி.சி.ரி.வி. கமரா காட்சிகள்

## ஆய்வு நிறுவனம் அறிக்கை

கொழும்பு, செப் 7
தாஜுதீனின் படுகொலை தொடர்பில் கனடாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட சி.சி.ரி.வி. காட்சிகள் ஊடாக எந்தவொரு முடிவுக்கும் வர முடியாது என்று அதனை ஆய்வு செய்த பிரிட்டிஷ் கொலம்பியா ஆய்வு நிறுவனம் அறிவித்துள்ளது.

கொழும்பு மேலதிக நீதிவான் மன்றத்துக்கு இது தொடர்பில், பிரிட்டிஷ் கொலம்பியா ஆய்வு நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டத் தலைமை அதிகாரி டேவிட் மெக்கே சுருக்க அறிக்கையை அனுப்பி வைத்துள்ளார். அதிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதிவான் மன்றினால் அனுப்பட்ட சி.சி.ரி.வி. காட்சிகள் அடங்கிய இறுவட்டுக்களும் அது தொடர்பிலான கேள்விக் கொத்தும் இரு பொலிஸ் அதிகாரிகள் ஊடாகத் தமக்குக் கிடைக்கப் பெற்றதாகவும் அதன் பின்னர் நடத்தப்பட்ட ஆய்வுகளில் குறித்த கேள்விகளுக்கு விடையளிக்கும்வகையில்தெளிவான தீர்மானங்களைப் பெற முடியவில்லை எனவும் அந்த அறிக்கையில் டேவிட் மெக்கே சுட்டிக் காட்டியுள்ளார்.

வாகனத்தின் இலக்கத்தகடு மற்றும் அதில் உள்ள நபர்கள் தொடர்பில் குறித்த கேள்விக் கொத்தில் கோரப்பட்டிருந்தபோதும் அது குறித்து முடிவெடுக்க முடியாது என்று குறிப்பிட்டு அதற்கான காரணங்களாக 5 விடயங்களையும் ஆய்வு நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

வீடியோவின் தரமானது மிகவும் தரம் குறைந்ததாக இருக்கின்றது. ஆய்வுகளுக்கு அனுப்புவதற்காகச் சேமிப்பகங்களில் குறித்த வீடியோ சுருக்கப்பட்டுப் பதிவு செய்யப்படும்போது, உண்மை சி.சி.ரி.வி. காட்சிகள் என்று நம்பப்படும் குறித்த காட்சிகள் மாற்றமடைந்திருப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

ஹெட் லைட் மற்றும் பாதையோர மின் குமிழ்களின் வெளிச்சத்துக்கு மத்தியில் கமராக்களில் வாகனங்களின் இலக்கங்கள் தொடர்பில் தெளிவான பதிவுகள் இல்லை. காட்சிகள் தரம் குறைந்ததாக உள்ள நிலையில் வாகனத்தின் ஜன்னல் கண்ணாடிகளுக்கு அப்பால் (வாகனத்தின் உள்ளே) இருப்பவர்கள் தொடர்பிலும் முடிவெடுக்க முடியாது எனவும் அவ்வறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி அதிகாலை நாரஹேன்பிட்டி பொலிஸ் பிரிவின் சாலிகா மைதானத்தின் மதிலுடன் மோதிய நிலையில் எரிந்து கொண்டிருந்த காருக்குள் இருந்து தாஜுதீன் சடலமாக மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த உயிரிழப்பு படுகொலை என்று நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில் விசாரணைகள் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (த-5)

### இராணுவ அதிகாரி வெளிநாடு செல்ல நீதிமன்றம் தடை

கொழும்பு, செப் 7
இராணுவத்தின் குரல் தரவல்ல முன்னாள் அதிகாரி டி.கே.பி. தசநாயக்கவின் வெளிநாடு செல்வதற்கான கோரிக்கையை கோட்டை நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

டி.கே.பி. தசநாயக்க ஒன்றரை வருடத்துக்கு வெளிநாடு செல்வதற்கான கோரிக்கையை நீதிமன்றத்தில் விடுத்திருந்தார். கோட்டை நீதிமன்ற நீதிவான் லங்கா ஜயரத்ன அதனை நிராகரித்துள்ளார்.

2008 ஆம் ஆண்டு நபர்கள் கடத்தப்பட்ட விவகாரத்துடன் தொடர்புடைய சந்தேக நபராக இவர் பெயரிடப்பட்டுள்ளார். இவரது கடவுச்சீட்டும் நீதிமன்றத்தால் பறி முதல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# போர்க்குற்றம் சாட்டப்பட்ட இராணுவ உயரதிகாரி ஓய்வு



கொழும்பு, செப் 7
இறுதிக் கட்டப் போரில் பன்னாட்டுச் சட்ட மீறல்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்ட 53 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாக பணியாற்றிய மேஜர் ஜெனரல் கமால் குண ரத்ன, இராணுவத்திலிருந்து நேற்று முன்தினம் ஓய்வு பெற்றார்.

கஜபா படைப்பிரிவைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் கமால் குண ரத்ன, 2001 ஆம் ஆண்டுக்கும் 2010 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில், 523, 551 ஆவது பிரிகேட்டுக்களினதும், வான்வழித் தாக்குதல் படைப் பிரிவினதும் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றியவர். பின்னர் 55 ஆவது, 53 ஆவது டிவிசன்களின் கட்டளை அதிகாரியாக இருந்தார்.

35 ஆண்டுகள் இராணுவத்தில் பணியாற்றிய அனுபவமுள்ள மேஜர் ஜெனரல் கமால் குணரத்னவுக்கு கஜபா படைப்பிரிவின் சார்பில் பிரியாவிடை அணிவகுப்பு மரியாதையும், விருந்துபசாரமும் வழங்கப்பட்டன. (த-5)

# லசந்தவின் உடல் மீண்டும் உடற்கூற்றுச் சோதனைக்கு

## கவனம் செலுத்துகிறது விசாரணைப் பிரிவு

கொழும்பு, செப் 7
பிரபல ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் உடல் தோண்டியெடுக்கப்பட்டு மீண்டும் உடற்கூற்றுப் பரிசோதனை செய்வது தொடர்பில், விசாரணைகளை முன்னெடுக்கும் பிரிவு கவனம் செலுத்தி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

றக்பி வீரர் வசீம் தாஜுதீனின் முதலாவது உடற்கூற்றுப் பரிசோதனை சரியான முறையில் செய்யப்படாமை போன்று, லசந்த விக்கிரமதுங்கவினதும் ஆரம்ப உடற்கூற்றுப் பரிசோதனை சரியான முறையில் செய்யப்படவில்லை என்று எழுந்துள்ள சந்தேகத்தின் காரணமாகவே, மீண்டும் உடற்கூற்றுப் பரிசோதனை செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

லசந்த விக்கிரமதுங்கவின் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்துக்குத் தற்போழுது பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பான தகவல்களை மறைத்த குற்றச்சாட்டில் ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரிகள் சிலர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# படை முகாம்கள் அகற்றப்படும்

## திருகோணமலை மாவட்ட எம்.பிக்கு பாதுகாப்புச் செயலர் உறுதிமொழி

கொழும்பு, செப் 7
திருகோணமலை மாவட்டத்தில் தனியார் காணிகளில் அமைந்திருக்கும் இராணுவ முகாம்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாதுகாப்புச் செயலர் வாக்குறுதி வழங்கியுள்ளார்.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக், பாதுகாப்பு அமைச்சின் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, திரு கோணமலை மாவட்டத்தில் தனியார் காணிகளில் அமைந்திருக்கும் இராணுவ முகாம்களை அகற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

குரங்கு பாஞ்சான் இராணுவ முகாம், சூரன்கல் இராணுவ முகாம், தோப்பூர் பத்து வீட்டுத்திட்ட இராணுவ முகாம் மற்றும் மூதூர் தக்வா நகர் கடற்படை முகாம், கெல்கேயார் சென்ரர் அமைந்திருக்கும் தனியார் காணியும் சேர்ந்து இருக்கும் கடற்படை முகாம், புல்மோட்டையில் அமைந்திருக்கும் இராணுவ முகாம் ஆகிய முகாம்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாதுகாப்புச் செயலர் வாக்குறுதி வழங்கியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு.கவுக்குத் துரோகம் செய்துள்ளார் மைத்திரி

## மகிந்த ராஜபக்ச குற்றச்சாட்டு



கொழும்பு, செப் 7
சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன துரோகம் செய்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குற்றஞ் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சி செய்தல் மற்றும் அது தொடர்பான உடன்படிக்கையை நீடித்துள்ளதன் மூலம் ஜனாதிபதி, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குத் துரோகம் செய்துள்ளதாக அவர் சாடியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செல்லும் பாதையை வலுப்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று மைத்திரிபால சிறிசேன விடுத்த கோரிக்கை தொடர்பில் பதில் அளிக்கும்போது மகிந்த ராஜபக்ச இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அறிவுரைகளை சிறிலங்கா சுதந்திரக் கட்சி பின்பற்றும் வரை கட்சியைப் பலப்படுத்த முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் மீண்டும் இணையாமல் இருக்கும் எண்ணத்துடனேயே அந்தக் கட்சியில் இருந்து பிரிந்து, சிறிலங்கா சுதந்திரக் கட்சியை எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க உருவாக்கியதாக மகிந்த ராஜபக்ச சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் அரசியல் கொள்கைகளுக்கு இடையில் பெரிய வேறுபாடுகள் காணப்படுவதாகவும், அவற்றை இணைக்க முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்த விரும்பினால், ஐக்கிய தேசியக் கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அரசிலிருந்து கட்டாயம் விலக வேண்டும் என்று மகிந்த ராஜபக்ச மேலும் சுட்டிக்காட்டினார். (த-5)

## மருந்து கொள்வனவில் லஞ்சம் வாங்கினார் பொலிஸ் அதிகாரி

கொழும்பு, செப். 7
நாரஹேன்பிட்டி பொலிஸ் மருத்துவமனையில் மருந்துகள் கொள்வனவின்போது அங்குள்ள உயர் அதிகாரி ஒருவர் மாதாந்தம் நூறு லட்சம் லஞ்சமாகப் பெற்றுள்ளமை தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

மருந்துகள் கொள்வனவின் போது அதிகாரி 35 சதவீதப் பணத்தை லஞ்சமாகப் பெற்று வந்துள்ளதாகவும் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பணத்தின் சிறிய தொகைகள் ஏனைய பொலிஸ் அதிகாரிகள் பலருக்கும் இந்த அதிகாரியால் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயர் அதிகாரியைக் கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் குற்றப் புலனாய்வு விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர். (த-5)

## தினமும் 30 நிமிட உடற்பயிற்சி ஆரம்பித்து வைத்தார் மைத்திரி

கொழும்பு, செப். 7
உடற் பயிற்சிகளின் மூலம் தொற்றா நோய்களைத் தடுக்கலாம் என்ற எண்ணக்கருவைச் செயலில் காட்டுவதற்கான முயற்சியின் ஓரங்கமாக 30 நிமிட உடற்பயிற்சி செயற்பாடு நேற்றைய தினம் கொழும்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் மற்றும் சுகாதார அமைச்சு என்பன இணைந்து இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளன.

இதற்கான உத்தியோகபூர்வ நிகழ்வு நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்குக் கொழும்பு கால்லி முகத்திடலின் அருகிலுள்ள கோல்பேஸ் ஐந்து நட்சத்திர விடுதிக்கு முன்பாக நடைபெற்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, சுகாதார அமைச்சின் தொற்றா நோய்த் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த உயரதிகாரிகள் மற்றும் இந்தியத் தூதரகத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு 30 நிமிட உடற்பயிற்சியில் ஈடுபட்டனர்.

உடற்பயிற்சிச் செயற்பாட்டின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட சுகாதார அமைச்சின் தொற்றா நோய் தடுப்புப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஆனந்தன், தொற்றா நோய்களால் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கும் நோக்கில், உடற்பயிற்சிகளை அதிகரிப்பதற்கும், சுத்தமான உணவுப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையிலும் இந்தச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

ஒவ்வொரு நாளும் சராசரியாக 30 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்பதை ஊக்கப்படுத்தும் வகையிலும், முறையான உணவுப் பழக்கவழக்கத்தை ஊக்கப்படுத்தும் நோக்கிலும், சுகாதார அமைச்சு இதனை முன்னெடுத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இதன் மூலம் தொற்றா நோய்களைத் தடுத்துக்கொள்ள முடியும் என்றும்- அவர் நம்பிக்கை வெளியிட்டார். அரச வைத்தியசாலைகளில் சேர்க்கப்படும் நோயாளர்களில் 68 வீதமானோர் தொற்றா நோய்களினாலேயே உயிரிழந்துள்ளனர் எனச் சுகாதார அமைச்சு அண்மையில் தெரிவித்திருந்தது.

இலங்கையிலுள்ள சனத்தொகையில் 18 சதவீதமானோர் அல்லது ஆறு பேரில் ஒருவர் நீண்டகால நோய் அல்லது தொற்றா நோயினால் பீடிக்கப்பட்டிருப்பதாகக் குடிசன மதிப்பீட்டுத் திணைக்களம் கடந்த ஜூலை மாதம் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

புற்றுநோய், சிறுநீரக நோய், நீரிழிவு போன்ற தொற்றா நோய்கள் காரணமாகப் பன்னாட்டு அளவில் ஒரு வருடத்துக்கு 38 மில்லியன் பேர் உயிரிழப்பதாக ஐக்கிய நாடுகளின் உலக சுகாதார நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இவற்றில் 28 மில்லியன் பேர் அபிவிருத்தி அடைந்துவரும் அல்லது மத்திய தர வரிசை நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும்-2015ஆம் ஆண்டு கணிப்பீட்டின்படி அந்த நிறுவனம் கூறுகின்றது.

வருடாந்தம் புற்றுநோயினால் 8.2 மில்லியன் பேரும், சுவாச நோய்கள் காரணமாக 4 மில்லியன் பேரும், நீரிழிவு நோயினால் 1.5 மில்லியன் பேரும் உயிரிழப்பதாக உலக சுகாதார நிறுவனம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (த-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
இன்று (07.09.2016) புதன்கிழமை
ஆறாம் திருவிழா
திருமஞ்சத் திருவிழா



மஞ்சமதில் ஏறி வலம் வருவாயம்மா
மஞ்சமதில் ஏறிவந்து நெஞ்சம் குளிர்ந்திடவே
மாதரசி துர்க்கையருள் தருவாயம்மா
மண்ணிலுந்தன் இன்னருளை வேண்டித்துதி பாடிநின்றோம்
மாதாவே எமையாளும் துர்க்கையம்மா
கஞ்சமலர் விழியாளே வஞ்சியர்க்கும் வாழ்வு தரும்
கருணைமி குந்தவளே எங்களின் தாயே
கருணைவி ழிதிறந்து அருள்புரிய வேண்டுமம்மா
தேவிவிஷ்ணு துர்க்கையளே திரிசூலிநீயே.

திருமஞ்ச உபயம்: த.ஆறுமுகநாதன் - குடும்பம்
தெல்லிப்பழை
திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:
தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்.






செல்வச்சந்நிதியானுக்கு
இன்று (07.09.2016)
புதன்கிழமை
ஏழாம் திருவிழா

தொண்டை மானாற்றில் தொழும் அடியார்களுக்கு
தொடர்ந்திடும் இடும்பை தொலைத்தருள்வோனே
தொப்பை அப்பனைத் தோற்றுவிட்ட தம்பியே!
தொழுதிடும் அடியார் பசி தீர்க்கவென அன்னதானக் கந்தனாய்
தொண்டை மானாற்றில் உறைந்துள்ள உனக்கு இன்று ஏழாம் திருவிழா
திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :

ஸ்ரீமுத்துமாரி அம்மன் ரேடர்ஸ்
SRI MUTHUMARI AMMAN TRADERS
No.344, HOSPITAL ROAD,
JAFFNA

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கு - கிழக்கில் இராணுவக் குறைப்பு; அர்த்தத்தைத் திரிபுபடுத்தும் போக்கு...

**வ**டக்கு - கிழக்கு மாகாணங்களில் இப்போது போர் எதுவும் இல்லை. தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, அந்தப் பிரதேசங்களில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரை, படிப்படியாக, படைத் தலைமை அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மேற்கண்ட கருத்தை வெளியிட்டிருப்பது தமிழர் தரப்பு எதுவுமில்லை. எவரும் எதிர்பாராத தரப்பு என்று கொள்ளக்கூடிய ஜாதிக ஹெல உறுமயவே அதுவாகும். அந்த அமைப்பின் ஊடகப் பேச்சாளரான நிசாந்த வர்ணசிங்க மேற்போந்த தகவலை வெளிப்படுத்தி உள்ளார்.

கடந்த வாரம் இலங்கைக்குப் பயணம் செய்திருந்த ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் பான் கீ- மூன், வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இருந்து இராணுவத்தினரை அகற்ற வேண்டும் என்று வலியுறுத்தி இருந்தார்.

அது மட்டுமன்றி, இரண்டு மாகாணங்களில் இருந்தும், இராணுவத்தினரின் நடமாட்டத்தையும் மட்டுப்படுத்த வேண்டும் என்றும் கருத்து வெளியிட்டுப் போனார்.

அத்தோடு மட்டும் தரிக்காமல் வடக்கு-கிழக்கில் போர் எதுவும் நடைபெறாத இந்த வேளையில்- காலத்தில்- இராணுவத்தினர் தொடர்ந்தும் நிலை கொள்வது எந்தவித அர்த்தமும் அற்ற செயல் என்றும் அழுத்திக் கூறியிருந்தார்.

இதேவேளை-- தெற்கின் இடதுசாரித் தலைவர் என்று தம்பட்டம் அடிக்கும் வாசுதேவ நாணயக்கார (நாடாளுமன்ற உறுப்பினர்), கூறிய கருத்து தமிழ் மக்களுக்கு மிக உறைப்பு ஊட்டுவதாகவே உள்ளது.

போயும் போயும் பெரும் அபத்தமான பொய் ஒன்றையும் அள்ளி வீசித் தமிழ் மக்களின் மனங்களை அவர் புண்படுத்தி உள்ளார் என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

வடக்கின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு, இங்கு இராணுவத்தின் பிரசன்னம், மிக அவசியமானது என்று நீலிக்கண்ணீர் சொரிந்துள்ளார் அவர்.

அது மட்டுமா? வடக்கில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கைக்கு இங்குள்ள மக்கள் ஆதரவு இல்லை எனவும் "பச்சைப் பொய்யை" கட்டவிழ்த்து விட்டுள்ளார்!!

அதனை உள்ளூர்ந்து நோக்கின்,வடக்கு-கிழக்கிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கைக்குத் தமிழ் மக்கள் ஆதரவாளர்கள் அல்லர் என்ற கருத்தை அவர்நிறுவ முயன்றார் என்றும் கொள்ளலாம்.

வடக்கில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என்ற எமது மக்களின் நிலைப்பாட்டை, கொள்கையை அவமானப்படுத்தும் வம்புத்தனம் இது என்று கொள்வதைவிட வேறு எந்த உவமானத்தைக் கூற...!

# சிறுபான்மை இனமாயின், எல்லாவற்றையுமே விட்டுக்கொடுக்கவேண்டுமா?

வந்தியத்தேவர்

தமிழ்ப் பகுதிகளில் அமைக்கப்படும் விகாரைகள் எதிர்காலத்தில் தமிழர்களை இல்லாமல் செய்வதற்கான ஒரு முயற்சியே. இது ஒரு பௌத்த சிங்கள நாடு என்பதை எதிர்காலத்துக்கு அடையாளப்படுத்தும் ஒரு நடவடிக்கையே. வடக்கில் விகாரை அமைப்பதில் என்ன தவறு என்பது வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயின் கருத்து.

**த**மிழ் மக்கள் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லையேல் போர்க்கால பதிலடிகளை வழங்க வேண்டியிருக்கும் எனக் கூறும் ஹெல உறுமயவைச் சேர்ந்த நிசாந்த ஸ்ரீவர்ணசிங்க, தற்போது தான் புற்றுக்குள் இருந்து கிழம்பியுள்ளார்போல் இருக்கிறது. அவருக்குத் தமிழ் மக்களின் கோரிக்கை என்ன என்பதும், தனிநாடு என்ற தமது கோட்பாட்டில் இருந்து விட்டுக்கொடுப்புக்களைச் செய்து, தமிழ் மக்கள் ஒன்றுபட்ட இலங்கையில் வடக்கு-கிழக்கு இணைந்த சமஷ்டிக் கொள்கைக்கு ஒப்புக்கொண்டு அதற்காக வலியுறுத்துவதும் தெரியவில்லைபோல் உள்ளது. பெரும் பான்மைச் சமூகம் பெரிய விட்டுக் கொடுப்புக்களைச் செய்கிறது தமிழ்ப்பிரதிநிதிகள் இனவாத ரீதியில் செயற்படுகிறார்கள் என்று வேறு புத்திகெட்டு அவர் அலட்டியும் உள்ளார்.

பெரும்பான்மைச் சமூகம், தமிழர்கள் தமது பிரதான கோரிக்கையான தனிநாட்டுக் கோரிக்கையையேவிட்டுக்கொடுத்துள்ளமை போன்று, தமது எந்த ஓர் அடாவடித்தனக் கோட்பாடுகளில் ஏதாவது ஒன்றிலாவது சிறிய அளவிலாவது விட்டுக் கொடுப்புக்களைச் செய்துள்ளதா? நில அபகரிப்புக்கள், மூவின மக்களும் இந்த நாட்டுக்குடிமக்கள். எனவே அனைவருக்கும் சமத்துவமே பிரதானம் என்ற உண்மைகளில் ஏதாவது ஒன்றில் நியாயமாக நடப்போம் என்று விட்டுக்கொடுத்ததா? முற்றாகவே புறந்தள்ள வேண்டிய இனவாதத்தை விட்டுக்கொடுத்ததா? தமிழ் மக்கள் கோருவது தமது உரிமைகளையே. இதில் பெரும்பான்மைக்கு விட்டுக் கொடுக்கவென்று எதுவும் கிடையாது. அவர்களுக்கான மனித உரிமைகளை விட்டுத்தாருங்கள் என தமிழ்மக்களும் கேட்கவில்லை. எங்கோ ஒதுங்கிக் கிடப்பவர்கள் எல்லோரும் தமக்கு முகவரி தேட தமிழ் சிறுபான்மை மக்களை முதலீடாக்கும் முயற்சிகளை முதலில் கைவிட்டுவிடவேண்டும். இனவாதத்தைச் சிங்கள மக்களே வளர்ப்பதாகக் கூறிய பிரதமர் ரணில், இப்போது ஒரு சில அரசியல்வாதிகளே இனவாதத்தை வளர்ப்பதாகக் கூறியுள்ளார். இனவாதியான ரணில் விக்கிரமசிங்க, சிங்கள மக்கள் இனவாதத்தைக் கைவிட்டு -விட்டதாகக் கூறித் தமிழ் மக்களை ஏமாற்ற முனைகிறாரா? நாட்டைப் பிளவுபடுத்துவதையோ, இன்னொரு போரையோ தாங்கள் விரும்பவில்லை. அதனால்தான் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசுக்கு தமிழ் மக்கள் ஆதரவை வழங்கியிருந்தனர். இந்த உண்மையைப் புரிந்து கொள்ளக் கூடிய ஆழ்ந்த அரசியல் அறிவு இன்னமும் தென்பகுதியில் ஏற்படவில்லைப்போலும். முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்காவே இனவாதம் செழித்து வளர முக்கிய காரணியாக இருந்தவர். அவரது தனிச்சிங்களச் சட்டமும் சிங்கள 'ஸ்ரீ'யுமே நாட்டில் இனக் கலவரங்கள் தோன்றக் காரணமாக இருந்தன. போதாக்குறைக்கு சிறிமாவோ அம்மையாரின் தரப்படுத்தல், தமிழ் மாணவர்களின் கொந்தளிப்புக்குக் காரணமாக அமைந்தது. இந்த உண்மைகளை மறைத்து நாட்டின் சுய அடையாளத்தை நிலைநாட்டவே 1956 இல் தனது தந்தையார் தனிச் சிங்களச் சட்டத்தை நிறைவேற்றினார் என்கிறார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா. அது இனவாதச் செயற்பாடல்ல என்கிறது அவரது புதிய அறிவு. 450 ஆண்டுகள் அன்னியர் ஆட்சியில் இருந்த இலங்கையின் சுய அடையாளத்தை அங்குள்ள அனைத்து இனமக்களையும் கொண்ட அரசின் மூலம் உறுதிப்படுத்த முடியாதா? அப்படியானால் இலங்கைக்கும் பொருத்தமானது சமஷ்டி முறையே என்று பண்டாரநாயக்காவே எப்படிக் கூறமுடியும்?

தமிழ்ப் பகுதிகளில் அமைக்கப்படும் விகாரைகள் எதிர்காலத்தில் தமிழர்களை இல்லாமல் செய்வதற்கான ஒரு முயற்சியே. இது ஒரு பௌத்த சிங்கள நாடு என்பதை எதிர்காலத்துக்கு அடையாளப்படுத்தும் ஒரு நடவடிக்கையே. வடக்கில் விகாரைகளை அமைப்பதில் என்ன தவறு என்பது வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயின் வாதம். கொக்கிளாயில் அமைக்கப்படும் விகாரை உரிய அனுமதியுடனேயே இடம்பெறுவதாகவும் அவர் கூறுகிறார். எங்கள் பகுதியில் உங்கள் விகாரைகள் அமையட்டும் என்ற எந்த ஒரு தமிழனாவது உங்களுக்கு அனுமதி வழங்கியதுண்டா? அனேக தமிழ் பிரதேசங்களில் விகாரைகள் பல சட்ட விரோதமாகவே அமைக்கப்பட்டுள்ளன. சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்றுள்ளன. எல்லாமே கைவிட்டுப்போன நிலையில் இனித்தான் பிரதமருடன் பேசி இந்த விடயங்களில் தெளிவான முடிவை எட்டப் போகிறார்களாம் எமது பிரதிநிதிகள். காலம் கடந்து ஞானம் பெறுபவர்களாக தமிழ்ப் பிரதிநிதிகளும், எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்களாகத் தமிழ் மக்களும் இருப்பது அரசுக்குச் சாதகமாகவே உள்ளது. இதுவே தமிழ் மக்கள் எல்லாவற்றையுமே விட்டுக்கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தென்பகுதியில் தோற்றுவிக்கக் காரணமாகிறது. விடாப்பிடியாக நின்றால் நல்லிணக்கம் ஏற்படாது என்கிறார் அமைச்சர் ரவூப் ஹக்கீம். ஒரு பகுதி மக்கள் மிதமிஞ்சி எல்லாவற்றிலும் விட்டுக்கொடுக்க வேண்டும், இன்னொரு இனம் மேலாதிக்கச் சிந்தனையுடன் தமது பிடிவாதத்தில் இருந்து இறங்க முடியாது என அடம்பிடிக்க வேண்டும். இதென்ன ஜனநாயகத்தின் சிந்தனையா? சிங்கள இனவாத அமைப்புக்கள், பௌத்த மதத்தையே குழிதோண்டிப் புதைக்கத் தயாரான போலித் துறவிகள், பேரினவாதிகள் என்று பலரும், சிறுபான்மை இனங்களுக்கெதிராக அவர்கள் எல்லாவற்றிலும் பெரும்பான்மைக்கு விட்டுக் கொடுத்து அவர்கள் தருவதைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளனர். நாட்டை ஆள்வது யார்? நல்லாட்சியை வேண்டி மக்கள் தெரிவு செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவா? அல்லது இடையில் நுழைந்து கொள்ளும் துறவிகளா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, மற்றும் ஐ.தே.கட்சி ஆகியவற்றுக்கு இடையே நிலவும் நெருங்கிய நட்புறவு காரணமாக, இவ்விரு தரப்பினரும் ஒரு தரப்பாக ஆகியுள்ளனர், காதல் போதை தலைக் கேறிய நிலையில், காதலன் தனது காதலியிடம் 'இப்போது நாங்கள் இருவரல்ல; ஒருவரே' எனக் கூறுவது வழமையே. அதே போன்று தான் சுதந்திரக் கட்சியும் ஐ.தே.கட்சியும் வெவ்வேறு தரப்புகள் என்றில்லாது, தற்போது ஒரே கட்சியாகி இயங்கும் நிலையே நிலவி வருகின்றது.

# மைத்திரியின் காலைவாரிவிட மகிந்த முனையக்கூடாது

சிங்கள மூலம், (மவ்பிம)
சந்துன் ஜீவந்த தமிழில் வீ.எஸ்.ரீ

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, இந்த நாள்களில் தனது தொகுதி அமைப்பாளர்களில் பலரை அவர்களது அமைப்பாளர் பதவியிலிருந்து வெளியேற்றுவதில் ஆர்வம் காட்டிச் செயற்படுகிறது. கடந்த பொதுத் தேர்தலில் அநுராதபுர மாவட்டத்தில் சதந்திரக் கட்சி சார்பாகப் போட்டியிட்டு அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்ட எஸ்.எம்.சந்திரசேன சுதந்திரக் கட்சியின் முதற்பலியாக ஆகியுள்ளார்.

அவரையடுத்து கம்பஹா மாவட்ட பிரசன்ன ரணதுங்க, கண்டி மாவட்டத்தில் அமுனுகம, காலி மாவட்ட கீதா குமாரசிங்க, புத்தளம் மாவட்ட சனத் நிசாந்த, கண்டி மாவட்ட ஹெகலிய ரம்புக்வெல , கஸ்பாவ தொகுதி காமினி லொக்குகே, இரத்தினபுரி மாவட்ட பவித்ரா வன்னியாராச்சி, மாத்தறை மாவட்ட மகிந்த யாப்பா, நுவரெலிய மாவட்ட சி.பி.ரத்னாயக ஆகியோர் உட்பட சுதந்திரக்கட்சியின் முன்னணித் தலைவர்கள் பலர் கட்சியின் தொகுதி அமைப்பாளர் பதவிகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். இந்தவிதம் சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினர்களை நீக்கிவிட்டு,கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டுப் பொது மக்களால் புறமொதுக்கப்பட்டுத் தோற்கடிக்கப்பட்ட பிரமுகர்களை கட்சியின் தொகுதி அமைப்பாளராக நியமித்துள்ளது இன்றைய நல்லாட்சி அரசு.

மேற்குறிப்பிட்ட வகையில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சுதந்திரக் கட்சி சார்பாக போட்டியிட்டு வெற்றியீட்டியவர்களைப் புறந்தள்ளி, கடந்த பொதுத் தேர்தலில் சுதந்திரக்கட்சி சார்பாகப் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தோரை கட்சியின் தொகுதி அமைப்பாளர்களாக நியமித்ததன் மூலம் சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்தும் பெரும் வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்த நல்லாட்சி நிர்வாகம் முயற்சித்து வருகிறது.

ஐ.தே.கட்சியுடன் இணைந்து செயற்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்களை கட்சியிலிருந்து வெளியேற்றி விட்டு, ஐ.தே.கட்சியுடன் தொடர்ந்தும் இணைந்திருப்பதை எதிர்க்காதவர்களைக் கட்சியில் தொடர்ந்து வைத்திருக்கும் இந்தப் புனரமைப்புத் திட்டத்தின் காரணமாக் தற்போது புதிய அரசியல் அதிகாரத்தரப்பின் தேவை உணரப்படுகின்றது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, மற்றும் ஐ.தே.கட்சி ஆகியவற்றுக்கிடையே நிலவும் நெருங்கிய நட்புறவு காரணமாக இவ்விரு தரப்பினரும், ஒரு தரப்பாக ஆகியுள்ளனர். காதல் போதை தலைக் கேறிய நிலையில் காதலன் தனது காதலியிடம் 'இப்போது நாங்கள் இருவரல்ல: ஒருவரே' எனக் கூறுவது வழமையே. அதே போன்று தான் சுதந்திரக் கட்சியும் ஐ.தே.கட்சியும் வெவ்வேறு தரப்புகள் ஏன்றில்லாது, தற்போது ஒரே கட்சியாகி இயங்கும் நிலையே நிலவி வருகின்றது. இவ்விரு கட்சிகளின் தலைவர்களும் இணைந்து நல்லாட்சி அரசின் முதலாமாண்டு நிறைவைக் கொண்டாட முடிந்துள்ள அதே சமயம், ஐ.தே.கட்சியின் வருடாந்த சம்மேளனத்துக்கு. அழைக்கப்பட்ட சுதந்திரக் கட்சித் தலைவரான மைத்திரிபால விசேட அதிதியாக அதில் கலந்து கொள்ளவுள்ளார்.

இத்தகைய அரசியல் பின்னணியில், நல்லாட்சி அரசுக்கு எதிராக அரசியல் கட்சியொன்றைப் புதிதாக உருவாக்குவதைத்தவிர நல்லாட்சி அரசின் எதிர்ப்பாளர்களுக்கு வேறு மார்க்கமெதுவும் கிடையாது. மகிந்த புதிய கட்சியொன்றை உருவாக்குவது மைத்திரிபாலவுக்கான உதவியொன்றாகக் கொள்ளத்தக்கது. எனவே புதிய கட்சியொன்றை ஆரம்பித்தால், வீதியில் அலைய வேண்டிய நிலைக்கு உள்ளாக நேரிடுமென கோபத்தடன் மிரட்ட வேண்டியது அவசியமில்லை. புதிய கட்சியொன்றை உருவாக்க அனுமதிப்பதே சிறப்பாகும். அப்படியானால் தான் ஊழல்மோசடிகள் புரிந்த தரப்பினர், அத்தனைபேரும் அந்தப் புதிய கட்சியில் இணைந்து கொள்வர். அத்தகைய நிலையில் மிஞ்சும் சுதந்திரக் கட்சிக்காரர்கள் அனைவரும் ஊழல்மோசடிகள் எவற்றிலும் ஈடுபட்டிராத, தூய்மையான அரசியல்வாதிகளாக இனம் காட்டப்படுவர். அத்தகையோரை இணைத்துக் கொண்டு தூய அரசியல் செயற்பாட்டை ஜனாதிபதி மைத்திரிபாலவால் முன்னெடுக்க வாய்ப்பமையும்.

மைத்திரிபால சிறிசேனவின் தூய நியாயமான நிர்வாகம் காரணமாக, அடுத்த பொதுத் தேர்தலில் மகிந்த ராஜபக்சவுக்கு அவரது குடும்ப உறுப்பினர்களது வாக்குகள் மட்டுமே கிடைக்கும் என கிராமப்புற மக்கள் பேசிக் கொள்கின்றனர். கடைசியில் மகிந்த உருவாக்கும் புதிய கட்சி படுதோல்வியுற, மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் அப்பழுக்கற்ற சுதந்திரக் கட்சி அரசு உருவாகும் நிலை ஏற்படும்.

உண்மையில் மகிந்த சுதந்திக்கட்சி மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருப்பாரானால், இந்தச் சந்தர்ப்பத்தில் சுதந்திரக் கட்சியை கட்டிக் காக்க மைத்திரிபால சிறிசேனவுக்கு இடமளித்து அவரது காலைவாரி வீழ்த்த முனையாமல், சுதந்திரக்கட்சியில் இருந்து தாம் வெளியேறிக் கொள்வதே சிறப்பாகும். அவ்விதம் சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறி அவர் புதிய கட்சியொன்றை ஆரம்பிக்கலாம்.

அந்த வகையில் இன்று மகிந்த, முன்னாள் பிரதமர் காலஞ் சென்ற எஸ்.டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்காவை இதற்கோர் முன்னுதாரணமாகக் கொண்டு செயற்படுதல் சிறப்பாகும். அன்று பண்டார நாயக்க ஐ.தே.கட்சியிலிருந்து வெளியேறியிருக்காவிட்டால் இன்று சுதந்திரக்கட்சி என்றொரு கட்சி இருந்திருக்காது. ஐ.தே. கட்சியிலிருந்து வெளியேறியது மட்டுமல்லாமல் துணிச்சலுடன், முதுகெலும்பை நிமிர்த்திக் கொண்டு அன்று பண்டாரநாயக்கா சுதந்திரக் கட்சியென்ற புதிய கட்சியை உருவாக்கியது போன்று, இன்று மகிந்தவும் துணிச்சலுடன் செயற்பட்டுச் சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறி, புதிய கட்சியொன்றை உருவாக்க வேண்டும். அவ்விதம் செய்யாதுவிடின், கிராமப் புறத்துச் சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் மகிந்தவை, தெருவில் அங்கும் இங்கும் அலையும் நிலைக்கு உட்படுத்திவைப்பர் என்பது திண்ணம்

## மாகாண சபை கவனிக்குமா?

தமிழர்கள், தமிழர் பண்பாடு என்றெல்லாம் மாகாண சபையும் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் தொடர்ந்து குரல்கொடுத்து வருகிறார்கள். ஆனால், நீண்ட காலத்துக்குப் பின்னர் வெளிநாட்டிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்த என்னால் இங்குள்ள கடைத் தெருக்களில் சுற்றித் திரிந்தபோது நான் ஒரு தமிழ் மாநிலத்தில் நிற்கிறேன் என்று உணரவே முடியவில்லை. அந்தளவுக்கு ஆங்கில மோகமே இங்குள்ளவர்களைப் பிடித்தாட்டுகிறது என்பதைக் கடைகளின் பெயர்ப் பலகைகள் தெளிவாகக் காட்டுகின்றன. வீதி அறிவித்தல் பலகைகள்கூட தனித் தமிழில் இல்லாமல் மும்மொழியிலும்தான் இருக்கின்றன. ஆனால் கடைகளின் பெயர்களோ ஆங்கிலத்தைத் தமிழில் எழுதியவையாகத்தானே இருக்கின்றன! இவற்றைப் பார்க்கும்போது மாகாண சபை என்ன செய்கிறது? தமிழ்ப் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லையா என்ற கேள்விகள் மனதில் எழுகின்றன. பிரான்ஸிலோ, சுவிஸிலோ கடைத் தெருக்களில் இறங்கி நடந்தால் ஆங்கிலம் தெரிந்தவர்களால்கூட எதையும் படித்துப் பார்க்கமுடியாத அளவுக்கு உள்ளூர் மொழிகளிலேயே அவை எழுதப்பட்டிருக்கும். ஆனால் இங்கோ ஒரு ஆங்கிலேயர் எந்தச் சிரமமும் இன்றி பயணிக்கக்கூடியதாகத்தான் இருக்கிறது. அதனால் தான் எனக்கு இது தமிழ் மாநிலம்தானா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

கனகேஸ்வரன்.
பிரிஸ்பேர்ன்

## சகிக்க முடியாத துர்நாற்றம் யாழ்.நகரிலிருந்து ஒழியுமா?

யாழ்.நகரினுள் நுழைந்தவுடன் கழிவு வாய்க்கால்களிலிருந்து எழுகின்ற துர்நாற்றம் எம்மை வரவேற்கின்றது. வீதியோரங்களில் அமைக்கப்பட்டுள்ள கழிவு வாய்க்கால்கள் மூடி போட்டு மூடி வைக்கப்பட்டாலும் அங்கிருந்து எழுகின்ற துர்நாற்றத்தைத் தடுக்க முடியவில்லை. இதனால் எந்த நேரமும் இந்த நாற்றம் வீசிக் கொண்டே இருக்கின்றது.

கழிவு நீரையும், கழிவுகளையும் உரிய வகையில் அகற்றிவிடுவது மாநகரசபையின் பிரதானமான கடமையாகும். அதிலும் தினமும் அதிகாலையில் மக்கள் கூடுகின்ற யாழ்நகரில் சுகாதாரம் சிறப்பாகப் பேணப்பட வேண்டும். கழிவு வாய்க்கால்கள் துர்நாற்றம் வீசுகின்ற அளவுக்கு மோசமான நிலையில் பேணப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

இந்தியாவில் பாதாளச் சாக்கடைகள் அமைக்கப்பட்டுக் கழிவுகள் அகற்றப்படுவதை அவதானிக்க முடிகின்றது. இதனால் பொதுமக்களுக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படுவதில்லை. இவ்வாறானதொரு நிலையை இங்கு ஏற்படுத்திக் கொள்வது எதிர்காலத்தில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

கழிவு வாய்க்கால்களில் கழிவு நீர் தேங்கி நிற்பதன் காரணமாகவே துர்நாற்றம் வீசுகின்றது. கழிவுநீர் சீராக வழிந்தோட முடியாதவாறு பிளாஸ்ரிக்கினாலான பொருள்கள் வாய்க்கால்களில் நிறைந்து காணப்படுகின்றன. இவற்றை அகற்றுவதில் மாநகர சபை ஊழியர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். பொதுமக்கள் பொறுப்பற்ற விதத்தில் கழிவுகளை கழிவு வாய்க்கால்களில் இடுவதால் இந்த அவலம் ஏற்பட்டு வருகின்றது.

அண்மையில் இங்கு இடம் பெற்ற நிகழ்வொன்றில் இந்தியத் துணைத் தூதுவர் உரையாற்றியபோது யாழ்ப்பாணம் மிகவும் அழகானதொரு இடம். இதற்குத் திருஷ்டிப் பரிகாரமாக வட்டுக்கோட்டைக்குச் செல்லும் வீதியில் கழிவுகள் கொட்டப்படுவது அமைந்துள்ளது எனக் கவலையுடன் தெரிவித்திருக்கிறார். ஆகவே யாழ்நகரையும்,அதன் சுற்றாடலையும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்திருப்பதற்கு இனியாவது நாம் அனைவரும் முன்வர வேண்டும்.

பா.சத்தியன், நீர்வேலி

வாசகர் திருமுகம் பகுதிக்க எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு. புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விபரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒபாமாவுக்கு அடிபணிவதில்லை ரொட்றிக்கோ டுடேர்தே முழக்கம்




லாவோஸ், செப்.7
போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிரான தனது நடவடிக்கைகளில்தலையிடவேண்டாம்எனஒபாமாவை எச்சரித்த பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி டுடேர்தே ஒருபோதும் அமெரிக்காவுக்கு அடி பணியப்போவதில்லை எனவும் குறிப்பிட்டார். சீனாவில் நடைபெற்று வரும் ஜி-20 மாநாட்டில் வைத்தே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பிலிப்பைன்ஸின் ஜனாதிபதியாக சில வாரங்களுக்கு முன்னர் பதவியேற்ற டுடேர்தே, போதைப்பொருள் கடத்தல் காரர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். பதவியேற்ற 24 மணி நேரத்தக்குள், சட்ட நடவடிக்கைகள் இன்றி போதைப் பொருள் சூத்திரதாரிகள் 105 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். மனித உரிமைகள் அமைப்புக்கள் கண்டனங்களைத் தெரிவித்தன. ஆனால், குறித்த கண்டனங்களுக்கு டுடேர்தே செவிசாய்க்கவில்லை. போதைப் பொருள் ஊடுருவலை பிலிப்பைன்ஸுக்குள் கட்டுப்படுத்துவவே தனது பிரதான இலக்கு எனத் தெரிவித்தே டுடேர்தே குறித்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார். பிலிப் பைன்ஸ் மக்கள் பலரும் அவருக்கு ஆதரவாக உள்ளனர். ஆனால் சட்டநடவடிக்கைகளுக்கு எதிரான கொலைகள் தொடர்பாக, பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி டுடேர்தேயை சந்திக்க அமெரிக்க ஜனாதிபதி விருப்பம் தெரிவித்தார். ஆனால் இந்தச் சந்திப்பை ஏற்றுக்கொள்ளாத டுடேர்த்தே அமெரிக்காவுக்கு எதிராக முழங்கித் தள்ளியுள்ளார்.

“ஒபாமா என்னைப்பற்றி என்ன நினைத்திருக்கிறார். நான் அமெரிக்கா ஆட்டி வைக்கும் கைப்பொம்மை இல்லை. நான் இறையான்மையான நாட்டின் ஜனாதிபதி, பிலிப்பைன்ஸ் மக்களைத் தவிர வேறு யாருக்கும் பதில் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. தெற்கு பிலிப்பைன்ஸில் அமைந்துள்ள மண்டனோ தீவைக்குறிவைத்து அமெரிக்கா செயற்படுகிறது. எமது நாட்டை தமது ஆதிக்கத்தினுள் கொண்டுவர அமெரிக்கா முனைகிறது. ஒவ்வொரு நாட்டிலும் காரணமற்ற கொலைகள் இடம்பெறுகின்றன. குற்றத்திற்கு எதிராகச் செயற்படுவதை ஏன் விமர்சிக்கிறீர்கள். அமெரிக்காவில் மனித உரிமைகள் அமைப்பு அகதிகளை எவ்வாறு நடத்துகின்றது என்பதை உலகம் அறியும். பிலிப்பைன்ஸின் நடவடிக்கைகளில் அமெரிக்கா தலையிடுவதை நாம் அனுமதிக்கப் போவதில்லை. அமெரிக்காவுக்கு அடி பணியவும் போவதில்லை” என டுடேர்தே மேலும் தெரிவித்தார். இதனையடுத்து டுடேர்தே – ஒபாமா சந்திப்பை வெள்ளை மாளிகை கைவிட்டது. ஒபாமாவைபெட்டை நாயின் மகன், விபச்சாரியின் மகன் என டுடேர்தே விளித்ததாவும் செய்திகள் வெளியாகியுள்ளன. (ம-ரி4)

## கரீபியன் ஊர்வலத்தில் சூடு இருவர் சாவு; பலர் காயம்

நியூயோர்க், செப். 7
அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இடம்பெற்ற கரீபியன் ஊர்வலத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதில் இருவர் கொல்லப்பட்டனர்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் வருடாவருடம் இந்த ஊர்வலம் நடத்தப்படும். நடப்பு வருடத்துக்கான ஊர்வலம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த ஊர்வலத்தில் அசம்பாவிதங்கள் இடம்பெறுவது வழமையென்றாலும், இம்முறை அவற்றைத் தடுக்கும் முனைப்பில் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் அவற்றையெல்லாம் தாண்டி இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. எவரும் கைதுசெய்யப்படவில்லை. (ம-ரி4)

## மாற்றத்தை விரும்பும் தெ.ஆபிரிக்கா

தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் ஜுமாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தென்னாபிரிக்காவின் பொருளாதார நிலமை பலவீனமடைந்து வருகிறது. ஏராளமான இளைஞர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் தவிக்கிறார்கள். அதிபர் ஜேக்கப் ஜுமாவுக்கு நிர்வாகத் திறமை இல்லை என்றும், ஊழலில் ஈடுபடுகிறார் என்றும் குற்றம் சாட்டப்பட்ட நிலையில் அவரைப் பதவி விலகக்கோரி ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆளும் கட்சியினரும் ஜுமா பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தினர். (ம-ரி4)




## சிரிய அரச பகுதியில் ஐ.எஸ்ஸின் தாக்குதலில் 43 பேர் பரிதாபச் சாவு

டமஸ்கஸ், செப். 7
சிரிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு நேற்றுமுன்தினம் ஐந்து கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தியதில் 43 பேர் சாவடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடாக அறிவித்துள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு. ஏனைய பகுதிகளையும் கைப்பற்றும் நோக்கில் சீரான இடைவெளியில் கண்மூடித்தனமான தாக்குதல்களை அரங்கேற்றி வருகிறது. சிரிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ரறோவஸ், ஹோம்ஸ், டமஸ்கஸ் ஆகிய நகரங்களில் நேற்றுமுன்தினம் குறித்த அமைப்பு ஐந்து தாக்குதல்களை முன்னெடுத்ததாக அறியவருகிறது. இதில் ஒட்டுமொத்தமாக 43 பேர் சாவடைந்தனர். குறித்த தாக்குதல் சிரிய அரசால் வெளிப்படுத்தப்பட்ட நிலையில், ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றது. (ம-ரி4)

## மூளையைத் துளைத்தது குச்சி; இளைஞர் உயிர்தப்பிய அதிசயம்



அமெரிக்காவில் இளைஞர் ஒருவரின் மூளையில் 9 சென்ரிமீற்றர் குச்சி சிக்கியிருந்தும், அவர் உயிர்பிழைத்த சம்பவம் மருத்துவ உலகில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

அமெரிக்காவின் அரிசோனா பகுதியில் உள்ள சீன உணவகத்திற்கு குறித்த 23 வயது இளைஞன், அவரது சகோதரருடன் சென்றுள்ளார். உணவு வருவதற்காக காத்திருந்த போது இருவரும் ஏதோ வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இது கைகலப்பாக மாற, இருவரும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர். அப்போது அந்த இளைஞனின் சகோதரர் சாப்பிடுவதற்கு உபயோகிக்கும் குச்சியைக் கொண்டு இளைஞனின் தலையைத் தாக்கியதாக அறியவருகிறது. இதனால் குச்சி அவரது தலைக்குள் சென்று மூளையைத் துளைத்துள்ளது. ஆனாலும் அவர் சாவடையாமல் உயிர் பிழைத்த சம்பவம் மருத்துவ உலகில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

## அன்னியர்களின் குடியுரிமையை கட்டுப்படுத்துகிறார் திரேசா மே

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறிய பின்னர், அன்னியர்கள் குடியேறுவதை இயலுமானவரை கட்டுப்படுத்தப் போவதாக பிரிட்டன் பிரதமர் திரேசா மே வெளிப்படுத்தினார். ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகுவதற்கு அந்நாட்டு மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. மக்கள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா வெளியேறுவதற்கு ஆதரவாக வாக்களித்தனர். அயல் நாட்டு மக்கள் பிரிட்டனுக்குள் குடியேறுவதால் பிரிட்டன் மக்களின் வேலைவாய்ப்பு, கல்வி வாய்ப்பு என்பன பாதிக்கப்படுவதாலேயே பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையிலேயேதிரேசாமேஅன்னிய நாட்டவர்களுக்கு குடியுரிமைழங்குவது தொடர்பாக தனது கருத்தை வெளிப்படுத்தினார். ‘பிரிட்டனுக்குள் அன்னிய நாட்டவர்கள் குடியேறுவதால் பிரிட்டன் மக்களின் வாய்ப்புக்கள் பறிக்கப்படுகின்றன. எனவே தான்ஐரோப்பியஒன்றியத்திலிருந்து நாம் விலக நேரிட்டது. விலகியதும் பிரிட்டன் குடியுரிமை அயல் நாட்டவர் களுக்கு வழங்கப்படுவதில் கடும் நிபந்தனைகள் விதிக்கப்படும்” என திரேசா மே தெரிவித்தார். ஜி-20 மாநாட்டிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெள்ளக்காடான தேசம்

# வடகொரியாவில்
# கொட்டித் தீர்க்கிறது மழை
# இதுவரை 66 பேர் சாவு

பியாங்யாங், செப். 7
வட கொரியாவில் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் இதுவரை 66 பேர் சாவடைந்துள்ளதுடன் 44 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.
வடகொரியாவில் கடந்த சில நாள்களாக கடும் மழை பெய்து வருகிறது. இதனால் அந்த நாட்டின் பெரிய ஆறுகளில் ஒன்றான ரூமன் ஆறு நிரம்பியது. இதனையடுத்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு பலரையும் காவு கொண்டது. இதுவரை 66 பேர் சாவடைந்துள்ளனர். 15 பேர் காணாமல் போயுள்ளனர் என வடகொரிய அரசு அறிவித்தது.
45 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மழை தொடர்ந்தும் பெய்வதால் போக்குவரத்துப் பாதைகளும் துண்டாடப்பட்டுள்ளன. எனவே இடம்பெயர்ந்த மக்களுக்கான உணவு, உடை மற்றும் அத்தியாவசியமான பொருள்களை வழங்குவதிலும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக அறியவருகிறது.
கிட்டத்தட்ட 10 ஆயிரம் ஹெக்ரெயர் விவசாய நிலமும், 9 ஆயிரம் கட்டடங்களும் நீரில் மூழ்கின. இதனால் மழை ஓய்ந்த பிற்பாடு வடகொரியாவுக்கு பெரும் பொருளாதாரச் சிக்கல் ஏற்படும் எனக் கருதப்படுகிறது. (ம-ரி4)

## கட்டுப்படுத்தப்பட்டது பிரான்ஸ் காட்டுத் தீ

பாரிஸ், செப். 7
பிரான்ஸின் தென் பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக குறித்த நாட்டின் தீயணைப்புப் படை அறிவித்தது.
கடந்த சில நாள்களாக தொடர்ந்த இந்தக் காட்டுத் தீ, குறித்த பகுதியில் ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பை எரித்து சாம்பலாக்கியது.
இந்த நிலையில் தீ தொடர்ந்தும் பரவாமல் நேற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. பிரான்ஸின் தீயணைப்புப் படை இதை உறுதிப்படுத்தியது. இருப்பினும் அங்குள்ள தட்ப வெப்ப சூழல் மீண்டும் காட்டுத் தீயை தோற்றுவிக்கலாம் எனவும் அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்தனர். (ம-ரி4)

## இலத்திரனியல் சாதனங்களை கண்டுபிடிக்கும் மோப்ப நாய்கள்

வொஷிங்டன், செப். 7
குற்றங்களைப்புரிய உபயோகிக்கும் இலத்திரனியல் சாதனங்களையும் கண்டு பிடிக்கும் மோப்பநாய்கள் அமெரிக்க பாதுகாப்புப்படையில் இணைக்கப்பட்டுள்ளன.
குற்றவாளிகளைக் கண்டறிய நாய்களைப் பயன்படுத்துகின்ற போதிலும் அவை குற்றவாளிகள் பயன்படுத்திய இலத்திரனியல் சாதனங்களை அறிகின்ற மோப்பத் திறன் வாய்ந்தவையாக இருந்ததில்லை. இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில், விசேட பயிற்சிகள் வழங்கப்பட்ட 24 நாய்கள் அமெரிக்க பாதுகாப்புப் படையில் இணைக்கப்பட்டன. அதிலும் குறிப்பாக ஏர்ள் எனும் பெயருடையநாய் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. 18 மாதங்கள் நிரம்பிய இந்த நாய், பல விசாரணைகளில் குற்றவாளிகளின் இலத்திரனியல் சாதனங்களை ஏற்கனவே கண்டுபிடித்து திருப்பு முனையை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ம-ரி4)



ஏர்ள்



## துபாய் பன்னாட்டு விமானநிலையம்
### பயணிகள் போக்குவரத்தில் சாதனை

ஐக்கிய அரபு இராச்சியத்தில் உள்ள துபாய் பன்னாட்டு விமான நிலையம் பயணிகள் போக்குவரத்தில் பெரும் சாதனை படைத்துள்ளது.
குறித்த விமான நிலையத்தில் கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் 76 லட்சத்து 20 ஆயிரம் பயணிகள் வந்து சென்றுள்ளதாக அறியவருகிறது. இது முன்னைய மாதங்களின் பயன்பாட்டை விட 14 சதவீதம் அதிகமாகும். ஜூலையில் ரம்ழான் நோன்பு நாள்கள் இருந்துள்ளதாலேயே பயணிகள் போக்குவரத்து வழக்கத்தை விட அதிகமாக இருந்ததாக விமான நிலைய நிர்வாகம் தெரிவித்தது.
பன்னாட்டளவில் துபாய் விமான நிலையம் எப்போதும் பயணிகள் போக்குவரத்தில் முன்னணி வகித்து வருகிறது. மேலும் வர்த்தகர்கள், சுற்றுலாப் பயணிகள் என்று பல தரப்பட்டவர்களும் துபாய் வழியாக செல்வதை விரும்புகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-ரி4)

## வடக்கு ஈராக்கில் துருக்கி தாக்குதல்

பக்தாத், செப். 7
குர்திஸ் ஆயுதக்குழு முகாமிட்டிருக்கும் ஈராக்கின் வடபகுதியில் துருக்கிப் போர் விமானங்கள் தொடர்ச்சியாக 12 தாக்குதல்களை நடத்தின.
கடந்த சில வாரங்களாக குறித்த பகுதியில் குர்திஸ் அமைப்பினரின் நடமாட்டம் கண்காணிக்கப்பட்டு வந்ததாகவும், இதனையடுத்தே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் துருக்கி இராணுவம் அறிவித்தது.
இருப்பினும் உயிர், பொருள் சேதங்கள் பற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை. (ம-ரி4)



## விமான ஓடுபாதையில் விநோத ஆர்பாட்டம்

லண்டன், செப்.7
ஆபிரிக்கர்களுக்கு எதிரான நிறப்பாகுபாட்டைக் கண்டித்து லண்டன் விமான நிலைய ஓடுதளத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.
'கறுப்பினத்தவர்கள் பிரச்சனைகளுடன் வாழ்கிறார்கள்' என்ற வாசகம் எழுதிய பாதாகைகளை ஏந்தியவாறு **நேற்றுக் காலை 5 மணியளவில்** இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.
சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அவர்களைக் கைது செய்தனர். இந்த அசாதாரண சூழ்நிலையை அடுத்து குறித்த விமான நிலையத்தில் தரையிறங்க இருந்த விமானங்கள் திருப்பி அனுப்பப்பட்டன. (ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## மரணஅறிவித்தல்



தோற்றம் 04 . 04 . 1929
மறைவு 04 . 09 . 2016

திருமதி
**நாகேஸ்வரி அம்மா வெற்றிவேலு**
(ஓய்வு பெற்ற ஆசிரியர் -சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கு, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி அம்மா வெற்றிவேலு 04.09.2016 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வெற்றிவேலு (முன்னாள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சேனாதிராஜா - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பூலோகசிங்கம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற லதா சிவகுமார் மற்றும் அசோகன்(லண்டன்), குமாரன்(கனடா), ராதாகிருஷ்ணன் (ஐக்கியஅமெரிக்கா), Dr.செல்வரஜனி(களுத்துறை அரசினர் வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் P.K.சிவகுமார்(கனடா), புவனேஸ்வரி (லண்டன்), வாசுகி (கனடா), தாரணி (ஐக்கியஅமெரிக்கா), Dr.முகுந்தன் (காலி அரசினர் பொது வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஹரிசரவணா, சிந்திவைதேகி, கரிகஜன், அரன்செந்தூரன், விதுஷா, ஹிமவான்,சாம்பவி, வருண், ஜீவன், கீர்த்தனா, கீர்த்திகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2016) புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காந்தாளம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

" சிவனகம் "
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
73/34, A Saranangara place,
Sri saranangara Road, Dehiwela.
Dr.Selvi Vettivelu.

தகவல்
குடும்பத்தினர்.

தொடர்பு: 077 323 0215



# அமுதை ஒத்த தமிழை அழிய விடுதல் நியாயமா?

சேரலாதன்

"தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று அழகாகப் பாடினார் பாவேந்தர் பாரதிதாசன். தமிழ் மொழியின் பெருமையைக் கூறுவதற்கு பாவேந்தரின் பாடல் வரிகளே போதுமானது. வேறொன்றும் தேவையில்லை.

தமிழர்களென எம்மை அடையாளப்படுத்திக் காட்டுவது நாம் பேசுகின்ற தமிழ்மொழிதான். மிகவும் தொன்மையான மொழிகளில் ஒன்றான எமது தமிழ்மொழி 'செம்மொழி' என்ற அதியுயர்ந்த அந்தஸ்தையும் பெற்றுள்ளது. உலகின் பல நாடுகளில் ஏராளமான மக்களால் பேசப்படுகின்ற ஆங்கில மொழியால் கூட இத்தகைய பெருமையை அடைந்து விட முடிவில்லை. இலத்தீன், சமஸ்கிருதம் உள்ளிட்ட விரல் விட்டு எண்ணக் கூடிய சில மொழிகளுக்குத்தான் செம்மொழி என்ற அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது.

இன்று தமிழைப் பேசுகின்ற தமிழர்கள் உலகின் பல நாடுகளிலும் பரந்து வாழ்கின்றனர். இவர்கள் வெவ்வேறு காலகட்டங்களில் பிறநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து வாழத் தலைப்பட்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டிலிருந்து கூலித் தொழிலாளர்களாக அழைத்துச் செல்லப்பட்ட தமிழர்கள் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வருவதையும் காண முடிகின்றது. பிஜி, மொறி சியஸ் ஆகிய நாடுகளில் உள்ள கரும்புத் தோட்டங் களில் வேலை செய்வதற்கென அழைத்துச் செல்லப்பட்ட அவர்கள் மிகக் கடுமையாக உழைக்க வேண் டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப்பட்டனர். அங்கு கரும்புகள் மட்டும் பிழியப்படவில்லை. இந்த அப்பாவித் தமிழர்களும் கடுமையான வேலைகள் வழங்கிப் பிழிந்தெடுக்கப்பட்டனர். இலங்கைத் தீவிலே தேயிலை மற்றும் இறப்பர்த்தோட்டங்களை அமைப்பதற்கென ஆங்கிலேயரால் அழைத்து வரப்பட்ட இந்தியத் தமிழர்கள் ஆரம்பத்தில் எதிர்கொண்ட பிரச்சினைகள் மிகக் கடுமையானவை. மழையிலும், குளிரிலும், வெயிலிலும் இவர்கள் கடுமையாக உழைப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். சரியான உணவு கூட இவர்களுக்குக் கிடைக்கவில்லை. இவர்களுக்கு வழங்கப்பட்ட வீட்டு வசதிகள் மிகவும் மோசமானவை. தகரத்தாலான லயன் தொடர் குடியிருப்புக்களில் இவர்கள் முடங்கிக் கிடந்தனர். இந்த நிலை இன்னமும் தொடர்கின்றது.

இலங்கையில் குழப்பங்கள் ஆரம்பித்தும் தமிழர்கள் வேறு நாடுகளுக்குப் புலம் பெயர்ந்து செல்ல ஆரம்பித்துவிட்டனர். அகதிகள் என்ற அந்தஸ்தும் இவர்களுக்கு வழங்கப்பட்டது.

இலங்கைக்கு மிக அருகில் அமைந்துள்ள இந்தியாவுக்குச் செல்வதைவிட மேலை நாடுகளுக்குச் செல்வது அதிக பொருளாதார நன்மைகளை ஏற்படுத்துமென அவர்கள் நம்பியது வீண் போகவில்லை. வெளிநாட்டுக் குடும்பங்கள் என்ற அடைமொழியுடன் அழைப்பது இங்கு உருவாகிவிட்டது. இந்தக் குடும்பங்களுக்கு சமுதாயத்தில் தனி அந்ததஸ்தும் கிடைத்துவிட்டது. ஏழ்மை நிலையில் இருந்த பல குடும்பங்கள் வெளிநாட்டுப்பணத்தால் செழிப்புடன் காணப்படுகின்றன.

இலங்கையிலே நடந்த கொடிய போர் மொழிக்கானது. இதனால் தமிழர்கள் எதிர்கொண்ட இழப்புக்கள் ஏராளம். மொழியை இழந்து விட்டால் இனமே அழிந்து விடும் என்பது தமிழர்களின் அசைக்கமுடியாத நம்பிக்கையாக இருந்தது.

ஆனால், தமிழர்களே தமது மொழியையும், கலாசாரத்தையும் உதாசீனம் செய்து வருவதைப் பார்க்க முடிகின்றது. தமது இளம் சிறார்களுக்கு ஆங்கில மொழியில் கல்வியை வழங்க வேண்டுமென்ற நோக்கம் தமிழ்ப் பெற்றோரிடத்தில் வலுப்பெற்று நிற்கின்றது. தமது பிள்ளைகள் தமிழில் பேசுவதை விடுத்து ஆங்கிலத்தில் உரையாடுவதை இவர்கள் பெருமையாகக் கருதுகின்றனர்.

இதைவிடத் தமிழில் உரையாடுவதைத் தவிர்த்து பிற மொழிகளைப் பயன்படுத்துவதைச் சிலர் விரும்புகின்றனர். படித்த தமிழரெனத் தம்மைக் கூறிக் கொள்பவர்கள் இதில் அடங்குவதைக் காணமுடிகின்றது. மொழி என்பது ஒருவர் தமது எண்ணங்களை வேறொருவருடன் பகிர்ந்து கொள்வதற்கு உதவுகின்ற ஒரு சாதனமாகும். தமிழர்கள் இருவர் சந்திக்கும்போது தமிழில் கதைப்பதே இலகுவானது. இதை விடுத்து இந்த இருவரும் அந்நிய மொழியொன்றில் உரையாடுவதற்கு முயல்வது கேலிக் கூத்தாகும்.

தற்போது ஒளிபரப்பப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்கூட தமிழ்க் கலாசாரத்தைச் சிதைப்பவையாகவே உள்ளன. நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள் அணிகின்ற ஆடைகள் தமிழ் கலாசாரத்துக்கு விரோதமாகக் காணப்படுவதுடன் தமிழ்மொழியும் புறக்கணிக்கப்படுவது கண்டிக்கத்தக்கது. நல்ல தமிழில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒளிபரப்பும்போது அதனைப் பார்க்கின்ற இலட்சக்கணக்கானவர்கள் பயன் பெறுபவர்கள். தமிழை வளர்ப்பதற்குத் தொலைக்காட்சி களும் உதவ முடியும்.

எல்லாவற்றுக்கும் மேலாக புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழர்களின் நிலைதான் பரிதாபகரமாக உள்ளது. மொறிசியஸ், பிஜி ஆகிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழர்கள் தமது தாய்மொழியை மறந்து அதைப் பேசுவதற்கே இயலாத நிலையில் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அங்கே தமிழ்ப் பாடசாலைகள் இல்லாதது பற்றியும் தகவல்கள் வெளிவந்துள்ளன. காலப் போக்கில் தமிழர்கள் என்ற அடையாளமே இந்த நாடுகளில் இல்லாமற்போகும் அபாய நிலை ஏற்படப் போகின்றது.

யாழ்ப்பாணதில் உள்ள ஓர் ஊரில் அண்மையில் கண்ட ஒரு காட்சியை இங்கு எடுத்துக் கூறுவது பொருத்தமாக இருக்கும். ஓர் ஒழுங்கையில் வெளிநாட்டில் இருந்து வந்த சிறுவன் ஒருவன் சைக்கிளை ஓட்டிக் கொண்டிருந்தான். அவனுக்கு வழியைக் காண்பிப்பதில் இங்குள்ள சிறுவர்கள் இருவர் ஈடுபட்டிருந்தனர். இவர்களின் வாயிலிருந்து றைற், லெப்ற், ரேண் ஆகிய வார்த்தைகள் வெளி வந்து கொண்டிருந்தன. சைக்கிளை ஓட்டிய சிறுவனும் அதற்கு ஏற் றாற் போன்று சைக்கிளைத் திருப்பியும் வெட்டியும் செலுத்திக் கொண்டிருந்தான். இதிலிருந்து ஒன்று புரிந்தது. அந்தச் சிறுவனுக்குத் தமிழ் தெரியாது என்பதுதான் அது. புலம்பெயர்ந்து வாழ்கின்ற இளம் சந்ததியினர் தமிழை நன்கு தெரியாத நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பது எதிர்காலத்தில் மோசமான விளைவுகளை ஏற்படுத்திவிடப் போகின்றது.

மகாகவி பாரதியார் தமிழ் மொழியை இவ்வாறு விதந்து கூறுகின்றார்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ சொல்வீர்
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

ஆனால் தமிழர்களாகிய நாம் உயிரினும் மேலான எமது மொழியை மறந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். இந்த நிலை தொடருமாயின் தமிழ் மொழியின் எதிர்காலமே இருண்டு போய்விடும்.

இன்று தமிழைப் பேசுகின்ற தமிழர்கள் உலகின் பல நாடுகளிலும் பரந்து வாழ்கின்றனர். இவர்கள் வெவ்வேறு காலகட்டங்களில் பிறநாடுகளுக்குப் புலம் பெயர்ந்து வாழத் தலைப்பட்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டிலிருந்து கூலித் தொழிலாளர்களாக அழைத்துச் செல்லப்பட்ட தமிழர்கள் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வருவதையும் காணமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைவ ஆலயங்கள் நிறையப் பெற்ற அரியாலைக் கிராமம்

கலாபூசணம் சி.சிவதாசன்

யாழ்ப்பாண மாநகர சபையினதும், நல்லூர் பிரதேச சபையினதும் நிர்வாகப் பிரிவுகளை உள்ளடக்கிய உள்ளூராட்சி அமைப்பின் கீழ் இயங்கிவரும் சுமார் முப்பத்தைந்து சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டிருக்கும் கிராமம் அரியாலைக் கிராமம் ஆகும். முன்னவர்களால் கிழக்குப் பிரிவு, மத்திய பிரிவு, மேற்குப் பிரிவு என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருந்த இந்தக் கிராமம், தற்பொழுது எட்டுக்கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்டுள்ளபோதும், கிழக்கு, மத்தி, மேற்கு என அழைக்கப்பட்ட பிரிவுகள் இன்னமும் அழியவில்லை. யாழ்.மாவட்டச் செயலரின் கீழ்வரும் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் இந்தக் கிராமம் உள்ளது. யாழ். மாவட்டத்தின் பிரதான நுழை வாயிலில் அமைந்துள்ள இந்த அரியாலைக் கிராமம் யாழ்ப்பாணச் சரித்திரத்தோடு பின்னிப் பிணைந்திருப்பது நோக்கற்பாலது. அரியாலை கிழக்கு நிலப்பரப்பானது மணற்றிடலாகவும் நெற்பயிர் விளை நிலமாகவும் சனப் பரம்பல் மிகக் குறைவாகக் காணப்படும் இடமாகவும் உள்ளது. மத்திய, மேற்குப் பிரிவுகள் சனப்பரம்பல் மிகையாகக் காணப்படும் இடங்களாக உள்ளன.

இந்த மூன்று பிரிவுகளுக்குள்ளும் சைவ மக்களால் போற்றி வணங்கப்படும் ஆலயங்கள் எங்கும் பரவலாக நிறைந்து காணப் படுகின்றன. பிள்ளையார் ஆலயங்கள், அம்மன் ஆலயங்கள், வைரவர் ஆலயங்கள் என்பன மிகக் கூடுதலாக இந்தக் கிராமத்தில் அமைந்திருக்கின்றன. இந்த ஆலயங்களை மூன்று வகையாகக் கொள்ள லாம். கொடியேற்றத்துடன் வருடாந்த திருவிழாக்கள் இடம்பெறுகின்ற ஆலயங்கள் வருடாந்தம் அலங்காரத் திருவிழாக்கள் நடைபெறும் ஆலயங்கள் இவை இரண்டும் இடம்பெறாமல் நித்தியபூசை, விசேட தினப் பூசைகள் இடம்பெறும் ஆலயங்கள் என்பனவே இவையாகும். பெரும்பாலும் பிராமணர்களால் பூசைபரிபாலனம் செய்யப் படும் ஆலயங்கள் இருந்தபோதும், சமய தீட்சை பெற்றவர்களால் பூசை பரிபாலனம் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆலயங்களும் இந்தக் கிராமத்திலிருக்கின்றன. கிட்டத்தட்ட அறுபதுக்கும் மேலான சைவ ஆலயங்கள் காணப்படுகின்றன. இனிமேல் இந்தக் கிராமத்தின் ஆலயங்கள், அவற்றின் சிறப்புத் தன்மை பற்றி இங்கு நோக்குவோம்.

### பிள்ளையார் (விநாயகர்) ஆலயங்கள்

அரியாலைக் கிழக்குப் பிரிவில் முத்து விநாயகர் ஆலயம், துரவடிப்பிள்ளையார் ஆலயம், கொட்டுக்கிணற்றுப்பிள்ளையார் ஆலயம், நாவலடிப்பிள்ளையார் ஆலயம், அற்புத விநாயகர் ஆலயம் ஆகிய ஐந்து ஆலயங்களும் சித்தி விநாயகர் ஆலயம் மத்திய பிரிவிலும் இருக்கின்றன. இந்த இரு பிரிவுகளிலும் மொத்தமாக ஆறு ஆலயங்கள் இருக்கின்றபோதும், மேற் குப் பிரிவில் பிள்ளையாருக்கென தனி ஆல யங்கள் எதுவுமில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மத்திய பிரிவில் இருக்கும் சித்திவிநாயகர் ஆலயம் இலங்கையில் பிரசித்தி பெற்ற ஆலயமாகும். இந்த ஆலயத்தில் வருடம் தோறும் ஆவணி மாதத்தில் கொடியேற்றத் துடன் மகோற்சவம் இடம்பெறுகின்றது. தொடர்ந்து பத்துத்தினங்கள் மகோற்சவம் இடம்பெறும் இந்த ஆலயத்தில் தேர்த்த திருவிழா அன்று விநாயகப் பெருமான், சித்திரத்தேரிலும் முருகப் பெருமான், சண்டேஸ்வரர் ஆகிய தெய்வங்கள் தனித் தனியே கட்டுத் தேர்களிலும் வீதி வலம் வருவதைக் காணலாம். இந்த நிகழ்வானது இந்த ஆலயத்தின் சிறப்பம்சமாகும். மேலும் முத்து விநாயகர் ஆலயம், துரவடிப் பிள்ளையார் ஆலயம், கொட்டுக் கிணற்றுப்பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றில் வருடாந்தம் அலங்காரத் திருவிழாக்கள் இடம்பெற்று வருகின்றன.

### அம்மன் ஆலயங்கள்

இந்த அரியாலைக் கிராமத்தில் மிகக் கூடுதலானவை அம்மன் ஆலயங்களே ஆகும். ஸ்ரீநாகபூசணி அம்மன் ஆலயம், முத்து மாரி அம்மன் ஆலயம், ஆலடி ஸ்ரீ நாகம்மாள் ஆலயம், நாச்சியம்மன் ஆலயம், நாகபூசணி அம்மன் ஆலயம் ஆகிய ஐந்து ஆலயங்கள் அரியாலை கிழக்குப் பிரிவிலும், ஸ்ரீகௌரிகண்ணகை அம்மன் ஆலயம், பத்திரகாளி அம்மன் ஆலயம், ஆகிய நான்கு ஆலயங்கள் மத்திய பிரிவிலும், பிரப்பன்குளம் மகா மாரி அம்மன் ஆலயம், வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாள் ஆலயம், சிவகாமி அம்மன் ஆலயம், பத்திரகாளி அம்மன் ஆலயம், ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் ஆலயம் ஆகிய ஐந்து ஆலயங்கள் மேற்குப் பிரிவிலும் இருக்கின்றன. இவற்றில் பிரப்பன் குளம் மகாமாரி அம்மன் ஆலயம், வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் என்பன முன்னர் நாச்சியம்மன் ஆலயங்களாக இருந்தன. பின்னர், இவை புனருத்தாரணம் செய்யப்பட்டு இந்த ஆலயங்களாக மாற்றம் செய்யப்பட்டன. மேற்குப்பிரிவில் காணப்படும் சிவகாமி அம்மன் ஆலயமும் மத்தியபிரிவில் இருக்கும் இராஜஇராஜேஸ்வரி அம்மன் ஆலயமும் முன்னர் பேச்சி அம்மன் ஆலயங்களாக இருந்து, பின்னர் மேற் குறிப்பிட்ட ஆலயங்களாக மாற்றம் செய்யப்பட்டவையாகும். அரியாலை மேற்கிலிருக்கும் ஸ்ரீசரஸ்வதி அம்பாள் ஆலயம் இலங்கை வரலாற்றில் முதன் முதலாக அமைக்கப்பட்ட சரஸ்வதிக்குரிய ஆலயம் ஆகும். சரஸ்வதி அம்பாளுக்கென எங்கும் ஆலயங்கள் அமைக்கப்படுவதில்லை. இலங்கையில் இருக்கும் தனியான சரஸ்வதி ஆலயம் அரியாலையில் மட்டுமே உள்ளது. தற்பொழுது தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் அருகிலும் சரஸ்வதி அம்பாள் ஆலயம் இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அரியாலை மேற்கில் இருக்கும். பிரப்பன்குளம் மகாமாரி அம்மன் ஆலயத்தில் ஆடிமாதத்தில் தொடர்ந்து பதினைந்து நாள்கள் வருடாந்த மகோற்சவம் இடம்பெறும். அதேபோல அரியாலை மத்திய பிரிவில் காணப்படும் இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்திலும் ஆடிமாதத்தில் பத்து நாள்கள் வருடாந்த மகோற்சவம் இடம் பெறும். வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் வருடந் தோறும் அலங்காரத் திருவிழா இடம்பெற்று வருகின்றது.

அண்ணமார் ஆலயங்களும் இந் தக் கிராமத்தில் இரண்டு இருக்கின்றன. ஒன்று அரியாலை கிழக் குப் பிரிவான நாவலடி என்னும் இடத்திலும் மற்றையது மேற்குப் பிரிவில் புங்கன் குளத்துக்கு அண்மையிலும் இருக்கின்றது. ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம் அரியாலை கிழக்குப்பிரிவில் ஆலடி யில் அமைந்தி ருக்கிறது. நாகதம்பிரானுக்கு இந்தவொரு ஆல யமே அரியாலைக் கிராமத்தில் உள்ளது.

### வைரவர் ஆலயங்கள்

அரியாலைக் கிராமத்தின் பல இடங்களில் வீட்டு வளவுகளில், தெருமுனைகளில், வீதியோர பெரிய மரங்களின் கீழ், வைரவக் கடவுளுக்கு சிறு ஆலயங்கள் எங்கும் இருக்கின்றபோதும் பெரிய ஆலயங்களாக இருக்கும் வைரவர் ஆலயங்களைப் பற்றித் தெரிந்து கொள்வோம். அரியாலை கிழக்குப் பிரிவில் அத்தியடி வைரவர் ஆலயம் ஒன்றும், அரியாலை மத்திய பிரிவில் நரசிம்ம ஞான வைரவர் ஆலயம், கொட்டையடி ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம், மதிப்பங்குளம் ஞான வைரவர் ஆல யம், பட்டாணி வைரவர் ஆலயம், இராமநாதன் வீதி ஞான வைரவர் ஆலயம், அக்கினி வைரவர் ஆலயம், முத்து வைரவர் ஆலயம் ஆலயம் என ஏழு ஆலயங்களும், மேற்குப் பிரிவில் கச்சேரியடி ஞான வைரவர் ஆலயம், கூரியார் வளவு ஞானவைரவர் ஆலயம், கலைமகள் வீதி ஞானவைரவர் ஆலயம் ஆகிய மூன்று ஆலயங்களும் உள்ளன. இவற்றில் கொட்டையடி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம், கச்சேரியடி ஞானவைரவர் ஆலயம் ஆகியவற்றில் வருடாந்தம் அலங்கார உற்சவங்கள் இடம் பெற்று வருகின்றது.

### முருகன், சிவன் ஆலயங்கள்

முருகன் ஆலயம் என தனியான ஆலயம் கிழக்கு அரியாலையில் ஒன்றுள்ளது. மத்திய மேற்குப் பிரிவுகளில் முருகக்கடவுளுக்கெனத் தனியான ஆலயம் எதுவுமில்லை.

சைவமக்களின் முழுமுதற் கடவுளாகிய சிவனுக்கு அரியாலை மத்திய பிரிவில் ஒரேயொரு ஆலயம் மட்டும் உள்ளது. இந்த ஆலயமானது சித்திவிநாயகர் ஆலயத்துக்குப் பக்கத்தில் சரிசமமாக அமைந்திருக்கிறது. பழைமை வாய்ந்த இந்த ஆலயத்தில் வருடந்தோறும் பங்குனி மாதத்தில் அலங்கார உற்சவம் பத்துநாள்கள் நடைபெற்று வருகின்றது. விநாயகர் ஆலயமும் சிவன் ஆலயமும் அருகருகே சமமாக அமைந்துள்ளமை சிறப்பு வாய்ந்ததாகும். யாழ்ப்பாண மாவட் டத்தில் இவ்வாறு அமைந்திருக்கும் ஆலயம் ஆனைப்பந்தியில் இருக்கின்றது. இந்த ஆலயத்தின் பெயர் கைலாச பிள்ளையார் ஆலயமாகும். இங்கு சிவனுக்கும் பிள்ளையாருக்கும் தனித்தனியே திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றபோதும், இரண்டு ஆலயங்களும் ஒரே கூரையின் கீழ் இணைந்திருக்கின்றன.

### ஐயனார், அண்ணமார், வீரபத்திரர், நாகதம்பிரான் ஆலயங்கள்

இந்த ஆலயங்கள் பழைமை வாய்ந்த ஆலயங்களாகும். ஐயனார் அண்ணமார் ஆலயங்கள் சிவனைக் குறிப்பனவாக இருந்த போதிலும், ஐயனார், அண்ணமார் பெயர்களோடு ஸ்தாபிக்கப்பட்டவையாகும். அரியாலை கிழக்குப் பிரிவில் முனை என்னும் இடத்திலும், கேணியடி என்னும் இடத்திலும் தனித்தனியே ஐயனார் ஆலயங்கள் உண்டு. அண்ணமார் ஆலயங்களும் இந்தக் கிராமத்தில் இரண்டு இருக்கின்றன. ஒன்று அரியாலை கிழக்குப் பிரிவான நாவலடி என்னும் இடத்திலும், மற்றையது மேற்குப் பிரிவில் புங்கன்குளத்துக்கு அண்மையிலும் இருக்கின்றது. ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம் அரியாலை கிழக்குப்பிரிவில் ஆலடியில் அமைந்திருக்கிறது. நாகதம்பிரானுக்கு இந்தவொரு ஆலயமே அரியாலைக் கிராமத்தில் உள்ளது. வீரபத்திரக் கடவுளுக்கான ஆலயங்கள் அரியாலை கிழக்குப்பிரிவில் புங்கடி என்னும் இடத்தில் ஒன்றும், மத்திய பிரிவில் சுப்பிரமணியம் வீதியில் ஒன்றுமாக இரண்டு ஆலயங்கள் இருக்கின்றன. இங்கு குறிப்பிட்டுள்ள ஆலயங்கள் யாவும் நல்லூர் பிரதேச செயலக இந்து கலாசாரத் திணைக்களத்தில் பதிவு பெற்றவை என் பதுஆய்வின் மூலம் அறியப்பட்டவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொய்யான பக்தி நெறியால் பயனொன்றும் கிடைக்காது

க.நாகேந்திரன்

ஆதியில் மனிதன் தன் அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக்கொண்ட பின்னர், படைப்பின் இரகசியத்தைத் தேடினான். இயற்கையின் மூலாதாரத்தையும் அதன் விளைவாக இறைவனையும் அவன் உணர்ந்தான். பின்னர் இறைவனுக்கும், தனக்கும் உள்ள தொடர்பை - ஆன்மிக சம்பந்தத்தை உறுதி செய்ய இறைவழிபாட்டை ஆரம்பித்தான், அதன் மூலம் மதங்கள் தோன்றின.

இன்று பல்வேறுபட்ட மதங்களும், அவற்றில் உப பிரிவுகளும் எனப் பல வழிமுறைகள் காணப்பட்டாலும் முடிவில் பரம்பொருள் என்பது ஒன்றேயாகும்.

மனித சமுதாயத்திலே நிறம், மொழி, கொள்கை எனப் பல்வகைமை காணப்படும்போது, மதங்களும் அவற்றின் தோற்ற இடத்துக்கு அமைய மாறுபாடுகளைக் கொண்டிருப்பது ஏற்புடையதே. கால ஓட்டத்தில் புதுப்புது சம்பிரதாயங்கள் நம்பிக்கைகள் ஊடுருவி மதங்களுக்கு இடையே சச்சரவுகளையும், பேதங்களையும் உற்பத்தியாக்கி விட்டன.

குறிப்பாக நமது இந்துமதத்தில் நவீன இடைச் செருகல்களால் பிறர் நகைக்கும்படி ஆகிவிட்டது நமது பாரம்பரியம். இறைபக்தி ஆகியவற்றை எளிதாகவும், தெளிவாகவும், உறுதியாகவும் கூறும் நூல் தமிழ் மறை எனப் போற்றப்படும் திருக்குறளாகும்.

அது மதம் சாராதது, உலகப் பொது மறை, அதில் இறைவனை அடையும் வழி இவ்வாறு விளக்கப்பட்டுள்ளது.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு" (350) என்பதனூடாக கடவுளை அடைவதற்கு ஒரேவழி பற்றின்றிக் கருமம் செய்தலே என்பது விளங்குகின்றது. .

ஆதலால், எல்லோரும் பற்றற்ற துறவு நிலை அடைவதுதான் ஒரே வழியெனப் பொருள் கொள்வது தவறாகும். உலகம் பழிக்கும் படியான தீய பழக்கங்களை விடுத்து, வாழ்தல் போதுமானதெனவும், போலியான பக்திவேடம் கொள்ளத் தேவையில்லை எனவும் உணர்த்த இவ்வாறு குறள் தந்தார் வள்ளுவனார்.

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது
ஒழித்தது ஒழித்து விடின்"

இன்று நம்மவர் இறைவனை வசப்படுத்த, தம்மை வருத்துகின்ற பட்டினி, உடல் வருத்துதல், காயப்படுத்துதலில் தமது பக்தியை வெளிக்காட்ட முயல்கின்றனர். உப வாசமிருந்து, உடல் வருந்த தீ மிதித்து, அலகு குத்தினால் ஆண்டவன் மகிழ்வானா? எந்தத் தாய் தன் பிள்ளை துன்பப்படுவதைப் பார்த்து மகிழ்வாள்; இது மடமையாகும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என ஐயமறக்கூறுகிறார் வள்ளுவர். இல்வாழ்க்கை என்ற அதிகாரத்தில் வாழ்வாங்கு வாழ்பவர் யார்? அது எவ்வாறு வாழ்தல் என அவர் விளக்குகிறார் அல்லவா?

கொல்லாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, பிறனில் விளையாமை, அழுக்கறாமை, இன்னாசெய்யாமை, பயனிலசொல்லாமை, பெரியாரைப் பிழை யாமை, பொச்சாவாமை, வெகுளாமை எனப் பல தீய செயல்களைவிட்டொழிதலும். அடக்கம், அறிவுடமை, அவா அறுத்தல், அன்புடமை, இனியவை கூறல், ஈகை, செய்நன்றி அறிதல், நடுநிலைமை வாய்மை என விரிந்து சொல்லும் நல்லொழுக்கங்களை பேணுவதுமே வாழ் வாங்கு வாழுதலாகும். நம்முள் பலர் இல்லா தார்க்கு இரங்க மாட்டார். இறைவனுக்கு எண்ணற்ற காணிக்கைகள், உயிர்ப்பலி உணவு வகை படைத்தல், உயர்ந்த பட்டு ஆபரணம் என உபயங்கள் செய்கிறார்கள். இவற்றால் இறைவன் மகிழ்ந்து அருள் செய்வாரா? கையூட்டுக்குக் கடவுள் கருணை செய்வாரா?

"வேண்டுதல் வேண்டாமை இலான் அல்லவா" இறைவன். இறைவனுக்குப் பசியுண்டா? அப்படி உண்டானால் நம்மால் அதைப் போக்க முடியுமா? அண்டங்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டவர் அல்லவா இறைவன். அவரை அலங்கரிக்க நாம் யார்? சிந்தித்தால் சிரிப்புவராதா? நம் வழிபாட்டு முறை.

"அறவாழி அந்தணன் தாழ் சேர்ந்தார்க்கு அல்லால்
பிறவாழி நீத்தல் அரிது" எனவே அறவழியில் நாம் வாழ்ந்தால் போதும் அதுவே இறை வனை அடைய ஒரேவழி என்பதை உய்த் துணர்ந்து வாழ்வோம்.

> இன்று நம்மவர் இறைவனை வசப்படுத்த, தம்மை வருத்துகின்ற பட்டினி, உடல் வருத்துதல், காயப்படுத்துதலில் தமது பக்தியை வெளிக்காட்ட முயல்கின்றனர், உபவாசமிருந்து உடல் வருந்த தீமிதித்து அல்கு குத்தினால் ஆண்டவன் மகிழ்வானா? எந்தத் தாய் தன் பிள்ளை துன்பப்படுவதைப் பார்த்து மகிழ்வாள் இது மடமையாகும்.

# ஓடி விளையாடு பாப்பா

வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா

அறிவுக்கும், உடலுக்கும் ஒரே நேரத்தில் பயிற்சி அளிப்பது விளையாட்டே. விளையாட்டின் நோக்கம், பொழுது போக்குவது மட்டுமல்ல, அடுத்தவரோடு தோழமை கொள்ளவும், ஓரணி என்ற மனப்பான்மை வளர்ப்பதுடன், நேசத்தையும் தருகின்றது. குழந்தைகள், சிறுவர்கள், ஓட வேண்டும், குதிக்க வேண்டும் துள்ளவேண்டும் ஓடி விளையாடும் குழந்தைதான் உடல் நலத்திலும், கல்வியிலும் மேன்மைபெறும். அதற்காக இன்று பல இடங்களிலும் குழந்தைகள் பூங்கா உருவாகி வருகின்றது. மாலை முழுவதும் விளையாட்டு என்று வழக்கப்படுத்திக் கொள்ளல் அவசியம். தனிப்பட்ட கல்வி நிறுவனம் இதை மனதில் கொண்டு செயற்படல் முக்கியம். ஆசிரியரின் மேற்பார்வையிலே பாடசாலைகளில் விளையாட்டுக்கள் இடம் பெற்றாலும், மாணவத்தினர் விரும்பும் விளையாட்டுக்கள் மட்டும் நன்று. கிரிக்கட், ரெனிஸ், ஹொக்கி, பூப்பந்தாட்டம், கால்ப்பந்தாட்டம் என பலவித விளை யாட்டுக்கள். செல்வத்தால் ஏற்படும் நுகர்ச்சி யாலும் புலமையால் ஏற்படும் அறிவுமுதிர்ச்சியாலும் உள்ள இணைப்பாலும் உள்ளம் ஒத்தாரோடு கூடி ஆடும் விளையாட்டாலும் துன்பம் நீங்கிய மகிழ்ச்சி தோன்றும்.

"செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என்று
அல்லல் நீத்த நான்கே"

தொல்காப்பியம் மெய்11


எனவே மனமகிழ்ச்சி ஊட்டுவதே விளையாட்டு என்பது தெளிவு. வீதி விளையாட்டுக்கள், மகளிரின் கும்மியும், கோலாட்டமும் ஆடவரின் சிலம்பாட்டமும் சிறப்பானவை. பெற்றோர் இளம் பருவத்தினரை விளையாட்டில் ஈடுபாடு கொள்ளச் செய்து ஊக்கமளித்தல் கடன். ஊஞ்சல் எனும் ஊஞ்சலாட்டம் என்பதும் விளையாட்டே. இதில் பெண்களே பங்கேற்பர். மேல்நாடுகளில் பொதுப்பூங்கா[illegible] நீரில் விளையாடுவது நீச்சல் என்பனவும் முக்கியம். இளம் பருவத்தினர் நீச்சல் பயிற்சி பெற்றிருத்தல் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகநாவலரின் தொண்டு

அனோஜா பஞ்சலிங்கம்



*மாந்தளிர் மேனியானை மலர்விழி அழகினானை*
*தீந்தமிழ் வாயினானை செபமணிக் கையினானை*
*காந்த மின்சாரம் போல கவர்ந்திடும் தோற்றத்தானை*
*எத்திசையும் பரவினானை என்னுள்ளே வணங்கினேனே!*

ஈழத்திலே சைவமும் தமிழும் தழைத்தோங்க கந்தப் பிள்ளைக்கும் சிவகாமி அம்மையாருக்கும் யாழ்ப்பாணத்து நல்லூரிலே 1822ஆம் ஆண்டு அவதரித்தார் ஆறுமுகம் எனும் பிள்ளைத்திருநாமம் கொண்ட நாவலர் பெருமான். எமது திருநாட்டிலே போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என அந்நியரின் ஆட்சி நடந்தேறிய காலகட்டத்தில் தமிழும் - சைவமும் தனிப்பெருமையை இழந்து நின்றன. எமது உயிர்நாடிகளான இவ்விருபெரும் துறைகளையும் உயர்த்தி-நிறுத்தி வாழவைத்த பெருமை நாவலரையே சேரும் என்பதில் ஐயமில்லை. தமிழினத்தின் வாழ்வு மறுமலர்ச்சியிலேயே வளர்ந்து உரம் பெற வேண்டும் என்பதில் வெற்றி கண்டார்.

ஈழத்து மக்கள் இந்துமதத்தை அறியாதிருந்தபோது, பிற வேற்று நாட்டவர்கள் இவர்களை தம்மதத்துக்கு இட்டுச் செல்ல முறையற்று முயன்றனர். அந்த முற்சியில் மக்களைப் பழிக்கவும் கோயில்களை இடிக்கவும் செய்தனர். இதனைக் கண்டு உள்ளம் புழுங்கினார். மக்களின் நிலை கண்டு துடிதுடித்தார். மக்களுக்கு எங்கள் சைவத்தின் பெருமையை உணரச் செய்து, வாழவைப்பதே தனது தலையாய கடமை என தன்னலம் துறந்தார். சைவத்தொண்டானார். சைவத் தொண்டுக்கு தமிழைக் கருவியாக்கினார். சைவ நிந்தைகளையும் நிந்தகர்களையும்பிளவுபட இயற்றும் நூலுரைகளையும் வழுநிலைகாட்டிக் கண்டித்தார். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் என பிறமொழிகளையும் கற்று மக்களுக்கு வேண்டியவற்றை இலகுவான மொழிநடையில் எடுத்துக்கூறினார். வசனநடை கைவந்த வல்லாளர் எனப்போற்றும் அளவுக்கு அறநெறிக் கருத்துக்களை எடுத்தியம்பினார். உரை நடையில் நூல்களை வெளியிட்டார். அந்நிய நாட்டவரின் உதவியுடன் அச்சியந்திரத்தை அறிமுகப்படுத்தினார். படித்தவர்கள் மட்டுமல்ல, பாமர மக்களும் விளங்கிக் கொள்ளும் வகையில் நூல்களை வெளியிட்டார். பாலபாடம், பால போதினி, சைவ வினாவிடை போன்றவை பள்ளிப்பருவத்தினருக்குரியவை ஆகும். கோயிற் புராணம், ஆத்திசூடி, கொன்றை வேந்தன், திரு முருகாற்றுப்படை ஆகிய நூல்களுக்கு உரை எழுதினார்.

*"நாவலரை நாம் மறந்தால்*
*நன்றி கொன்ற பழி நம்மைச் சூழ்ந்து கொல்லும்.*
*நாவலரை நாம் நினைத்தால்*
*நன்மை பல பொங்கி நம் வாழ்வு வெல்லும்"*
என்று வித்துவான் வேலன் கூறியுள்ளார்.

*"நல்லை நகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்*
*சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே எல்லவரும்*
*ஏத்துபுராண ஆகமங்கள் எங்கே..."* என்று பேரறிஞர் சி.வை.தாமோதரம்பிள்ளை அழகாகக் கூறியுள்ளார்.

நாவலர் தமது சைவவினாவிடையில் "உலகுக்குக் கர்த்தா யார்? என வினா எழுப்பி, உலகுக்கு கர்த்தா சிவபெருமானே எனும் தேனூறும் விடையையும் ஈந்தருளினார். நாவலர் தமது காலச் சூழலில் உருவானவர். சூழ்நிலை அவரைக்கடமை செய்யத் தூண்டிவிட்டது. சைவச் சூழலில் பிறந்து கிறிஸ்தவ சூழலில் பயின்றவர்.

ஆன்மிக வாழ்வுக்கு அவசியமான நீதிநெறி ஜீவகாருண்யப் பண்பு போன்ற கருத்துக்களை மிகவும் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். பிரசங்கங்கள் நிகழ்த்தியும் திண்ணைப் பள்ளிகளில் சைவம் வளர்த்தும் சைவப் பாடசாலைகளை நிறுவியும் தொண்டு புரிந்தார். பேச்சு வன்மையால் திருவாவடுதுறை ஆதீனத்தால் "நாவலர்" என்ற பட்டம் சூட்டப் பட்டவர். "நாவலரின் ஆளுமை மலையினும் மாணப் பெரிது அது நமையெல்லாம் ஆள வல்லது. கடவுள் ஒருவரே உளர். அவர் நம்மோடு என்றும் உள்ளார். எமக்கு இனிமையாயிருப்பவர். அவருக்கே நாம் உடைமைப்பொருள் என்று உள்ளத்தால் உயர்ந்து கூறியுள்ளார்.

> "நாவலர் பெருமான் எம்முள்ளே, எம்சமூகத்தினுள்ளே, இந்துக்களினுள்ளே வாழ்ந்து கொண்டிருக்கும் மகான் ஆவார். பன்மொழிப் புலமையாளராய் எவர்க்கும் அஞ்சிடாத நெஞ்சத்துணிவினராய் தர்மத்தை நிலை நாட்டும் தற்துணிவாளராய் பல்வேறு சவால்களையும் தனித்து நின்று தாங்கி சைவத்தை மீட்டுக் காத்தவர்."

இவரது பணிகள், சமயப்பணிகள், சமூகப்பணிகள், நூலாக்கப்பணி, பதிப்பாசிரியர் பணி, உரையாசிரியர்பணி என ஆறுவகையில் நோக்கப்பட வேண்டியவை. சைவசமயத்தை நிலைபேறடையச் செய்ய அவர் செய்யத சமயப்பணிகளாக ஆலயங்கள் தோறும் சமயப்பிரசங்கள் நிகழ்த்தியும், புராணபடனம் செய்தல் என்பவற்றைச் செய்தார். இத்துடன் நின்றுவிடாது, சுதேசிகளின் சமய எதிர்ப்புக்களுக்கும் தக்க பதிலடி கொடுத்து கண்டனங்களை எழுதினார். பிரசுரங்கள் வெளியிட்டார்.

கல்விப் பணிகளாக 1849 இல் சைவப்பிள்ளைகள் கல்வி கற்பதற்காக பாடசாலைகளையும் யாழ்ப்பாணத்தில் சைவப் பிரகாச வித்தியாசாலைகளையும் நிறுவினார். 1872 இல் கோப்பாய், புலோலி ஆகிய இடங்களில் சைவப்பிரகாச வித்தியாசாலைகளை நிறுவினார். இதுமட்டுமன்றி தமிழ்நாட்டிலும் சிதம்பரத்தில் சைவப் பிரகாச வித்தியாசாலையை நிறுவி சைவமும் - தமிழும் தழைத்திடச் செய்தவர். மிருக பலியிடலைத் தடுத்து நிறுத்தினார். மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்திலும் வேளாண்மைச் சமூகத்தை உருவாக்கினார். இத்தகைய சமூகப் பணிகளுக்குத் துணையாக பல்வவேறு நூல்களை ஆக்கியும் வெளியிட்டார்.

பாலபாடம் 1ஆம், 2ஆம், 4ஆம், புத்தகம், சைவ வினாவிடை, 1ஆம், 2ஆம், புத்தகம், இலக்கணச் சுருக்கம், இலங்கைப் பூமி சாஸ்திரம், சிவாலய தரிசனம், விதி சிதம்பரமான்மியம், என்பவை நாவலர் பெருமானின் அரிய சொத்துக்கள், சைவ வினா விடை இன்னும் எம்மால் பயிலப்படுகின்றது. எமது சைவத்தை வாழ வைத்த பெருமகான் அவரென்றால் மிகையாகாது. இது மட்டுமன்றி பல பழைமையான நூல்களை மறுபதிப்புச் செய்து, சைவ மாணவர்களைப் பயன் பெறச் செய்தவர். 1849 ஆம் ஆண்டில் நல்லூரில் வித்தியானுபாலன இயந்திர சாலையை நிறுவினார். சூடாமணி, நிகண்டு, திருக்குறள், பரிமேலழகர்உரை, சேது புராணம், 11ஆம் திருமுறை என்பவற்றைப் பதிப்பித்தார். இங்கு மட்டுமன்றி தமிழர் வாழும் தமிழ் நாட்டி லும் வித்தியானு பாலன இயந்திரசாலையையும் முத்தமிழ் விளக்க அச்சுக் கூடத்தையும், வாணி நிவேதன அச்சுக் கூடத்தையும் அமைத்து, நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டார்.

நாவலர் பெருமான் சைவத்தைத் தழைத்தோங்கச் செய்யத் தனியே எமது நாட்டுடன் நின்றுவிடாது, அயல் நாட்டிலும் பணியாற்றியவர். இவரது சிறப்பான பணி உரையாசிரியர் பணி ஆகும். நாவலர் வசனநடை கைவந்த வல்லாளர் என்று போற்றப்படுபவர். அந்தளவுக்கு அவர் எழுதிய உரை நடைகள் சிறப்பு வாய்ந்தவை. பெரியபுராணவசனம் திரு விளையாடல் புராணவசனம், கந்தபுராணவசனம் என்பவையே அவரது வசன நடைக்கு எடுத்துக் காட்டுகளாகும். இன்றும் ஆலயங்களிலே கந்த புராணபடனம் நாவலருடைய வசன நடையே பாராயணமாகக் கூறப்படுவதைக் காண்கின்றோம். வாக்கினில் வைரமும் நெஞ்சினில் நேர்மையும் கொண்ட ஆறுமுகநாவலர் சைவப்பணி தழைத்து ஓங்க நிரம்பிய பணி செய்தமையைப் பற்றி பேரறிஞர்கள் பலரும் எடுத்துக் கூறியுள்ளனர்.

நாவலர் பெருமான் எம்முள்ளே, எம்சமூகத்தினுள்ளே இந்துக்களினுள்ளே வாழ்ந்து கொண்டிருக்கும்மகான் ஆவார். பன்மொழிப்புலமையாளராய் எவருக்கும் அஞ்சிடாத நெஞ்சத்துணிவினராய் தர்மத்தை நிலைநாட்டும் தற்துணிவாளராய் பல்வேறு சவால்களையும் தனித்து நின்று தாங்கி, சைவத்தை மீட்டுக் காத்தவர்.

நாவலரின் இவ்வாறான பணிகள், நாவலரின் இன்னொரு முகத்தை மறைத்துக் கொண்டுள்ளது. ஆறுமுகநாவலர் சாதி வேறுபாடு கொண்டவர். இதை மக்கள் அறிய வாய்ப்புக்குறைவு. ஏனெனில் ஒருவருடைய சிறுமையான பிறழ்வான குணங்களை அவர் செய்த பெரிய பண்புகளை மறைத்தும் - மறுத்தும் விடும் என ஆன்றோர்களும் சான்றோர்களும் கூறுவர். நாவலருடைய விடயத்திலும் அவ்வாறே நடந்தது. சாதி வேறுபாட்டைக் காட்டிய இவருடைய பண்பானது இவர் செய்த உயர் தொண்டுகளால் காலத்துளைகளுக்குள் சென்று மறைந்து விட்டது. எனினும் சைவத்தின் சொத்தாகவும் யாழ். மண்ணின் முத்தாகவும் சமய வாழிடத்தின் வித்தாகவும் மிளிர்கின்றார் நாவலர் பெருமான்.

*"வரம் பெறு வாக்கினானை வஞ்மில் நெஞ்சினானை*
*உயர்சிவசமயம் வாழ நிரம்பிய பணி செய்தானை*
*நீள்தவ வேள்வியானை பரம்பொருள் பற்றினானை*
*பற்றினார் பற்றற்றாரே"*

சைவத்தின் பண்பாடு, கலாசாரம் பேணிப்பாதுகாத்த எம்பெருமான் ஆறுமுகநாவலரின் புகழ் என்றும் எங்கும் தழைத்தோங்க அணி செய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சிவஞானராஜா

# மோர்சிங் இராசா ஓர் அதிரும் கலைஞன்

ஓர் இசையரங்கினில், சக பக்க வாத்தியங்களோடு சரிசமமாக விளங்கி, மேடைக்கும், இரசிகப் பெருமக்களுக்கும் சுவையை அள்ளிக் கொட்டுவது மோர்சிங் என்ற கருவியாகும். கலைமகளின் கிருபா கடாட்சம் இருப்பவர்களாலேயே மோர்சிங் கருவியை வெல்லும் படி வாசிக்க முடியும். "ராசா" காளியின் மீளா அடியவராக நிலைபெற்றிருந்தமையால், சகல சௌபாக்கிய சம்பத்துக்களையும் அவருக்குக் குறைவின்றி காளியம்பாள் வழங்கி வானுயரும் வரமாகி நின்றாள்.

"யாப்பும் பொருளும்
அணியும்
நலம் பெற யாவையுமே,
பாப்பண்ணிசையுடன்
பாடிட
நல்லருள்
பாலிக்குஞ்சொல்
காப்பும் கவசமும்
நீயன்றோ
பத்திர காளியுனைக்
கூப்புங் கரங்கொண்டு
கும்பிட்டேன்
நாவில் கொழி தமிழே!"

என்று "ராசா" தன் குலதெய்வத்தைப் போற்றியும் ஏற்றியும் வழிபட்டதனாலன்றோ அவருக்கு மிருதங்கம், மோர்சிங் மற்றும் விஸ்வகர்ம வேத, புராண இதிகாச, சரித்திர வாலாயங்கள் சித்திபெற்றன என்று சத்தியமாகக் கூறமுடியும்.



செல்லத்துரை-தெய்வானை தம்பதியருக்கு மகனாக இராசா அவதரித்தார். அவர் சிறுவயதிலிருந்தே, பணிவு, பக்குவம், பயபக்தி, பண்பாடு, பரோபகாரம், பட்டறிவு, பரிவு, படிப்பு யாவற்றிலும் சிறந்த அனுசரணை கொண்டிருந்தமையால், கலைமகள் இவரது வீட்டில் குடிகொண்டாள்.

மல்லாகம் ஆங்கிலப் பாடசாலையில் கல்வியைத் தொடரவைத்த இவரது பெற்றோர், உரிய பருவம் வந்ததும், குருகுல சிஷ்ய பாரம்பரிய முறைப்படி, லயப் பிரதான வாத்தியமான மிருதங்கக் கலையை, மிருதங்க லயஞானப் பேரசான் ப.சின்னராசாவிடம் ஒப்படைத்தனர். பணிவின் இருப்பிடமாகிய இராசாவிடம் விரலின் சாகசங்கள் குடிபுகுந்தன. பஞ்சதாள நடைகள், சொற்கட்டுக்கள், தீர்மானங்கள், முத்தாய்ப்புக்கள், விஸ்தாரங்கள், கணக்கு வழக்குகள், உருட்டுப்புரட்டுகள்; சாகித்திய வார்ப்புக்கள், சஞ்சீவி வாசிப்புக்கள், ஜனரஞ்சக வாசிப்புக்கள், சௌக்ககால சௌக்கிய வாசிப்புக்கள் என மிருதங்க லய வினோதங்கள் மிகவும் இராசாவிடம் சரண்புகுந்தன.

### அரங்கேற்றம்

1973 இல் மல்லாகம் காளிகோயிலிலே, வெகு சிறப்பாக, ஜனசமுத்திரமாகத் திரண்டிருந்த மக்களின் பிரசன்னத்துடன் மிரு தங்க அரங்கேற்றம் நடைபெற்றது. மிருதங்க குருவாக விளங்கிய ப.சின்னராசாவின் குருவாகிய ஏ.எஸ்.இராமநாதனே முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்தமை இராசாவின் கலைவாழ்வுக்கு வரம் சேர்த்தது. கூடவே, இசைஞான திலகம் உ.இராதாகிருஷ்ணனின் வயலின் இசைப்பிரவாகம் அரங்கேற்றத்துக்கு வலுச்சேர்த்தது எனலாம். பொன்.புஸ்பரத்தினத்தின் குரல் இசை இராசாவினுடைய விரல்களுக்கு அணிசேர்த்தது. தனது இளமைப் பருவத்தில் மிருதங்கக் கலையையும், மோர்சிங் என்ற அதிரும் கஞ்சக் கருவியையும், பயின்று அரங்கேற்றியவர், ஒப்பற்ற கலைஞனாக, கடந்த மாதம் 15 ஆம் திகதி வரையும் சிரஞ்சீவியாக வாழ்ந்த கலைஞனாகி மிளிர்ந்தார். 1949இல் பிறந்த இவர் அறுபத்தேழு வயதிலேயும் இளமை ததும்பும் இதயமுள்ளவராக சமூகத்தில் சகோதர வாஞ்சையுடையவராகத் திகழ்ந்தார்.

### ஆன்மிகம்

ஆலயத் தொண்டு, திருமுறை பாராயணம், உபவாசமிருந்து இறையுணர்வைப் பகிர்தல், பொங்கல் மடை வைத்தல், கலை வடிவங்களை வடித்தல், பிராமணர்களுக்கு உதவி செய்தல், இசைப்பணியாற்றுதல் போன்ற சுப கைங்கரியங்களை மனம் சளைக்காது ஏற்று நிறைவேற்றி மகிழ்வார். இவருக்குப் பக்கத் துணையாக இவரது மனைவி, பிள்ளைகள், மருமக்கள், உறவினர்கள், அயலவர்கள் என அனைவருமே செயற்பட்டனர்.

### விஸ்வகர்மவீரர்

விஸ்வகர்ம அனுபூதிமான்கள் பிரம்மனால் படைக்கப்பட்டவர்கள் எனப் போற்றப்படுகிறார்கள். இவர்கள் வேதகாலத்துக்கும் முந்தைய மிகத் தொன்மையானவர்கள். நாகரிகங்கள் கூர்மையடைந்து வளர்ந்தாலும், விஸ்வகர்மாக்களின் பங்களிப்பில்லாமல் யாதொன்றுமே அரங்கேற முடியாது. இவர்களது ஐந்தொழில்களான இரும்பு, மர, உலோக, சிற்ப தங்கப் படைப்புக்களினால் தான், ஆன்மிக உலகம் தழைத்தோங்குகிறது. இராசா என்ற அதிருங்கலைஞன், இத்தகு விஸ்வகர்ம வீரராக மிளிர்ந்தமையால், மோர்சிங் கலை இவருக்கு நன்கு வாலாயமாகவும், பரீச்சயமாகவும் அமைந்ததெனலாம். இவர் மோர்சிங் கருவிகளை வடிவமைப்பதிலும், உருவாக்குவதிலும் சிறந்த விற்பன்னராகத் திகழ்ந்தார். இதன் பேறாக தக்குக் கட்டை மோர்சிங், ஹெச்சுக் கட்டை மோர்சிங் ஆகிய இரண்டையும் செய்து, இந்திய நாட்டுக் கலைஞர்களையும் கவர்ந்தார். இவர் தேவார இசையரங்குகளிலும், கர்நாடக இசையரங்குகளிலும், அரங்கேற்றங்களிலும் கூடிய பங்கு ஆற்றியுள்ளார்.

மல்லாகம் காளிகோயிலின் வளர்ச்சியிலும், திருவிழாக்களிலும் அதீத ஈடுபாடு கொண்ட காரணத்தினால், முதலாம் திருவிழா உபயமாக, மிகவும் உன்னதமான கொடித்தம்பம் நாட்டுதலான கைங்கரியங்களை கடந்த மாதம் 10 ஆம் திகதி அன்று மனமுவந்து பொறுப்பேற்றுக்கொண்டார். அந்த வேலைகள் நடைபெற ஆவனபுரிந்தவேளை கடந்த மாதம் 15 ஆம் திகதி அன்றைய பொழுது காளியம்மா தன்னோடிருக்க இராசாவை அழைத்திட அவரும் மறுப்பின்றி,பொறுப்புக்களை வரமாக அளித்து சரணாகதியடைந்தார்.

### இசைப்பணி

குரு இட்ட அன்புக் கட்டளையை மீறாமல் ஆலயங்களில் நடைபெறும் கர்நாடக சங்கீத இசைக்கச்சேரிகளிலே, மோர்சிங், மிருதங்கம் இரண்டையும் எந்த வித பயன் கருதாது வாசித்து வரம் பெறுவார். பண்ணிசை, வாத்திய இசை, மெல்லிசை, கூட்டிசை, பல்லியம், அரங்கிசை, இசைவிழா போன்ற அனைத்து நிகழ்வுகளிலும் பங்காற்றி இசையைப் பேறாக்கியுள்ளார்.

இசைஞான திலகம் உ.இராதாகிருஷ்ணனின் வயலின் சோலோ எங்குநடை பெற்றாலும் இராசாவின் மோர்சிங் கட்டாயம் இருக்கும். மற்றும், வடஇலங்கைச் சங்கீத சபை,இளங்கலைஞர் மன்றம், இரசிக இரஞ்சன சபை, அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம், அளவையூர் இசைக்கலை மன்றம், ஞானோதய சபை, வலி.வடக்குப் பிரதேச சபை, வலிதெற்குப் பிரதேச சபை, நல்லூர் பிரதேச சபை, கலை இலக்கிய மன்றம் ஆகிய பற்பல நிறுவனங்களோடு இணைந்து தமது வாத்தியப் பிரபல்ய பிரவாகங்களை இசையுலகுக்கு வழங்கியுள்ளார்.

ஈழத்து இசைக்கலைஞர்களின் வரலாற்று ஆவணங்களில் இவரது பணி, சில அத்தியாயங்களை நிரப்பிக் கொள்ளும் தகைமைகளையும், தாற்பரியங்களையும் கொண்டுள்ளது. அல்லாமலும், இந்தியக் கலைஞர்கள் பலராலும் பாராட்டப்பெற்றவர்.

1994இல் கம்பன் கழகத்திலும்
1994இல் பல்கலை இசைவிழாவிலும்
1999 இல் சந்நிதி வசந்த ஒலிநாடாவிலும்
2000இல் நாட்டார் இலக்கியப்படைப்பிலும்
2002இல் நல்லை ஆதீன விழாவிலும்
2002இல் திருமுறைப் பெருவிழாவிலும்
2003இல் வலிகாமம் கலாசாரப் பெருவிழாவிலும்
மோர்சிங் வாசித்துத் தன் தனித்துவத்தை நிலை நாட்டினார்.

கலாபூசணம், இசைஞான கலாபமணி, கலைச்சுடர், லயவாருதி ஆகிய பட்டங்களைத் தனதாக்கிய இராசா, அதிரும் மோர்சிங் கலைஞராக வரலாற்றில் இடம் பிடித்து, இசைக்கலைஞர்களுக்கு ஒரு வழிகாட்டியாக என்றும் திகழ்கின்றார்.

அமரர் இராசாவிடத்துக் காணப்பட்ட பணிவு, பக்குவம், பண்பாடு, பயபக்தி ஆகிய சீரிய குணங்களுக்கு மேலுமொரு பட்டம் கௌரவமாக வழங்கி சாந்தி பெறுவோமாக!

# மக்கள் களரியின் நாடகவிழா





மக்கள் களரி நாடக நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நாடகவிழா இந்த முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளதாக அதன் ஏற்பாட்டுக்குழுவினா தெரிவித்துள்ளனர். மூத்த நாடகக்கலைஞரான பராக்கிரம நிரியெல்லவின் ஏற்பாட்டில் நல்லூர், செம்மணி வீதி, சாதனா பாடசாலை வித்தியாலய மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள மக்கள் களரி நகரும் அரங்கில் இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர் வரும் 21ஆம் திகதி புதன்கிழமை வரை தினசரி மாலை 6.30 மணிக்கு இந்த நாடகவிழா நடைபெறவுள்ளது. தமிழ், சிங்கள மொழிகளில் இங்கு நாடகங்கள் அரங்கேற உள்ளன.

இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு பராக்கிரம நிரியெல்ல மற்றும் க.ரதிதரன் ஆகியோர் இணைந்து இயக்கிய வெண்கட்டி வட்டம் நாடக அரங்கேற்றத்துடன் மக்கள்களரி நாடகவிழா ஆரம்பமாகிறது. வெண்கட்டி வட்டம் நாடகத்தை கலாநிதி மா. சண்முகலிங்கன் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். பர்டோல்ட் பிறெச்டின் "கோக்கேசியன் சோக்சர்கள்" நாடகத்தின் பிரதிக்கிணங்க மக்கள் களரியால் உருவாக்கப்பட்ட புதிய நாடகமும் தொடர்ந்து வரும் நாள்களில் பராக் கிரம நிரியெல்ல இயக்கிய சரண்தாஸ், மாயப்பட்டாடை, எருக்கலம் பூ, ஹுணுவட்டய, (சிங்களம்) வகுப்பு மொழி இயக்கம், இரா சையா லோகாநந்தன் இயக்கிய இரும்பில் பொருத்திய இதயம், செல்வராஜ் லீலாவதி இயக்கிய பறையன், திருமதி [illegible] இயக்கிய [illegible] அஜந்தன் சாந்தகுமார் இயக்கிய கல்யாண கதை, ரொனிக்கா சாமலி மற்றும் செல்வராஜ் லீலாவதி இயக்கிய பயணிகள் போன்ற மக்கள்களரியின் நாடகங்கள் அரங்கேறவுள்ளன. யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றம் வழங்கும் ஜோன்சன் ராஜ்குமார் இயக்கிய குசேலர், யாழ்ப்பாணம் நாடகக் கலை அக்கடமி வழங்கும் கருச்சிதைவு, கொழும்பு காண்பியல் மற்றும் ஆற்றுகைகலைகளுக்கான பல்கலைகழகத்தைச் சேர்ந்த மாணவன் தேவிந்த விக்ரமசிங்க இயக்கிய நான் அரைக்கம்பம் போன்ற நாடகங்கள் அழைப்பு நாடகங்களாக அரங்கேறவுள்ளன.

இந்த நாடக விழாவில் 16 ஆம் திகதி அன்று நாடகம், சினிமா இயக்குநர் தர்மசிறி பண்டாரநாயக்க உரு வாக்கிய பாரா தேசிய சொயா என்ற திரைப்படம் காட் சிப்படுத்தப்படவுள்ளது. எதிர்வரும் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் கொழும்பு மன்றத்தின் டிஜிற்றல் சினிமா அக்கடமி ஏற்பாடு செய்துள்ள திரைப்பட விழா, மூத்த திரைப்பட வியலாளர் சுதத் மகதிவுல்வவகேகயின் தலைமையில் இடம்பெறும். இதன் இணைப்பாளர்களாக மக்கள்களரி நாடக குழுவினர்கள் செயற்படுவார்கள்.

வடக்குமாகாண கல்வி, விளையாட்டு அமைச்சு, வடக்கு மாகாண வலய கல்வி திணைக்களம் என்பவற்றின் உதவியோடு இந்த நாடக விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு ஜேர்மனிய தொழில்நுட்ப உதவியாளர் நிறுவனம், ஐரோப்பிய சங்கம் மற்றும் ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞானம் மற்றும் கலாசார நிறுவனத்தின் கீழ் இயங்கும் கலாசார அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் ஆகியன இந்த நாடக விழாவுக்கான அனுசரணையை வழங்கவுள்ளார்கள் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாழ்வியலில் தீப வழிபாடு பெறும் முக்கியத்துவம்

ரூபினி தர்மலிங்கம்

இந்துக்களுடைய வாழ்வியலில் தீப வழிபாடு முக்கியத்துவமுடையதாகக் கொள்ளப்படுகின்றது. வீட்டிலும் சரி, ஆலயங்களிலும் சரி தீபம் ஏற்றி வழிபடும் முறை இந்துக்களுடைய பாரம்பரியங்களில் ஒன்றாகும். பூஜை அறையில் இறைவனை வழிபாடு செய்யும்போது வேண்டுதல்களை இறைவனிடத்தில் கொண்டு சேர்ப்பிக்கும் கடவுளாக தேவர்களில் ஒருவரான அக்கினி குறிப்பிடப்படுகின்றார். இந்தக் காரணத்தால்தான் இந்துக்களுடைய வாழ்வியலில் அக்கினிச்சுடர் அதாவது தீப வழிபாடு முக்கியத்துவம் பெறுகின்றது. ஆலயங்களிலும் தீபங்கள் ஏற்றி பூசைவழிபாடுகள் நடத்தப்படுதலைக் காணக்கூடியதாகவுள்ளது.

தீபங்கள் பல வகைப்பட்டனவாக காணப்பட்டாலும் பூசைக்கு ஏற்றப்படும் சிறப்பு விளக்காகக் குத்து விளக்கு (பஞ்சமுக விளக்கு) கொள்ளப்படுகிறது. பித்தளை செம்பு வெள்ளி எனும் உலோகங்களினால் ஆன விளக்குகளை பயன்படுத்தலாம். "எவர் சில்வர்" உலோகத்தால் ஆன விளக்குகளை பயன்படுத்தக்கூடாது. இது தவிர்க்கப்பட வேண்டியதாகும். ஒருவேளை பித்தளை விளக்குகளை வாங்க வசதியற்றவர்கள் மண்ணாலான அகல்விளக்குகளை (சுட்டி) பயன்படுத்தலாம்.தேசிக்காய்களின் கோதுகளைப் பயன்படுத்தியும் விளக்கேற்றலாம். பிரதி செவ்வாய்க்கிழமைகளில் வரும் ராகுகாலமாகிய பிற்பகல் 3.05 தொடக்கம் 4.35 வரையில் தேசிக்காய் கோதில் நெய்விட்டு பஞ்சுத்திரியிட்டு துர்க்கை அம்மன் சந்நிதானத்தில் ஏற்றிவந்தால் ராகுதோசம் நீங்கிவரும் என்பது இந்துக்களுடைய உறுதியான நம்பிக்கை. அதுவும் வருடத்தில் ஒருமுறையாவது வரும் ஆடி மாதத்தில் வரும் செவ்வாய்க்கிழமைகளில் இவ்வாறு நெய்விளக்கு ஏற்றுவதால் கல்வி, செல்வம் பெருகுவதுடன் பெண்களுக்குத் திருமணத்தடை விலகுமாம். மேலும் குழந்தைப் பாக்கியமும் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவுவதோடு சகல சௌபாக்கியங்களும் உண்டாகும்.

திருவிளக்கு ஏற்றுவதால் பல்வேறு பயன்களும் கிடைக்கப் பெறும். திருவிளக்கில் ஐந்து சுடர்கள் இருக்க வேண்டும். ஐந்து சுடர்களையும் ஏற்றுவது சிறந்ததாகும். நாள்தோறும் வழிபடும் வழிபாட்டில் ஒருமுகமே போதுமானது. தீபத்துக்குச் சிறந்தது நெய். நெய்விளக்கேற்றி வழிபட்டால் குலம் தழைக்கும். நல்லெண்ணெய் விளக்கு மகாலஷ்மி, மகாவிஷ்ணு, சனீஸ்வரனுக்குச் சிறப்பானது. தேங்காய் எண்ணெய் விநாயகருக்குச்சிறப்பானதெனக் கொள்ளப்படுகிறது. இலுப்பெண்ணெய் நெய்க்குச் சமமானது. பஞ்சு, தாமரைத்தண்டின் நூல் என்பன விளக்குத் திரிக்குச் சிறப்பானவை. விளக்கினது பாதத்திலோ அல்லது தண்டின் பாகத்திலோ பூச்சரமிடலாம். திருவிளக்கின் மேல் பூவைத்தால் வெப்பத்தால் கருக வாய்ப்புண்டு. எனவே பாதத்தில் பூ வைக்கலாம்.

தற்போது எல்லா நிகழ்வுகளுக்கும் மங்கல விளக்கேற்றும் வைபவங்கள் இடம்பெறுகின்றன. இந்த நிகழ்வின்போது பாதணிகளைக் கழற்றிவிட்டு ஏற்ற வேண்டும். மேலும், மெழுகுவர்த்தியைப் பயன்படுத்துவதையும் தலைவிரி கோலமாக நின்று விளக்கேற்றுதலும் தவிர்க்கப்பட வேண்டியனவாகும். பெண்கள் காலை, மாலை நேரங்களில் தம்மைச் சுத்தம் செய்து கொண்டு மாக்கோலமிட்டு அதில் திருவிளக்கை வைத்து சந்தன குங்குமத்தால் அலங்காரம் செய்து பாதத்திலே மலரை வைத்து தீபம் ஏற்ற வேண்டும். பழைய சங்க இலக்கியங்களிலே மாலைக்காலத்திலே நெல்லும் மலரும் தூவி திருவிளக்கேற்றி இல்லுறை தெய்வத்தை வழிபாடு செய்தமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தீப ஒளி பரவும் இடங்களிலே தரித்திரம், நோய் மனச்சஞ்சலம் முதலிய தீயவைகள் அண்டாது செல்வமும் தூய்மையும் சௌபாக்கியமும் ஏற்படும். திருவிளக்கேற்றும்போது தெரிந்த துதிகளை சொல்வது நல்லது. பெண்ணொருத்தி திருமணமாகி புகுந்த வீடு செல்லும்போது அந்த வீட்டுக்கு விளக்கு ஏற்றிச் செல்வது சம்பிரதாயம். விளக்கினது ஐந்து முகங்களும் பெண்களுக்கான ஐந்து இலக்கணங்களைக் குறிப்பிடுவதாகும்.

பொறுமை, சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுக்கும் தன்மை, சமயோசித புத்தி, வைராக்கியம், (நல்ல வைராக்கியங்களுக்காக மட்டும்)

வாழ்வு இனிமையாக நடைபெறவும் வாழ்வை முன்னேற்றவும் இந்த ஐந்து குணங்களும் துணைபுரியும். ஏற்றப்பட்ட விளக்கை தானாக அணைய விடாமல் ஒரு பூவினால் ஒற்றி அணைக்க வேண்டும்.வாயால் ஊதியோ கையால் வீசியோ அணைக்கக் கூடாது. அதுபோல "விளக்கை அணைச்சிடு" என்று சொல்லக்கூடாது. அவ்விளக்கை பெரிசுபடுத்து, விளக்கை அமர்த்து, விளக்கை குளிரவை போன்ற மங்கலச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும் "விளக்கைத் தூக்கிவை" என்பதற்குப் பதிலாக "விளக்கை நகர்த்திவை " என்று சொல்ல வேண்டும்.

வீட்டில் ஏற்றப்படும் திருவிளக்கே லட்சுமியின் கடாட்சமாகும். மாலை ஆறுமணிக்கு வீட்டின் பின் கதவைச் சாத்திவிட்டு முன்கதவைத் திறந்து வாசலில் நீர் தெளித்து, கோலமிட்டு,வீட்டில் விளக்கு ஏற்றப்படுகிறது. இதன் பொருள் முன்வாசல் வழியாக வரும் இலட்சுமியை பின்வாசல் வழியாக செல்ல அனுமதிக்கக் கூடாது என்பதுதான். தீபம் ஏற்றிய பின் கதவு திறக்கப்படலாம். அதாவது இலட்சுமி தீப ஒளியாக வீட்டில் திகழ்கிறாள்.

கிழக்குத்திசை நோக்கியதாகத் தீபம் ஏற்றினால் துன்பம் தீரும், பீடைகள் அகலும், சகல சம்பத்துக்களும் உண்டாகும். மேற்குத் திசை நோக்கிய தீபம் ஏற்றுவதனால் கிரகதோசம், பங்காளிப்பகையை நீக்கும். வடக்கு நோக்கிய தீபம் திரவியம், செல்வம், மங்களம் உண்டாகும். தெற்குப் பக்கம் தீபம் ஏற்றக் கூடாது. இதன் காரணத்தினால்தான் வாஸ்து சாஸ்திரத்தில் தெற்கு நோக்கி பூஜை அறை வைக்க அனுமதிக்கப்படவில்லை. சாதாரண விளக்கு பூஜைநேரங்களில் மட்டும் எரிவது, எப்பொழுதும் எரிந்து கொண்டு இருப்பது நந்தாவிளக்கு, காலை, மாலை வேளைகளில் மட்டும் எரிவது சந்தி விளக்கு.

தாமரைத் தண்டில் திரிபோட்டால் ஜென்ம பாவங்கள் நீங்கும். வாழைத் தண்டு நூல் திரி போட்டால் குல தெய்வக் குற்றம்,சாபம் நீங்கும். புது வெள்ளை வஸ்திரத்தில் பன்னீரை விட்டு உலரவைத்துப் போட்டால் இலட்சுமிகடாட்சம் வந்து சேரும். சிவப்பு நிறத் துணியால் திரிபோட்டால் திருமணத்தடை விலகும். குழந்தைப்பாக்கியம் கிட்டும். மஞ்சள் நிறத்துணியால் திரி போட்டால் தாம்பாத்திய உறவின் சஞ்சலங்கள் விலகுமாம்.

நெய்விளக்கு ஏற்றினால் சகல செல்வமும் பெருகும், முருகன் சந்நிதியில் நெய்விளக்கு ஏற்றுவது மரபு. நல்லெண்ணெய் விளக்கேற்றினால் எல்லாப் பீடையும் விலகும். யமபயம் இருக்காது. இலுப்பெண்ணெய் விளக்கு ஏற்றினால் ஆரோக்கியம் உண்டாகும். ஆமணக்கு எண்ணெய் சகல சம்பத்துக்களும் உண்டாகும். நெய், விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகிய ஐந்தும் விளக்கில் ஊற்றி ஒரு மண்டலம் (45 நாள்கள்) பூஜை செய்துவர தேவியின் அருள் பூரணமாகக் கிடைக்கும்.

(கடலை எண்ணெயில் விளக்கேற்றுதல் கூடாது)

வெண்கல விளக்கில் விளக்கேற்றுதலால்- பாவ வினைகள் அகலும், சனிக்கிழமைகளில் இரும்பு விளக்கினால் விளக்கேற்றினால் சனீஸ்வர பகவானுக்குப் பிரீதியாகும். மண் விளக்கேற்றினால் வீரிய விருத்தி உண்டாகும். வெள்ளி அல்லது பஞ்சலோக (தங்கம், வெள்ளி,பித்தளை, இரும்பு, செம்பு) விளக்குகள் பூஜைக்கு உகந்தனவல்ல.

ஒருமுகம் விளக்கேற்றுதலால் மத்திய பலன் ஏற்படும். இரண்டு முகம் விளக்கு ஏற்றுவதால் குடும்ப ஒற்றுமை பெருகும். மூன்றுமுக விளக்கு ஏற்றினால் புத்திரசுகமும், ஐந்துமுகம் செல்வமும் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கச் செய்யும். விசேடகாலங்களில் ஐந்து முகமும் ஏற்றுதல் வேண்டும்.

*(22ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













"தெய்வீக சுகானுபவம் ஓம் சரவணபவ" எனும் பரதநாட்டிய அளிக்கைகள் கடந்த வியாழக்கிழமை யாழ். சங்கிலியன் பூங்காவில் நடைபெற்றன. இந்திய துணைத்தூதரகம், இலங்கை இந்திய கலாசார மையம் மற்றும் வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச் சின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்தியாவில் இருந்து வருகை தந்த கலைமாமணி ஸ்ரீபதி ராதிகா சுராஜித்தின் நெறியாள்கையில், பரதநாட்டிய அளிக்கைகள் இடம்பெற்றன. நல்லைக் கந்தனின் தீர்த்தோற்சவ தினமான அன்றைய தினம் நல்லைக் கந்தனின் பெருமையையும், தமிழ் மொழியின் பெருமையையும் எடுத்துக்காட்டும் பொருட்டு பரதநாட்டிய அளிக்கைகள் இடம்பெற்றன.

நிகழ்வில், இலங்கைக்கான இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன் மற்றும் பாரியார், வடமாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சர் த.குருகுலராஜா, யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (106)

# இந்து வாழ்வியலில் தீப வழிபாடு பெறும் முக்கியத்துவம்

*(21 ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

ஒவ்வொரு மாதமும் வரும் பௌர்ணமி தினத்தில், அம்மன் சந்நிதானத்தில் சுமங்கலிப் பெண்கள் விளக்கேற்றி, திருவிளக்குப் பாடல்களைப் பாடினால், அருளை மட்டுமன்றி, கணவருடைய நீண்ட ஆயுள், செல்வம், கல்வி, வீரம் என அனைத்துச் சிறப்புக்களும் உண்டாகும்.

எம் அக இருளை அகற்றவும், நற்சிந்தனை உண்டாக்கவும், பரந்த நலச் சிந்தனை உண்டாகவும், பண்பு நலன்கள் பெருகவும், பாவங்களைப் போக்கவும் விளக்கேற்றி வழிபடுவோம்.

**திருவிளக்குப் பாடல்களாவன**

01. இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே.

02. சீலத் திருவிளக்கே-சீதேவி லக்ஷ்மியே
கோலத்திருவிளக்கே-கும்பிட்டேன் நின்னடியே
தில்லைவன நாதனும்-சிவகாமி அம்மையையும்
சிந்தையில் கொண்டிருக்க-செய்தவினை நீங்கிவிடும்
தேவியே செய்தருள்வாய்
தொட்டிலுக்குப் பிள்ளையும்-தொழுவிற்குப் பால் பசுவும்
பட்டறைக்கு நெல்லும்-பதிந்த மரக்காலும்.
உனக்கெரிக்க எண்ணெயும்-எனக்குண்ணச் சோறும்
தட்டாமல் தாயே-தந்தருள்வாய் தகவுறவே
அரியவினை தீர்க்கும்-ஆனை முகத்தோனே
அலரி சண்பகம் கதலிமுக்கனி-ஆனபடி படைத்தேன்
அன்பின் மணிவாசகத்தை-ஞானம் பெறவே நயந்தோதினேன் அருள்வாள்

**திருவிளக்கு அகவல்**

03. விளக்கே-திருவிளக்கே-வேந்தன் உடன் பிறப்பே
ஜோதி மணிவிளக்கே-ஸ்ரீதேவிப் பெண்மணியே
அந்தி விளக்கே-அலங்கார நாயகியே
காந்தி விளக்கே-காமாஷித் தாயாரே
பசும் பொன் விளக்கு வைத்து பஞ்சுத்திரி போட்டு
குளம்போல நெய்விட்டு கோலமுடன் ஏற்றிவந்தேன்
ஏற்றினேன் நெய்விளக்கு எந்தன் குடி விளங்க
மாளிகையில் ஜோதியுள்ள மாதாவைக் கண்டு
மகிழ்ந்தேன் யான்
மாங்கல்யப் பிச்சை மடிப்பிச்சை தாருமம்மா
சந்தானப் பிச்சையுடன் தனங்களும் தாருமம்மா
பெட்டி நிறைய பூசணங்கள் தாருமம்மா
புகழுடம்பைத் தாருமம்மா-பக்கத்தில் நில்லுமம்மா
அல்லும் பகலும் என் அண்டையில் நில்லுமம்மா

**04. தரிசனம் காணல்**

சேவித் தெழுந்திருந்தேன் தேவி வடிவங்கண்டேன்
வச்சிரக் கிரீடங் கண்டேன்
முத்துக் கொண்டை கண்டேன் முழுப்பச்சை மாலை கண்டேன் சவுரி முடிகண்டேன் தாழைமடல் சூழக் கண்டேன்.

பின்னழகு கண்டேன் பிறைபோல் நெற்றி கண்டேன்
சாந்துடன் நெற்றி கண்டேன்- தாயார் வடிவங்கண்டேன்
கமலத்திருமுகத்தில் கஸ்தூரிப் பொட்டுக் கண்டேன்
தங்க ஒட்டியாணம் தகதகவென ஜொலிக்கக் கண்டேன்
காலிற் சிலம்பு கண்டேன்-காலாழி பீலி கண்டேன்
மங்கள நாயகியை மனங்குளிரக் கண்டு மகிழ்ந்தேன்
அடியாள் நான்.

அன்னையே அருந்துணையே! அருகிலிருந்து காருமம்மா!
வந்தவினையகற்றி மகாபாக்கியம் தாருமம்மா
தாயாரம் உன்றன் தாளடியில் சரணம் என்றேன்
மாதாவே உன்றன் மலரடியில் நான் பணிந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக் குமரன் மலர் வெளியீடும், விருது வழங்கலும்

லக்ஸ்மன்



இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளில் தமிழ் பௌத்தர்களும் இருந்துள்ளனர். தமிழ்ப் பகுதிகளில் பௌத்த சின்னங்கள் இடம்பெற இதுவே காரணம். இதைக் கொண்டு சிங்கள மக்கள் எப்படி இருந்தார்கள் என்று கூறமுடியும் என கிழக்கு மாகாண ஆளுநர் எஸ்ரின் பெர்னாண்டோவுக்கு சரித்திர உண்மைகளை விளக்கிய வடக்கு மாகாண முதல்வர் க.வி.விக்னேஸ்வரன் சரித்திர ரீதியான உண்மைகளை உலகின் வரலாற்று நிபுணர்களைக் கொண்டே ஆராயவேண்டும் எனவும் தெரிவித்ததாக நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழாவில் தெரிவித்தார்.

யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவின் நல்லைக் குமரன் மலர் வெளியீடும், யாழ். விருது வழங்கும் நிகழ்வும், நாவலர் கலாசார மண்டபத்தில் கடந்த 24ஆம் திகதி புதன்கிழமை மாநகர ஆணையாளரும் சைவ சமய விவகாரக் குழுவின் தலைவருமான பொ.வாகீசன் தலைமையில் நடை பெற்றது. சிறந்த சமூக சேவையாளருக்கான யாழ்.விருதை முன்னாள் கிளிநொச்சி மாவட்டச் செயலர் தி.இராசநாயகத்துக்கு வழங்கிக் கௌரவித்த முதலமைச்சர், சமூகத்துக்கு அவராற்றிய சேவைகளையும் எடுத்துக் கூறி, எமது அரசியலின் இன்றைய நிலையையும் விவரித்தார். அந்தச் சூழ்நிலையிலும் சைவத்தின் பெருமையைக் காப்பதில் யாழ். மாநகரசபை சைவ சமய விவகாரக் குழு ஆற்றி வரும் பணியும் நல்லூர் உற்சவ காலங்களில் மக்களுக்கான அதன் சேவைகளும் சிறப்பாக அமைவதையும் குறிப்பிட முதல்வர் தவறவில்லை.

சைவசமயக் கருத்து, சிந்தனைகள் புனிதமானது. சைவத்துக்கும் ஆன்மிகத்துக்கும் தொண்டாற்றுவதன் மூலம் தமிழ் மக்களின் கலாசாரப் பாரம்பரியங்களின் பெருமைகளை இளம் தலைமுறைக்குத் தெரியப்படுத்த வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு. அதனை சபை சிறப்புடன்செயற்படுத்துவதாக ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். இந்த முறை கடந்த காலங்களிலும் பார்க்க மாநகர சுகாதார சேவைகள் நல்ல முறையில் அமைந்துள்ளதாகவும் சுண்டல், கச்சான் விற்பனைகளும் தடை செய்யப்பட வேண்டிய ஒன்றெனவும், 24 வருடங்கள் நல்லைக்குமரன் மலர் சமுகத்துக்கு சிறந்த ஆன்மிக கருத்துக்களை வழங்கி வருவதாகவும் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தமது ஆசியுரையில் தெரிவித்தார். வீணகான குருபீட முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சபா வாசுதேவக்குருக்கள் போர், வறுமை மற்றும் இடப்பெயர்வுகளால் எமது மக்களை மதமாற்றம் செய்யப் பிறமதத்தினர் முனைந்துள்ள இந்த வேளையில், எமது சமயத்தைப் பாதுகாக்க நாம் அணிசேர வேண்டும் என வலியுறுத்தினார்.

ஞானத்தின் அடையாளமாக அருளாட்சி செய்யும் நல்லைக் கந்தன் உற்சவ காலத்தில் வெளியிடப்படும் நல்லைக் குமரன் மலர் சர்வதேசத்துக்கும் எடுத்துச் சொல்லப்பட வேண்டும் என சின்மயா மிசன் சுவாமி ஜாக்ரத சைதன்ய தெரிவித்தார்.

நெடுந்தீவைச் சேர்ந்த கதிரவேலு அப்புவால் உருவாக்கப்பட்ட குருகுலம் பற்றியும் அவராற்றிய தொண்டுகள் குறித்தும், இந்தியப் படையினரால் அவர் சுடப்பட்டு எரிக்கப்பட்ட துயரங்கள்குறித்தும், நினைவூட்டிய கலாநிதி ஆறு. திருமுருகன், அவர் விட்டுச் சென்ற பணியை, இன்றைய விருதுக்குரிய தி.இராசநாயகம் தொடர்வதால் நானூறுக்கு அதிகமான சிறுவர்கள் திருநீறு பூசிக் கொண்டிருக்கின்றார்கள் என்ற கருத்தைத் தெரிவித்தார். யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன், யாழ்ப்பாணம் அழகானது. இருந்தாலும், யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைப் பாதையில் கழிவுகள் கொட்டப்படுவது அழகைக் கெடுக்கும் ஒன்றாக அமைகிறது. அதிகாரிகளைக் கேட்டால், அந்தப் பகுதிகளுக்கு தாங்கள் பொறுப்பல்ல என்கிறார்கள். மாநகரசபை கவனத்தில் எடுக்கவேண்டும். நானும் உதவுவேன் என உறுதி தெரிவித்தார்.

நல்லைக் குமரன் மலர் சைவத்தின் பெருமைகளையும் இளந்தலைமுறைக்கு ஒரு வழிகாட்டலையும் தருவதாகவும் இந்த முறை தலயாத்திரைகள் குறித்த விவரங்களைக் கொண்டுள்ளதாகவும் சிறப்புடன் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் நூலின் விமர்சன உரையில் ஓய்வுநிலை அதிபர் செ.சேதுராஜா தெரிவித்தார். நூலாசிரியர் ந.விஜய சுந்தரத்திடமிருந்து முதற் பிரதியை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானப் பிரதிநிதி பெற்றுக்கொள்ள, பண்ணிசைப் போட்டிகளில் கலந்து கொண்ட மாணவர்களுக்கான பரிசில்களையும் சைவசமய விவகாரக்குழு வழங்கியது.

பெருமளவு மக்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவியின் வரவேற்பு நடனத்துடன் சைவசமய விவகாரக் குழுவின் செயலாளர், பொருளாளர் ஆகியோரின் வரவேற்பு, நன்றியுரைகளுடன் இந்த நிகழ்வுகள் சிறப்பாக நிறை வடைந்தன.







## ஓய்வுநிலைக் கிராம அலுவலருக்கு விருது வழங்கும் நிகழ்வு

அச்சுவேலியைச் சேர்ந்த ஓய்வுநிலைக் கிராம அலுவலர் குமாரசுவாமி கதிரமலைநாதன் சமூகபாதுகாப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சின் "இலங்கை சமூக பாதுகாப்புச் சபை" ஓய்வூதியத் திட்டத்தில் யாழ். மாவட்ட ரீதியில் ஆகக் கூடிய உறுப்பினர்களை இணைத்தவர் என்பதைப் பாராட்டி தேசிய ரீதியில் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இந்த விருது வழங்கிக் கௌரவிக்கும் வைபவம் கொழும்பு தாமரைத் தடாகத்தில் நடைபெற்றது.

வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் உள்ள ஆவரங்கால் கிழக்கு ஜே/277 கிராம அலுவலர் பிரிவில் கிராம அலுவலராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் (2010/2011) ஆகக் கூடியளவு உறுப்பினர்களை சமூக பாதுகாப்பு சேவை ஓய்வூதியத் திட்டத்தில் இணைத்து யாழ். மாவட்டமட்ட மதிப்பீட்டில் முதலாம் இடத்தைப் பெற்றிருந்தார்.

தேசிய ரீதியில் விருது வழங்கிக் கௌரவிக்கும் வைபவம் கொழும்பு தாமரைத் தடாகம் (நெலும் பொக்குண) மகிந்த ராஜபக்ச அரங்கில் சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கா தலைமையில் நடைபெற்றது. (11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# செப்ரெம்பர்

## கடகம்

**செப்ரெம்பர் 1 முதல் 31 வரை**

மனசாட்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்வில் வீறுநடை போடும் கடக ராசியினரே! இந்த காலகட்டத்தில் பஞ்சம தொழில் ஸ்தானாதிபதி செவ்வாய் ராசியை அஷ்டம பார்வையாகப் பார்க்கிறார். எதிலும் முன்னேற்றம் காணப்படும். இஷ்டத்துக்கு விரோதமாக காரியங்கள் நடந்தாலும், முடிவு சாதகமாக இருக்கும். வீண் ஆசைகள் மனதில் தோன்றும். தொழில் ஸ்தானாதிபதி செவ்வாய் ராசியைப் பார்க்கிறார். தொழில் காரகன் சனி ராசிக்கு திரிகோணம் பெற தொழில் ஸ்தானத்துக்கு அதன் அதிபதி செவ்வாய் திரிகோணம் பெறுகிறார். திட்டமிட்டுச் செய்வதன் மூலம் சாதகமான பலன் கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் சக ஊழியர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்பாராத அலைச்சல் ஏற்படலாம். மேலிடத்துடன் கருத்து மோதல்களை தவிர்க்கவும்.
குடும்ப ஸ்தானத்தில் ராகு இருக்கிறார். ஆனாலும் குடும்பாதிபதி சூரியன் பலம் பெற்றிருக்கிறார். குடும்பம் பற்றிய கவலைகள் ஏற்பட்டாலும், அவை நீங்குவதுடன் உடல் ஆரோக்கியமும் அடையும். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.
மனதில் பக்தி உண்டாகும். சகோதரர்கள் மற்றும் உறவினர்களிடம் பேசும்போதும் கவனம் தேவை. பெண்களுக்கு எந்த ஒரு செயலையும் யோசித்து செய்வது நல்லது. வீண் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கிவிடுவதும் நன்மை தரும். கலைத்துறையினருக்கு சுக்கிரனின் சஞ்சாரம் எதிர்பாராத நல்ல திருப்பங்களை ஏற்படுத்தும். மனதில் சந்தோசம் உண்டாகும். எந்த பிரச்சினை வந்தாலும் சமாளித்து முன்னேறிச் செல்வீர்கள். தெளிவான முடிவுகள் எடுப்பதன்மூலம் இழுபறியான காரியங்கள் சாதகமாக இடம்பெற்று முடியும். மற்றவர்கள் பாராட்டக் கூடிய மிகப்பெரிய செயலை செய்து முடிப்பீர்கள். அரசியல்துறையினருக்கு புதிய பதவிகள் கிடைக்கும். மரியாதை அந்தஸ்து ஆகியவை உயரும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். பெரியோர்கள் மூலம் காரிய அனுகூலம் ஏற்படும். திறமை வெளிப்படும். காரியங்கள் அனுகூலமாக நடக்கும். மனதில் தைரியம் உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற திட்டமிட்டு பாடங்களைப் படிப்பதும், தேவையற்ற பிரச்சினைகளில் தலையிடாமல் இருப்பதும் நல்லது.

**பரிகாரம்:** அரலிப்பூவை ஆதிபராசக்திக்கு அர்ப்பணித்து வணங்கி வருவது எல்லா நன்மைகளையும் தரும். மனோதிடம் உண்டாகும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, திங்கள், வியாழன்.




■ ப.அருந்தவம்

# இரசாயனப் பாதிப்புக்கள் இல்லாத தூய மரக்கறிகளை எமது வீடுகளிலேயே உற்பத்தி செய்வோம்

*(நேற்றைய 16 ஆம் பக்கத்தில் வெளியான மாரியில் ஏற்படும் மரக்கறி விலை ஏற்றத்துக்கு ஆடியில் வீட்டுத்தோட்டம் போடும் என்ற தலைப்பிலான கட்டுரையின் தொடர்ச்சி...)*

காலை, மாலை வேளைகளில் நீர்ப்பாசனம் செய்வது சிறப்பானது. மழை காலத்தில் சாடியில் நீர் தேங்காமல் வெளி யேறுவது அவசியமானது. நீர் தேங்கினால் வேர் அழுகி தாவரம் இறந்து விடும். எனவே சாடியின் அடியிலுள்ள துளைகள் அடைப்பு இல்லாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். பல்வேறு தாவரங்களுக்கும் காற்றினால் சாயாதிருப்பதற்கும்,பிடிமானத்தை ஏற்படுத்தவும் ஆதாரத்தடி ஒன்று வழங்குதல் சிறப்பானது. கொடிவகைத் தாவரங்களுக்கு பந்தலமைத்தும் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.


### கழிவு முகாமைத்துவம்

வீட்டிலுள்ள பிளாஸ்ரிக் டப்பாக்கள் கான்கள் பாவிக்காத ஒதுக்கிய பாத்திரங்கள் பொலித்தீன் பைகள் போன்றவற்றை சாடிகளாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
வீட்டில் சேரும் உக்கக்கூடிய கழிவுப் பொருள்களை ஒன்றாக இட்டு கொம்போஸ்ட் தயாரித்துக் கொள்ளலாம். இதனால் வீட்டில் துர்நாற்றம் வீசுவது தடுப்பதுடன் நுளம்பு, ஈ, பெருக்கமும் கட்டுப்படுத்தப்படும்.
சிறிய இடத்தில் கொம்போஸ் குழி அமைத்தபோது இதிலிருந்து கெட்ட வாடை வீசினால் லெமன் கிராஸ் ஓயில் வாங்கி ஒரு லீற்றர் நீருக்கு ஒரு மில்லிலீற்றர் என்ற அளவில் தெளித்து விடுவதுடன், கொம்போஸ் குழிக்கு சாம்பல் இட்டு ஈரலிப்பின் அளவைக்குறைத்தும் விடலாம்.
வீட்டுத் தோட்டத்தில் விவசாய இரசாயனங்கள் பிரயோகிப்பதை அறவே கைவிட வேண்டும். வீட்டுத் தோட்டத்திலுள்ள செடிகளை நோய்தாக்கினால் தாக்கப்பட்ட பாகத்தை வெட்டி அகற்றலாம். நாள் தோறும் வீட்டுத் தோட்டச் செடிகளை அவதானித்து பீடைகள் தென்படின் கையாலோ அல்லது சிறுவலை கொண்டோ பிடித்து அகற்றல் சிறப்பானது.
இயற்கை நாசினிகளை பயிர்களுக்கு தெளிப்பதாலும் பீடைகள் பயிரைத் தாக்காது. உதாரணமாக வீட்டில் சமையலுக்கு பயன்படுத்தும் உள்ளியை நீரில் கொதிக்க வைத்து, அக்கரைசலை 2 வாரத்துக்கு ஒரு தடவை தாவரங்களுக்கு விசிறலாம். இதேபோல் வேப்பிலைகளையும் நீரிலிட்டு கொதிக்க வைத்து அக்கரைசலையும் இடையிடையே தாவரங்களுக்கு விசிறலாம். இவ்வாறு விசுறுவதால் நோய் பீடைகள் விரட்டப்படுவதுடன், சிறந்த இயற்கை உரமாகவும் இது தாவரங்களுக்குப் பயன்படும்.

### காலத்தின் தேவை

இன்றைய இரசாயனம் கலந்த விவசாய உலகில் எந்தக் காலப்பட்மும் இல்லாது நாங்களே எமக்கு வேண்டிய மரக்கறிகளை உற்பத்தி செய்து நுகர்வோருக்கு தோட்டம் போடுவதும், ஆர்வம் இல்லாதவர்களும் இனிக் கொஞ்ச நேரம் ஒதுக்கலாமே. வேண்டிய மரக்கறிகளை உற்பத்தி செய்து ஆர்வம் இல்லை என்றாலும், இது எல்லோருக்கும் என்பது காலத்தின் கட்டாயமாகும்.
வீட்டில் இடமில்லை என சாமர்த்தியமாக கூறித்தப்பிவிட முடியாது. 'மனம் இருந்தால் இடமுண்டு' குறுகிய இடத்தில் அதிக விளைவு பெறும் நுட்பம் இப்பத்திமூலம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. எனவே நாம் மாலையில் தூங்குவதற்கும் முகப்புத்தகம் பார்ப்பதற்கும், வட்சப்பில் அரட்டை அடிப்பதற்கும் நேரம் ஒதுக்குவதுபோல தோட்டம் போட்டு பராமரிப்பதற்கு நேரம் ஒதுக்குவோம்.
பரபரப்பான வாழ்க்கை முறையிலிருந்து வரும் எமக்கு நிதானமாக மூச்சுவிடவும், மாரிகாலத்தில் ஏற்படும் மரக்கறி விலையேற்றத்திற்கு முகங்கொடுக்கவும் , தூயகாற்றைப்பெறவும் நஞ்சின்றி உணவுண்டு எமது ஆரோக்கியத்தைப் பேணவும் வீட்டில் தோட்டம் அமைப்போம்.
இனிமேல் வீட்டின் கூரையில் அவரைக்கொடி பீர்க்கங்கொடி படர வகை செய்வோம். சாடிகளில் மண்நிரப்பி அதில் விதையிட்டு இதனை உயிருள்ள கருவறையாக்குவோம். மாற்றங்கள் மனதிலிருந்து தொடங்கினால் மாறுவதற்கு காலம் தயாராக இருக்கிறது.
இதுவே தோட்டம் போடுவதற்குரிய காலம். எனவே வீட்டுத் தோட்டம் போட்டு மாரிகால மரக்கறி விலையை வெற்றி கொள்வோம்.

(முற்றும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 500 | 700 | 800 | 700 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 400 | 600 |
| கணவாய் | 600 | 700 | 400 | 600 | 600 | 700 | – |
| பாரை | 550 | 600 | 400 | 800 | 600 | 500 | – |
| சுறா | 500 | 700 | 500 | 800 | 800 | 600 | 600 |
| சீலா | 300 | 500 | 300 | 600 | 400 | 400 | – |
| விளை | 650 | 500 | 300 | 600 | 500 | 600 | 500 |
| முரல் | 300 | 400 | 300 | 500 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 400 | 600 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 500 | 300 | – |
| ஓரா | 400 | 400 | 300 | – | 450 | – | – |
| திரளி | 300 | 300 | 100 | 150 | 300 | – | 300 |
| நகரை | 250 | 300 | 100 | 250 | 400 | 200 | 400 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | – | 100 |
| ஒட்டி | 300 | 300 | 200 | – | 300 | – | 200 |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 400 | 300 | 300 |
| மதனம் | 150 | 300 | – | 400 | 300 | 400 | – |
| கொய் | 100 | 200 | 50 | 70 | 100 | 100 | – |
| பாலை | 400 | 250 | 300 | 400 | 400 | 400 | – |
| வாழை | 100 | 200 | – | 400 | 300 | 30 | – |



# பால் கொழுக்கட்டை

### தேவையான பொருள்கள்

புழுங்கல் அரிசி மா – 2 கப்
தேங்காய்ப்பால் (முதல் பால்) – 1 கப்,
2ஆவதாக எடுத்த தேங்காய்ப் பால் – தேவைக்கு
பால் – 3 கப்
சர்க்கரை – 2 1/2 கப்
ஏலக்காய் – 4

### செய்முறை:

பாலை நன்றாகக் காய்ச்சவும்.

அரிசி மாவில் மூன்று கரண்டி தனியே எடுத்துவிட்டு மீதமுள்ள மாவில் காய்ச்சிய பாலை விட்டு, சிறிது உப்புச் சேர்த்து சப்பாத்தி மாப் பதத்துக்குப் பிசைந்து கொள்ளவும்.

பிசைந்த மாவைச் சிறுசிறு உருண்டைகளாகப் பிடித்து, ஆவியில் 8 நிமிடம் வேக வைத்து எடுக்கவும்.

அடி கனமான பாத்திரத்தை அடுப்பில் வைத்து சர்க்கரை போட்டு, இரண்டாவதாக எடுத்த தேங்காய்ப்பாலை ஊற்றி, சர்க்கரை கரையும் வரை கலக்கவும்.

அடுத்து, அதில் எடுத்து வைத்த 3.கரண்டி அரிசி மாவைச் சேர்த்துக் கலக்கிக் கொதிக்க விடவும்.

சிறிது கெட்டியாகப் பாயசம்போல வரும்; அப்போது ஆவியில் வேக வைத்த கொழுக்கட்டையைப் போட்டு அடுப்பை மிதமான தீயில் வைத்துக் கிளறிவிடவும்.

பின்னர், பால், முதற் தேங்காய்ப்பால் இரண்டையும் ஊற்றி ஒரு கொதி வந்ததும் ஏலக்காய்த் தூள் சேர்த்து இறக்கி வைக்கவும்.

சுவையான பால் கொழுக்கட்டை ரெடி. நீங்கள் விரும்பி வடிவில் கொழுக் கட்டையை செய்து கொள்ளலாம்.


## நாளை

ஆவணி-23
வியாழக்கிழமை
-08.09.2016
திதி: ஸப்தமி
பி.இ.01.59
நட்சத்திரம்: அனுசம்
பி.இ.03.10
ராகுகாலம்:
01.34-03.04 வரை
சுபநேரம்:
07.34-09.04 வரை

## இது புதுசு



பெண்களுக்கான நெற் பாவாடைகள் அறிமுகமாகியுள்ளன. நெற் துணியில் வடிவமைக்கப்பட்ட இவை, அரைப்பாவாடையாக சிறியதாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை பல வர்ணங்களிலும், அளவுகளிலும் விற்பனை செய்யப்படுகின்றன. இந்தப் பாவாடை ஆயிரத்து 800 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 60 | 60 | 40 | 30 | 30 | 20 |
| கத்தரி | 40 | 50 | 80 | 50 | 60 | 40 | 90 | 40 |
| கரட் | 100 | 120 | 120 | 120 | 100 | 120 | 110 | 100 |
| மரவள்ளி | 80 | 90 | 100 | 80 | 80 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 80 | 60 | 160 | 80 | 60 | 100 | 100 | 60 |
| பாகல் | 100 | 70 | 200 | 100 | 100 | 120 | 150 | 80 |
| கருணைக்கிழங்கு | 120 | – | 160 | 160 | 100 | 100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 90 | 90 | 90 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 70 | 80 | 80 | 80 | 70 | 100 | 90 | 60 |
| பூசணி | 40 | 40 | 50 | 40 | 40 | 40 | 70 | 40 |
| தக்காளி | 40 | 40 | 40 | 60 | 40 | 50 | 120 | 40 |
| வாழைக்காய் | 120 | 80 | 60 | 80 | 80 | 60 | 70 | 40 |
| கீரை | 30 | 20 | 30 | 20 | 20 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 30 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 70 | 80 | 100 | 70 | 300 | 200 | 140 |
| புடோல் | 40 | 40 | 50 | 60 | 40 | 40 | 70 | 40 |
| கோவா | 100 | 90 | 120 | 100 | 80 | 120 | 90 | 80 |
| வெண்டி | 40 | 60 | 120 | 80 | 60 | 60 | 70 | 20 |
| போஞ்சி | 120 | 180 | 200 | 160 | 160 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 100 | 100 | 120 | 90 | 100 |
| தேங்காய் | 40 | 25 | 40 | 30–35 | 30 | 30 | 15–25 | 25 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 85 | 100–120 |
| தேசிக்காய் | 100 | 200 | 140 | 240 | 240 | 200 | 120 | 150 |
| வல்லாரை | 15 | 15 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 120 | 80 | 120 | 120 | 100 | 200 | 200 | 100 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 150 | 110 | 120 | 80 | 100 | 40 | 80 | 50 |

# சமையலறை துவாய்களை சுத்தமாக வைத்திருப்பது எப்படி?

சமையலறைத் துவாய் என்பது, சமையலறையில் அதிகமாக பயன்படுத்தும் பொருள்களில் மிகவும் முக்கியமானது. எளிதில் அசுத்தமடைந்து, கெட்ட நாற்றத்தை அடைவதும் இதுவே ஆகும்.

சமையலறைத் துவாய்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்காவிடில் பல ஆரோக்கியக் குறைபாடுகள் ஏற்படும். எனவே, சமையலறைத் துவாய்களை சுத்தமாக பராமரித்து, அதே நேரத்தில் உங்கள் வீட்டிற்கு வருபவர்களை அசத்துவதற்கான சில வழிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- முதலாவதாக, நீங்கள் சமையலறைத் துவாயை சுத்தப்படுத்துவதற்கு நுண்ணுயிர்களைக் கொல்லும் திறன் உள்ள சலவைத் தூளை உபயோகிக்க வேண்டும். இவை பூஞ்சைகளின் உருவாக்கத்தைத் தடை செய்து, துவாயில் உள்ள கெட்ட நாற்றத்தையும் வெளியேற்றுகிறது.
- சமையலறைத் துவாயைத் தண்ணீரில் அலசி அதை 30 நொடிகள் மைக்ரோ அலைகளில் வைக்கவேண்டும். இதனால், அதில் உள்ள பக்றீரியாக்கள் அழிக்கப்படும்.
- சமையலறைத் துவாயைத் துவைத்த பின் நன்கு உலர வைக்க வேண்டும். அப்படியே நீரோடு விட்டுவிடக்கூடாது. இல்லாவிடில், கிருமிகள் மீண்டும் அவற்றில் பல்கிப் பெருகிவிடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"டேய் என்னக்கு இன்னும் பள்ளிக்கூடத்தில ID கார்டுக்கூட குடுக்கலடா... அதுக்குள்ள கிரெடிட் கார்டு வேணுமா என்று கேக்குறீங்க...



முதல்ல போன வைங்கடா...!"



புதுசா வாங்கின பைக்கில மனைவி பெயரை எழுத சரியான இடம் கிக்கர் தான்...
"எத்தனை நாளுக்குத் தான் நான் உதை வாங்கிறது..."



# இயக்குநராக அவதாரம் எடுக்கிறார் தனுஷ்

தமிழ்த் திரையுலகில் நடிகர், பாடல் ஆசிரியர், பாடகர், தயாரிப்பாளர் என்று பல முகங்கள் கொண்டவர் நடிகர் தனுஷ். தற்போது தனுஷ் தனது திறமையை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்லுகிறார். இவர் தமிழில் மட்டுமின்றி ஹிந்தியிலும் நடித்து உள்ளார். சமீபத்தில் தனுஷ் தயாரிப்பில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிக்க இருப்பதாகச் செய்திகள் வந்து பரபரப்பை ஏற்படுத்தி உள்ளன.

இதைத் தொடர்ந்து, தனுஷ் தற்போது இயக்குநராகவும் தனது திறமையை வெளிப்படுத்த இருக்கிறார். தனுஷ் இயக்கவிருக்கும் படத்தில் நடிகர் ராஜ்கிரண் முதன்மை வேடத்தில் நடிக்க இருக்கிறார். 'வேங்கை' படத்தில் இணைந்து நடித்த நட்பினால் தனுஷ் இயக்கும் படத்தில் ராஜ்கிரண் நடிக்க ஒப்புக் கொண்டார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.



ஆண்கள் குடித்தவுடனும் பெண்கள் குளித்தவுடனும்
....
....
வேஷம் கலைந்து விடுகிறது.

**Ramya Mastani** @iam_ramyangel

முழுமையான காதலையோ, காமத்தையோ எந்தச் சூழ்நிலையிலும் ஆண்களுக்குத் தந்து விடக்கூடாது, மீறும் பட்சத்தில் நாம் எளிதில் சலித்து விடுகிறோம்; அவர்களுக்கு.

64 79



காதலி: "கல்யாணத்துக்கு அப்புறம் நம்ம தனியா போயிடனுமுங்க!"
காதலன்: "கண்டிப்பா...! ஒரே வீட்டில இருக்க என் மனைவியும் ஒத்துக்க மாட்டா!..."

"இன்று மழை வரும் என்று செய்தியில சொன்னாங்க... நீங்க கேட்டீங்களா...?"
"நான் கேக்கலை. அவங்களாத்தான் சொன்னாங்க"

WhatsApp


## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 3 | | 7 | | |
| 7 | | 5 | 2 | | | | | |
| | | | 4 | | | 3 | 2 | |
| 6 | | | 7 | | | 4 | | 3 |
| | | 7 | | | | 5 | | |
| 3 | | 2 | | | 6 | | | 1 |
| | 1 | 4 | | | 8 | | | |
| | | | | | 2 | 8 | | 9 |
| | | 6 | | 5 | | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரேகோலத்தை ஏற்படுத்தவேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும், 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும், 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | 1 | 3 | 7 | 9 | 8 | 5 | 4 |
| 8 | 3 | 7 | 2 | 4 | 5 | 6 | 1 | 9 |
| 4 | 5 | 9 | 1 | 8 | 6 | 7 | 3 | 2 |
| 1 | 4 | 2 | 8 | 6 | 3 | 5 | 9 | 7 |
| 3 | 9 | 6 | 4 | 5 | 7 | 1 | 2 | 8 |
| 5 | 7 | 8 | 9 | 1 | 2 | 3 | 4 | 6 |
| 6 | 1 | 3 | 7 | 9 | 4 | 2 | 8 | 5 |
| 7 | 2 | 4 | 5 | 3 | 8 | 9 | 6 | 1 |
| 9 | 8 | 5 | 6 | 2 | 1 | 4 | 7 | 3 |



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** நண்பர்கள் மூலம், மகிழ்ச்சியான அனுபவம் உண்டாகும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். சமூகத்தில் மதிப்புக் கூடும். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள்.

**இடபம்:** செயல்களில் தாமதம் ஏற்படலாம். நல்லோரின் ஆலோசனை, மனதில் நம்பிக்கையளிக்கும். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் மிதமாக இருக்கும். அதிக விலையுள்ள பொருள்களை கவனத்துடன் பாதுகாக்கவும்.

**மிதுனம்:** சிலரது பேச்சு, சங்கடத்தை ஏற்படுத்தும். தொழிலில், எதிர்பார்ப்பு நிறைவேறுவது தாமதமாகலாம். இலாபம் சுமாராக இருக்கும். உடல் நலனில் கவனம் தேவை. தாயின் அன்பு நிறைந்த வார்த்தை நம்பிக்கையளிக்கும்.

**கடகம்:** வசீகரப் பேச்சால் எதையும் சாதிப்பீர்கள். நண்பரால் உதவி உண்டு. தொழில், வியாபாரத்தில் வாக்குறுதியை நிறைவேற்ற பணி புரிவீர்கள். உபரி பண வருமானம் உண்டு. பெற்றோரின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** புதிய விடயங்களை அறிவதில் ஆர்வம் கூடும். தொழில், வியாபாரத்தில், கூடுதல் வளர்ச்சி ஏற்படும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். விருந்து விழாவில் பங்கேற்பீர்கள். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கன்னி:** முக்கிய செயல் நிறைவேற தாமதம் ஏற்படலாம்.. சக தொழில், வியாபர்ரம் சார்ந்தவர்களிடம், சச்சரவு பேசக் கூடாது. இலாபம் சுமார். பெண்களுக்கு, செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும்.

**துலாம்:** தொடர்பில்லாத பணியால் சிரமம் ஏற்படலாம். குடும்பத்தினரின் ஆதரவு கைகொடுக்கும். தொழில், வியாபாரத்தில், கூடுதல் உழைப்பு தேவை. மிதமான இலாபம் கிடைக்கும்., வாகனப் பயணத்தில் மிதவேகம் நல்லது.

**விருச்சிகம்:** உறவினரின் ஆதரவு கண்டு பெருமை கொள்வீர்கள். மனதில் உற்சாகமும், செயலில் சுறுசுறுப்பும் உண்டாகும். தொழிலில், பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். எதிரியும் வியக்கும் விதத்தில் வளர்ச்சியடைவீர்கள்.

**தனுசு:** குழப்பம் உருவாகி விலகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிபெற, சீர்திருத்தப் பணிகளில் ஈடுபடுவீர்கள். இலாபம் சுமார். பெண்களுக்கு தாய் வீட்டினரின் உதவி கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மகரம்:** பேச்சில், சமயோசிதம் நிறைந்திருக்கும். உறவினர் அதிக அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிப் பணி நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். வெகுநாள் வாங்க நினைத்த பொருளை வாங்கி மகிழ்வீர்கள்.

**கும்பம்:** வீண் பேச்சு பேசுபவரிடம் இருந்து விலகுவது நல்லது. நிலுவைப் பணியை நிறைவேற்றினால், நிம்மதிக்கு வழி ஏற்படும். பாதுகாப்புக் குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

**மீனம்:** உற்சாக மனதுடன் செயற்படுவீர்கள். திட்டமிட்ட செயல் இனிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில், மறைமுகப் போட்டி குறையும். நிலுவைப் பணம் வசூலாகும். நண்பரால் இனிய அனுபவம் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசின்...

இதனால் தனது நிலைப்பாட்டை கிழக்கு மக்களின் நிலைப்பாடாக அறிவித்து வடக்கு கிழக்கு இணைப்பைத் தவிர்க்கும் இராஜதந்திர நகர்வை அரசு மேற்கொண்டுள்ளது என்று அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு, கிழக்கு இணைப்பைத் தவிர்த்து அரசியல் தீர்வை வழங்குவதற்கான இராஜதந்திர நகர்வொன்றை அரசு கிழக்கில் தொடங்கியுள்ளதாக அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு, கிழக்கு இணைப்பை எதிர்க்கும் முஸ்லிம் அரசியல் தலைமைகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகச் செயற்படும் தமிழ் அரசியல் தலைவர்களையும் களத்தில் இறக்கி இந்த இணைப்புக்கு எதிரான பரப்புரைகளை முன்னெடுப்பதற்கு அரசு வியூகம் வகுத்துள்ளது என அறியமுடிகின்றது.

இதன் முதற் கட்டமாக கடந்த வெள்ளிக்கிழமை ஏறாவூரில் இது தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. முன்னாள் அமைச்சர் அதாவுல்லாவின் தேசிய காங்கிரஸ், அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய கட்சிகள் ஒன்றிணைந்தே இந்தக் கூட்டத்தை நடத்தின.

தேசிய காங்கிரஸ் சார்பில் முன்னாள் அமைச்சர் அதாவுல்லா, கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் உதுமாலெப்பை, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் அதன் செயலாளர் வை.எல்.எஸ்.ஹமீட், மூத்த விரிவுரையாளர் கலாநிதி அனஸ் மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சுபைர் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

கலாநிதி அனஸ் தொலைபேசி வாயிலாக உரையாற்றினார். இதனைத் தொடர்ந்து கிழக்கின் எல்லா இடங்களிலும் இவ்வாறான கூட்டங்களை நடத்தி வடக்கு, கிழக்கு இணைப்புத் தொடர்பில் கிழக்கு மக்களின் எதிர்ப்பைத் திரட்டுவதற்கு அரசு முடிவெடுத்துள்ளது.

வடக்கு, கிழக்கு இணைப்பு மாத்திரமன்றி கூட்டாட்சி, காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் போன்றவற்றுக்கு எதிராகவும் பரப்புரைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இணைக்கப்படவேண்டும் என்று கூறப்படுகின்ற இரண்டு மாகாணங்களுள் ஒரு மாகாணத்தைச்சேர்ந்த மக்கள் இணைப்பை விரும்பாத நிலையில் இணைப்புச் சாத்தியமற்றது என்ற வாதத்தை முன்வைத்து இணைப்பைத் தவிர்ப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு இணைக்கப்படாமல் தரப்படும் அரசியல் தீர்வை தாம் ஏற்கமாட்டோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூறிவருகின்றது. அவ்வாறு இணைக்கப்பட்டால் அது தமிழீழத்தை உருவாக்கி விடும் என்றொரு பரப்புரையை மகிந்த தரப்பு தெற்கில் மேற்கொண்டு வருகின்றது. இந்த எதிர்ப்பை மீறி வடக்குக் கிழக்கை இணைப்பது அரசின் இருப்புக்கு ஆபத்தாக மாறிவிடும் என்று அரசு கருதும் அதேநேரம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் பகைத்துக்கொள்ளமுடியாத நிலையில் உள்ளது. இதனால் தனது நிலைப்பாட்டைக் கிழக்கு மக்களின் நிலைப்பாடாக அறிவித்து வடக்குக் கிழக்கு இணைப்பைத் தவிர்க்கும் இராஜதந்திர நகர்வை அரசு மேற்கொண்டுள்ளது என்று அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (வ-4)

## 8 பொலிஸா...

செய்து அவர்களில் ஒருவரைச் சித்திரவதை செய்து கொன்றனர் என்று இவர்கள் மீது சட்டமா அதிபரினால் யாழ். மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதி சந்தேகத்தின் பேரில் 5 இளைஞர்கள் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவரான சிறிஸ்கந்தராசா சுமணன் பின்னர் இரணை மடுக் குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார். சுமணனைப் பொலிஸார் அடித்து உதைத்துக் கடுமையாகச் சித்திரவதை செய்த பின்னர் தமது வாகனத்தில் ஏற்றிச் சென்றனர் என்றும் அதன் பின்னர் அவர் சடலமாக மீட்கப்பட்டதான செய்தியைத் தாம் அறிந்துகொண்டார்கள் என்றும் சுமணனுடன் கைது செய்யப்பட்ட ஏனைய நால்வரும் மல்லாகம் நீதிமன்றில் சாட்சியம் அளித்திருந்தார்கள்.

பொலிஸார் பதிவு செய்த திருட்டு வழக்கு அந்த நால்வருக்கும் எதிராக மல்லாகம் நீதிமன்றில் நடந்து வருகிறது. வழக்கு விசாரணைகளின்போது தாமும் பொலிஸாரால் சித்திரவதை செய்யப்பட்டனர் என்று அவர்கள் நீதிமன்றில் தெரிவித்திருந்தனர்.

சந்தேகநபர்கள் வழங்கிய சாட்சியத்தின் அடிப்படையில் முன்னர் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகவும் தற்போது கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகவும் கடமையாற்றும் சிந்திக்க பண்டார உள்ளிட்ட 8 பேருக்கும் எதிராக விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு மல்லாகம் நீதிவான் ஏ.யூட்சன், பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

சம்பவம் தொடர்பாக விசேட புலனாய்வுப் பிரிவு பொலிஸார் நடத்திய விசாரணையின் அறிக்கை சட்டமா அதிபருக்கு வழங்கப்பட்டது. சித்திரவதை சம்பந்தப்பட்ட வழக்கு நேரடியாகவே மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்ற சட்ட விதப்புரைக்கமைய சட்டமா அதிபரினால் யாழ். மேல் நீதிமன்றத்தில் பொலிஸ் சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

சித்திரவதைக்கு எதிரான பன்னாட்டு மாநாட்டுத் தீர்மானத்திற்கு அமைவாக 1994ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க சித்திரவதைச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் 8 பொலிஸாருக்கு எதிராகவும் இந்த வழக்கை சட்டமா அதிபர் தாக்கல் செய்தார்.

சிந்திக்க பண்டார உள்ளிட்ட 5 பொலிஸாருக்கு எதிராகக் கொலைக் குற்றச்சாட்டும் அந்த 5 பொலிஸார் உள்ளடங்கலாக 8 பொலிஸாருக்கு எதிராகச் சித்திரவதை வழக்கும் தாக்கல் செய்யப்பட்டன.

திசாநாயக்க முதியான்சலாகே சிந்தக்க நிசாந்த பிரிய பண்டார, ஞானலிங்கம் மயூரன், பத்திநாதன் தேவதயாளன், ராஜபக்ச முதியான்சலாகே சஞ்சீவ ராஜபக்ச, கோன் கலகே ஜயந்த, வீரசிங்க தொரயலாகே ஹேமச்சந்திர வீரசிங்க, விஜயரட்னம் கோபி கிருஷ்ணன், முனுகொடஹேவகே விஜேசிங்க ஆகிய எட்டு பொலிஸார் இந்த வழக்கில் எதிரிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

8 தமிழ்ப் பொதுமக்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சிறில் அபேசிங்க உள்ளிட்ட 14 பொலிஸார், கிராமசேவை உத்தியோகத்தர் ஒருவர், மருத்துவ பரிசோதனை நடத்திய விசேட சட்ட வைத்திய அதிகாரி திலக்ரமேஸ் அழகியவண்ண, விஜயபாகு படைப் பிரிவைச் சேர்ந்த 2 இராணுவ அலுவலர்கள் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் 3 பொலிஸ் அலுவலர்கள் உள்ளிட்ட 29 பேர் சாட்சிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு முதற் தடவையாக யாழ். மேல் நீதிமன்றில் நேற்று எடுக்கப்பட்டது. அரச தரப்பு சட்டத்தரணி நாகரட்ணம் நிசாந்தன், எதிரிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள 8 பொலிஸாரும் கடமையில் இருக்கின்றனர் என்று தெரிவித்து, அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவதற்கு குற்றப் புலனாய்வு பொலிஸ் பொறுப்பதிகாரி ஊடாக அழைப்பாணை பிறப்பிக்குமாறு நீதிபதியிடம் கேட்டுக் கொண்டார். அதனையடுத்து 8 பொலிசாரையும் எதிர்வரும் 22ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நீதிபதி உத்தரவிட்டார். (உ-4)

## குடும்பத்....

என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தெல்லிப்பழை கோணப்புலம் முகாமில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அந்த முகாமில் உள்ள சகோதரனைப் பார்வையிடச் சென்றிருந்தார் என்று கூறப்படும் மல்லாகம் நரியிட்டானைச் சோந்த தேவராசா உதயகுமார் (வயது-37) என்ற குடும்பத்தலைவரே அடித்துக் கொலை செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சகோதரர்களுக்கிடையே கைகலப்பு ஏற்படுமளவுக்குத் தர்க்கம் ஏற்பட்டது. அதனை மைத்துனர் தடுத்து நிறுத்தினார். பின்னர் உயிரிழந்த நபர் மைத்துனரின் வீட்டுக்குச் சென்று தகராறில் ஈடுபட்டார். அதனால் அவரை மைத்துனர் தாக்கியதாக ஆரம்ப விசாரணையில் கூறப்பட்டது. காயமடைந்தவர் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் அவர் உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. விசாரணையின் பின்னர் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகத்தால் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,26)

## பலாலியில்...

குறிப்பிட்டார். அவர்களுக்கு ஆயிரம் ஏக்கர் தேவைதானா என்பது குறித்து பின்னர் ஆராயப்பட வேண்டும்.

அவர்கள் தங்களுக்குத் தேவை என்று கூறும் ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பை மாத்திரம் தற்போது வைத்துக்குக் கொண்டு, ஏனைய நிலங்களை விடுவிக்க வேண்டும். படையினர் தாம் நினைத்தவாறு செயற்பட இடமளிக்க முடியாது. நிலம் என்பது மக்களின் வாழ்வுடன் தொடர்புடைய விடயம். இதனை நான் ஐ.நா. பொதுச் செயலரின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளேன் என்றார் வடக்கு மாகாண முதலமைச்சர். (வ-5-101)

## யாழ்....

தங்கியுள்ள மக்களில், காணிகள் இல்லாதவர்களுக்கு மாற்றுக் காணி வழங்குவது தொடர்பான கடிதமும், காணி விடுவிக்கப்படக் கூடியவர்களுக்கு காணி விடுவிக்கப்படும் என்ற கடிதமும், எஞ்சியோருக்கு உங்கள் காணி விடுவிக்கப்படாது இழப்பீட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்ற கடிதமும் மாவட்டச் செயலகத்தினால் வழங்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பிலேயே, யாழ். மாவட்டச் செயலரிடம் விளக்கம் கேட்டு, வடக்கு மாகாண முதலமைச்சர் நேற்றுக் கடிதம் அனுப்பி வைத்தார். வடக்கு மாகாண சபையுடம் கலந்துரையாடலை மேற்கொள்ளாமல், விடுக்கப்பட்ட அறிவிப்புகள் ஒரு சாராருக்குச் சாதகமானதாகவே காணப்படுகின்றன. பொது மக்களின் காணிகள் தொடர்பாக கேள்வி கேட்கவும், தகவல்களை அறியவும் அவர்களுக்கு உரிமை உண்டு. அந்த வகையில், சிவில் நிர்வாகத்துறையினரிடம் கையளிக்கப்பட்டு, பொது மக்களுக்குத் தேவையானவற்றை அவர்களே பெற்றுக்கொள்ளும் வகையில் தீர்மானிக்கப்பட வேண்டும்.

போர் முடிவுற்ற காலச் சூழலிலும் பெரிய அளவு தொகையில் காணிகளை இராணுவத்தினர் கையகப் படுத்தியிருப்பது தொடர்பான உரிய காரணங்களைத் தெரிவிக்க வேண்டும். சில இடங்களில் இராணுவ முகாம்கள் இருக்கத் தேவை இல்லை என்பதை எம்மால் நிபுணத்துவ ரீதியாக உறுதிப்படுத்த முடியும். சமாதான காலத்தில் அவ்வாறான சுவீகரிப்புகள் ஐ.நா.வின் தீர்மானத்துக்கு முரணானவை ஆகும்.

மேலும் இராணுவத்தினர் தமக்கு முகாம்கள் அமைப்பதற்கு ஆயிரம் ஏக்கர்கள் தேவை என்று கோரியுள்ளனர். இதில் எனக்கு உடன்பாடு இல்லை என்று மாவட்டச் செயலருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். (வ-5-ரி4)

## மரண அறிவித்தல்கள்

" கர்த்தருக்குள் மரிக்கின்றவர்கள் இன்று முதல் பாக்கியவான்கள் வெளி 14 -13 "

### நாகமுத்து மார்க்கண்டு



புத்தூரைப் பிறப்பிடமாகவும் கட்டப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து மார்க்கண்டு 06.09.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும் றமேஸ். சுரேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் கஸ்ப்பிரியா. அமுதா ஆகியோரின் அன்பு மாமனாரும் கஸ்மியாவின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (07.09.2016) புதன்கிழமை பி.ப 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 4.00 மணியளவில் நல்லடக்கத்திற்காக கோப்பாய் ராசவீதியிலுள்ள கானான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இருபாலை தெற்கு,
கட்டப்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 998 5553/ 077 127 5393

### சோமசுந்தரம் சோமஸ்கந்தராஜா



பிறப்பு 1950.06.22 இறப்பு 2016.09.05

மட்டுவில் தெற்கு. சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சோமஸ்கந்தராஜா 05.09.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - வேதநாயகி தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும். சாவித்திரியின் அன்புக் கணவரும். காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் ஸ்ரீஸ்கந்தராஜா. திருநாகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும். மீரா. மைதிலி. மைந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2016) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4 மணியளவில் குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(J/4378)
(11,18)

வாகையடி கிழக்கு வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

077 233 3303, 077 718 9439

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோப்பாய்...

வாகனத்துடன், சாரதி தப்பியோடியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
கோப்பாய் பூதர் மடம் பகுதியில் நேற்று இரவு 7 மணியளவில் விபத்து இடம்பெற்றது. கோப்பாய் வடக்கைச் சேர்ந்த கதிர்காமநாதன் நவபுஸ்பம் (வயது-65) என்ற முதியவரே உயிரிழந்தார்.
மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் காயமடைந்தனர். உடனடியாக அவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவசர சிகிச்சைப் பிரிவில் நவபுஸ்பம் உயிரிழந்தார். சாரதி தப்பியோடிய போதும் அவரைக் கைதுசெய்வோம் என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,ரி,17)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வரத்தினம் செல்லத்துரை



கைதடிமேற்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் செல்லத்துரை நேற்று (06.09.2016) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சேனாதிராசா - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், சொருபன் (பல் வைத்தியர், கொழும்பு), யா/ டிறிபேர்க் கல்லூரி ஆசிரியைகளான சசிகலா, சர்மிளா ஆகியோரின் அன்புத் தாயாரும், கிரேஸ் ஜோசப்பின் (ஆசிரியர், சென். தோமஸ், கல்கிசை), விக்னேஸ்வரன் (காசாளர், தர்ணிகா மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியும், ஷானின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் இராசரத்தினம், காலஞ்சென்றவர்களான கோமளவதி, வெற்றிவேலு ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வியாழக்கிழமை (08.09.2016) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மானிப்பாய் வீதி, கைதடி மேற்கு, கைதடி.
தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே: 021 205 7071

## மரண அறிவித்தல்

### வேலாயுதம்பிள்ளை அவிநாசிநாதன்

(ஓய்வுபெற்ற விலைமதிப்பீட்டு உத்தியோகத்தர் இலங்கை விலைமதிப்பீட்டுத் திணைக்களம்)



தோற்றம் 04.02.1952
மறைவு 06.09.2016

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதம்பிள்ளை அவிநாசிநாதன் நேற்று (06.09.2016) செவ்வாய்க்கிழமை பருத்தித்துறையில் காலமானார்.

அன்னார் மஞ்சுளா அவிநாசிநாதனின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சங்கரதாஸ் மற்றும் செல்வமலர் தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெகேந்திரா, தர்மேந்திரா, இராகவேந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும், தமிழ்அரசி, அருணா, சங்கீதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், திருமதி சுசீலாதேவி, குமாரதாசன், காலஞ்சென்ற இராமமூர்த்தி மற்றும் திருமதி லோகேஸ்வரி, கணாதீஸ்வரன், காலஞ்சென்ற திருமதி மனோரஞ்சினி, குமுகேசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தேவராசா, டாக்டர் வைரவநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், தமிழ்ச்செல்வி, அகலவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.09.2016) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை கோரியடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர். (J/4389) (11,17,18)

ஜெகேந்திரா - 0061 408 362 228,
தர்மேந்திரா - 077 262 1155,
இராகவேந்திரா (ராகுல்) - 077 5212709

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா தம்பிஐயா



உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தம்பிஐயா நேற்று (06.09.2016) செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னம்மா, தங்கமணி, சுப்பிரமணியம் மற்றும் புனிதரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.09.2016) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்ணகை அம்மன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
தகவல்: க. புனிதரட்ணம் (கிளி)

### கனகசபை பொன்னம்பலம்



சிறுவிளான், இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை பொன்னம்பலம் கடந்த (31.08.2016) காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2016) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு மகன் ரஞ்சனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முள்ளானை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

021 205 9723
தகவல்: பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

திருமதி

### பவளம்மா(பவளம்) வைத்திலிங்கம்



யாழ் உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பவளம்மா (பவளம்) வைத்திலிங்கம் தனது அகவை நூறைப் பூர்த்தி செய்து கடந்த (05.09.2016) திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி-ஆச்சிக்குட்டி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி ஆறுமுகம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சரஸ்வதி, விஜயரத்தினம், விஜயதேவி, விஜயராணி,பத்மராணி, விஜயமலர், பாலசுப்பிரமணியம்(நாதன்), ஜெயக்குமார் (கனடா), ஜெயந்தி, சுகந்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான ரத்தினம், கனகம்மா, ராசம்மா, நல்லதம்பி, பூபாலசிங்கம், பொன்னம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான ராசரத்தினம், புனிதவதி, முத்துச்சாமி மற்றும் சொர்ணகாந்தி ஆகியோரின் மைத்துனியும் காலஞ் சென்றவர்களான ராசரத்தினம்,மகேஸ்வரி (தேவி) மற்றும் மகேசன், காலஞ்சென்ற குண நாயகம் தம்பிப்பிள்ளை மற்றும் புலேந்திரன், இந்திராதேவி, அமுதா, லோகராசா, குலசிறீ ஆகியோரின் மாமியாரும் நிரஞ்சனா,குமரேசன், தர்மராசா, மதிரஜனி, காலஞ்சென்ற ஆனந்தரூபி, பத்மரூபி ,கமலரூபி, காண்டீபன், ஜானகி, பகீரதன், மாதவன், குமு தினி, மைதிலி, மணிவண்ணன், மதிவதனி, யசோதரா, உதயபானு, சுமதி, சுகன்யா, சியாமினி, சுஜாந்தன், சுரேந்திரன், தாரணி, காலஞ்சென்ற ரமணேந்திரன், அபிராமி, சிவகாமி, பார்கவி, கேசவன், பிரணவி, பிருந்துவி,சாருகேஷ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.09.2016) வியாழக்கிழமை அன்னாரது இல்லம் பவளகத்தில் நடைபெற்று காலை 10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேம்பன் ஒழுங்கை, உரும்பிராய் தெற்கு.
தகவல்: வி. பத்மராணி பாலசுப்பிரமணியம் (நாதன்) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் இராசதுரை

(சீநோர் முன்னாள் லொறி சாரதி)



அன்னை மடியில்
19 . 04 . 1938
இறைவன் அடியில்
03 . 09 . 2016

நாயன்மார் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் இராசதுரை நேற்று (03.09.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-சின்னத்தங்கம் தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான பொன்னு-பார்வதி தம்பதிகளின் மருமகனும் இராசமுத்துவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, நாகம்மா, பூரணம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம்,சின்னையா, மார்க்கண்டு, இரத்தினம், இராசையா மற்றும் ருக்குமணி, நேசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் குமார்(UK), சுமதி(சுவிஸ்), சுதன்(UK), உமா, மாலா , பிரேந்திரா(வவி-UK), குபேந்திரா (கோக்கோ) ஆகியோ ரின் பாசமிகு தந்தையும் ரஜனி(UK), கண்ணன்(சுவிஸ்), ஜக்குளின்(UK), குமார், தாஸ், கோபிகா(UK), றெஜிவேனியா, குகன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனும் தாரணி, தாமினி, அரன் (UK), சிம்சியா, ஜோன் சியன்,ஜோய்சன்(சுவிஸ்), றொசானி, மெலனி, ஜெனனி (UK), மொறின் ஜெனாட்(UK), அபிஷாலினி, தேவரோகித், சௌமியா, சுஜாஸ், ருதீஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் டெவினின் (சுவிஸ்) அன்புப் பூட்ட னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.09.2016) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

126/1,நாயன்மார் வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.
021 2229081,077 1103322
தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூதுவர் மீதான...


கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும், குற்றவாளிகள் இலங்கையர்களாக இருக்கும் பட்சத்தில், அவர்களுக்கு எதிராக இலங்கையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்தினார். மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், சபையில் நேற்றுக் கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் மேலும் தெரிவித்ததாவது:

தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறேன். குற்றவாளிக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் இலங்கையர்கள் கிடையாது என்று பிரதமர் கூறினார்.ஆயினும்கூட அவ்வாறானவர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்களாக இருக்கும் பட்சத்தில், அவர்களுக்கு இலங்கையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது பற்றி அரசு பரிசீலிக்க வேண்டும்.

நாடு தற்போது ஒற்றுமையை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கும் நிலையில், இப்படியான சம்பவங்கள் அநாவசியமானவை. இதன் பின்விளைவுகள் எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தும் என்று புரியாத ஆள்களின் முட்டாள்தனமாக செயற் பாடுகளை ஊக்குவிக்கப்படக்கூடாது. அவை தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

இலங்கையில் பதற்றமும், எந்நேரத்திலும் மோதல்களை உருவாக்கக்கூடிய நிலைமையும் இருக்க வேண்டும் என்பதே இந்த மாதிரியானவர்களின் தேவையாக இருக்கின்றது. இவை அனைத்தும் குறுகிய அரசியல் இலாபங்களுக்காகவே தவிர, இந்த நாட்டின் நன்மைக்காகக் கிடையாது. இந்த நபர்களின் தேவைக்கேற்ப செயற்படுமளவுக்கு எவரும் முட்டாள்களாக இருக்கவேண்டும் என்று நான் கருதவில்லை- என்றார். (வ-4)

## கண்ணீர் அஞ்சலி



பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும்
**திருமதி ஜெயந்தினி மகிந்தன்**
அவர்களின் அன்பு மாமனார்

### சோமசுந்தரம் சோமாஸ்கந்தராஜா

(வாகையடி மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி)

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை ஊழியர் நலன்புரி சங்கம்–பளை**

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் **திருச்சிற்றம்பலம்**
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி வள்ளிப்பிள்ளை அருணாசலம்

அவர்கள் கடந்த (04.09.2016) அன்று காலமான செய்தி அறிந்து துயர் அடைகின் றோம். அவரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பூ. அன்பழகன் மற்றும் மாதகல் மேற்கு நண்பர்கள்.**

## மரண அறிவித்தல்

### சச்சிதானந்தேஸ்வரக்குருக்கள் கந்தராஜேஸ்வரசர்மா



கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிட மாகவும் கொக்குவில் கிழக்கு அச்சக வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சச்சிதானந்தேஸ்வரக்குருக்கள் கந்தரேஸ்வரசர்மா நேற்று (06.09.2016) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தேஸ்வரக் குருக்கள் - ராஜராஜேஸ்வரி அம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கக்குருக்கள் - சாரதாம்பாள் தம்பதியரின் அன்பு மருமகனும், ரேவதியின் அன்புக் கணவரும், மயூரவன் (கனடா), நர்மதா, ஜெனனி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், அம்பிகா (கனடா), இரட்ணரூபசர்மா ( சோதிட பரிபாலன மடம், கொக்குவில்), பிரசாந்தன் (ஜேர்மனி) ஆகி யோரின் மாமனும், சுவஸ்திகன், சைனிகா (கனடா), சாக்ஸிதசர்மா, மதுசனசர்மா, பிரகலக்ஷிதசர்மா, ஹரிசாயி, ஹரிசரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"இரட்ணா இல்லம்"**
**43 A, அச்சுக்கூட வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் சமூக சேவை கிளையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
**செல்வி நளினி சிறீகணநாதன்**
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி செல்லம்மா சிறீகணநாதன்

அவர்களின் திடீர் இழப்பால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்**
**பிரதேச செயலகம்**
**தென்மராட்சி.**


(C 25195)
(14.17)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

### வினாசித்தம்பி காசிலிங்கம்

(முன்னாள் பங்காளர் - No : 1 மதுபானசாலை)

திதி: பூர்வசஷ்டி (07.09.2016)




**ஆண்டுகள் நான்கு சென்றாலும்**
**ஆறிடுமோ எம் துயர் அப்பா!**
**ஆண்டவன் அடியில் இருந்து**
**எங்களை ஆசீர்வதியுங்கள் எம்**
**ஆருயிர் அப்பா**

**'64/4^A' பொற்பதி வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
13 . 12 . 1931



இறப்பு
20 . 08 . 2015

### கந்தையா பொன்னுத்துரை

**பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்**
**அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்**
**உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்**
**வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து**
**ஆண்டு ஒன்று மறைந்ததையா**
**எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்**
**உங்கள் ஆத்மா சாந்தியடைய**
**இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

நீர்வேலி மடக்கு,
நீர்வேலி.

உங்கள் பிரிவால் துயருறும் ...
பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

திருமதி

### இந்திராதேவி பரமேஸ்வரன்

பிறப்பு
20 . 10 . 1951



இறப்பு
05 . 09 . 2016

கண்டாவளையைப் பிறப்பிடமாகவும் வீரபத்திரர் கோயிலடி, கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராதேவி பரமேஸ்வரன் கடந்த (05.09.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-கனம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் பரமேஸ்வரனின் அன்பு மனைவியும் செல்வராணி, லோகேஸ்வரன்(கனடா) ஆகியோரின் சகோதரியும் கிரிதரன் (கனடா), பகீரதன்(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கிரிஜா(கனடா), ராஜி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் நிலவன், காவியா, ரெஷிறா, ரெஷான் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.09.2016) வியாழக்கிழமை மு.ப 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கந்தன்காடு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இந்திரா, வீரபத்திரர் கோயிலடி,**
**கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 8864232**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறியது அரையிறுதி

யாழ்ப்பாணம், செப். 7
பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத்தில் இரண்டு புள்ளிகள் வித்தியாசத்தில் அரையிறுதி வாய்பைத் தவற விட்டது யாழ். பல்கலைக் கழக பெண்கள் அணி.
வயம்ப பல்கலைக் கழகத்தின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில், யாழ். பல்கலைக் கழக அணியை எதிர்த்துக் கொழும்பு பல்கலைக்கழக அணி மோதியது. 34:36 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ். பல்கலைக் கழக அணி தோல்வியடைந்த தையடுத்து அந்த அணி வெறும் இரண்டு புள்ளிகளால் அரையிறுதியைத் தவற விட்டது. (ம-23)

## இங்கி. — பாக். ரி—20 இன்று

இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதலாவதும் கடைசியானதுமான ரி-20 ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இங்கிலாந்தின் மன்செஸ்டர் மைதானத்தில் இலங்கை நேரப்படி இரவு 11 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடர் 2:2 என்ற அடிப்படையில் சமநிலையில் முடிவடைந்தது. ஒருநாள் தொடரை 4:1 என்ற அடிப்படையில் இங்கிலாந்து கைப்பற்றியது. (ம)






## பெரிய ஒப்பந்தங்களின் கடவுளை விசாரிக்கத் தடை விதிக்கப்பட்டது

இந்துக் கடவுளை அவமதித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு தொடரப்பட்ட வழக்கில், டோனி மீதான குற்றவியல் நடவடிக்கைகளுக்கும், விசாரணைக்கும் தடை விதித்தது இந்திய உச்ச நீதிமன்றம்.
கடந்த 2013ஆம் ஆண்டு இந்திய மாத இதழ் ஒன்றில் இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் டோனியை விஷ்ணு கடவுள் போல சித்திரித்து 'பெரிய ஒப்பந்தங்களின் கடவுள்' எனக் குறிப்பிட்டு அட்டைப்படம் வெளியிடப்பட்டது. இந்த விளம்பரத்தில் டோனிக்குப் பல கைகள் இருப்பதைப் போலவும், அதில் ஒவ்வொரு கையிலும் ஒவ்வொரு பொருளை வைத்திருப்பது போலவும் வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்தப் பொருள்களில் ஒன்று பாதணி. இதனையடுத்து டோனி, விஸ்ணுவை அவமதித்ததாகத் தெரிவித்து வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த அனந்தபூர் நீதிமன்றம் டோனிக்கு எதிராகப் பிணையில் வெளிவர முடியாத பிடியாணையைப் பிறப்பித்தது. இந்தத் தீர்ப்புக்கு எதிராக டோனியின் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது. இதனையடுத்து டோனி மீதான குற்றவியல் விசாரணைகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் இந்திய உச்ச நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தடை விதித்தது. (ம)

## மிரட்ட வருகிறார் வில்லியர்ஸ்

தென்னாபிரிக்க அணியின் நட்சத்திர வீரரும் தலைவருமான வில்லியர்ஸ் காயத்திலிருந்து மீண்டு, மீண்டும் களமிறங்கவுள்ளார்.
தென்னாபிரிக்க, ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் இந்த மாதம் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடருக்கான தென்னாபிரிக்க அணி நேற்று அறிவிக்கப்பட்டது. நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரிலிருந்து காயம் காரணமாக விலகியிருந்த வில்லியர்ஸ் மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளார்.
தென்னாபிரிக்க அணி விவரம் – வில்லியர்ஸ் (தலைவர்), அப்பொட், ஹசிம் அம்லா, பெக்கார்டின், குயின்டன் டி ஹொக், டுமினி, பிளாசிஸ், தாகிர், மில்லர், மொறிஸ், பார்னெல், ஆரோன் பாங்கிசோ, பெலுக்வாயோ, தப்ரைஸ், ஸ்ரெய்ன், ரபாடா (ம)

## மெஸ்ஸி விலகல்

கால்பந்தாட்ட உலகக் கிண்ணத்துக்கான தகுதிச்சுற்றில் வெனிசுலாவுக்கு எதிராக நாளை நடைபெறவுள்ள ஆட்டத்திலிருந்து மெஸ்ஸி விலகினார். மெஸ்ஸியின் விலகலை ஆர்ஜென்ரீனாவின் பயிற்சியாளர் எட்கார்டோ பௌஸா உறுதிப்படுத்தினார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், மெஸ்ஸியால் வெனிசுலாவுக்கு எதிரான ஆட்டத்தில் விளையாட முடியாது. அவரது இடது காலில் காயம் [illegible] அவருடைய விடயத்தில் மிகவும் கவனமாக இருக்க [illegible] என்று பௌசா தெரிவித்தார். (ம)



## வீரர்களை ஒப்பிடுவது தேவையற்றவையாம்

சிறந்த துடுப்பாட்ட வீரர் யார் என்ற ஒப்பீடு தேவையற்றது எனத் தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவரான பொண்டிங்.
நிகழ்கால கிரிக்கெட் உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர் யார் என்ற ஒப்பீடு சமீப காலமாக உச்சத்தில் உள்ளது. இந்தியாவின் கோக்லி, ஆஸ்திரேலியாவின் சிமித், இங்கிலாந்தின் ரூட், நியூசிலாந்தின் வில்லியம்சன் ஆகியோர் குறித்த போட்டியில் உள்ளனர். இந்த நிலையிலேயே இந்த ஒப்பீடு தேவையற்றது என பொண்டிங் தெரிவித்தார்.
கோக்லி, சிமித், ரூட், வில்லியம்சன் நால்வருமே சிறந்தவர்கள்தான். இவர்களில் ஒருவரைச் சிறந்தவராகக் கருதவோ அல்லது தெரிவிக்கவோ முடியாது. இந்த ஒப்பீட்டை கிரிக்கெட் உலகம் கைவிட வேண்டும். இது வீரர்களிடையே நல்ல உறவு இருக்க வழிவகுக்காது என பொண்டிங் தெரிவித்தார்.
கடந்த வருடம் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரை ஆஸ்திரேலியா கைப்பற்றிய பிற்பாடு, பொண்டிங், சிமித்தே உலகின் சிறந்த வீரர் என்று குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



## நியூசி. அறிவிப்பு



இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டது. நியூசிலாந்து அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்யவுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் எதிர்வரும் 22 ஆம் திகதி கான்பூரில் தொடங்குகிறது. இதனையடுத்து கொல்கத்தா, இந்தூர் ஆகிய நகரங்களில் அடுத்தடுத்த ஆட்டங்கள் நடைபெறும். இந்த நிலையில் குறித்த தொடருக்கான நியூசிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டது.
நியூசிலாந்து டெஸ்ட் அணி – வில்லியம்சன் (தலைவர்), போல்ட், பிரேஸ்வெல், கிரைக், குப்தில், லாதம், நீஸ்கம், ஹென்றி நிக்கொல்ஸ், லூக் ரோஞ்சி, மிச்செல் சான்நெர், சவுத்தி, ரெய்லர், நீல் வாக்னெர், வற்லிங். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யங்ஹென்றிஸ், ஞானமுருகன் இறுதியில் இன்று பலப்பரீட்சை

கரணவாய், செப். 7
புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டு கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ், மயிலங்காடு ஞானமுருகன் அணிகள் இன்று மோதவுள்ளன.
விக்னேஸ்வராவின் மைதானத்தில் இன்று புதன் கிழமை இரவு 8 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறும். முன்னதாக இடம்பெறும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் வி.கழகத்தை எதிர்த்து வதிரி டயமன்ஸ் வி.கழகம் மோதவுள்ளது. (ம-108-23-422)



## இளந்தளிரின் கால்பந்தாட்டம் உருத்திரபுரம் வி.க. சம்பியன்

யாழ்ப்பாணம், செப். 7
கிளிநொச்சி வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக் கழகம் நடத்திய விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.
இளந்தளிர் விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. உருத்திரபுரம் அணியை எதிர்த்து திருநகர் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. சிறந்த வீரனாக உருத்திரபுரம் அணியின் பிரதீப், சிறந்த கோல்காப்பாளராக திருநகர் அணியின் சதீஸ் இருவரும் தெரிவானார்கள். (ம-23)

## வடக்குக்கு வெண்கலம்

தேசியமட்ட குத்துச்சண்டைப் போட்டியில் ஆண்கள் பிரிவில் வடமாகாணத்துக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.
கொழும்பு றோயல் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற ஆண்களுக்கான குத்துச்சண்டைப்போட்டியில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய ரமேஸ் 75 கிலோ எடைப்பிரிவில் தன்னை எதிர்த்த சிப்பாயை வென்று வெண்கலப் பதக்கம் வென்றார். (ம-23)



## இந்திய கிரிக்கெட் சபையிடம் கேள்விகளை அடுக்கும் டோனி



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது ரி-20 ஆட்டம் தாமதமாக ஆரம்பித்தமைக்கு இந்தியக் கிரிக்கெட் சபையிடம் சில கேள்விகளை அடுக்கினார் இந்திய அணித் தலைவரான டோனி.
இந்த இரு அணிகளுக்கும் இடையில் அமெரிக்காவில் நடைபெற்ற இரண்டாவது ரி-20 ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய தீவுகள் 143 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்தியா, இரு பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 15-0 என்றிருந்த போது மழை குறுக்கிட ஆட்டம் கைவிடப்பட்டது. ஆனால் இந்த ஆட்டம் திட்டமிட்ட நேரத்தில் ஆரம்பித்திருந்தால் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி நிச்சயமான ஓர் முடிவு கிடைத்திருக்கும். டக்வேர்த் லூயிஸ் முறைக்கு குறைந்தது 5 பந்துப்பரிமாற்றங்கள் வீசப்பட வேண்டும். ஒளிபரப்பில் சிக்கல் ஏற்பட்டதால் 30 நிமிடங்கள் தாமதமாகவே ஆட்டம் ஆரம்பமானது. இந்த நிலையிலேயே டோனி சில கேள்விகளை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் அடுக்கியுள்ளார்.
தாமதமாக ஆட்டத்தை ஆரம்பித்தது ஏன்?, ஒளிபரப்பில் சிக்கல் இருப்பதை ஏன் முற்கூட்டியே அறியவில்லை?, இந்த ஆட்டத்தின் முடிவு இந்தியாவுக்கு சாதகமாக அமைந்திருக்க வேண்டும். எனவே ஆட்டம் சமநிலையில் முடிந்தமைக்கு நானோ அல்லது அணியோ பொறுப்பேற்கப் போவதில்லை. எனவே இந்திய கிரிக்கெட் சபை இந்த விடயத்துக்கு பொறுப்பேற்குமா? என கேள்விகளை அடுக்கினார். (ம)

## யாழ். மத்தியின் அஞ்சலோட்டம்; சென். ஆன்ஸ் தங்கம் வென்றது




யாழ். மத்திய கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட 200 மீற்றர் அஞ்சல் ஓட்டப்போட்டியில் ஆண்கள் பிரிவில் மன்னார் சென். ஆன்ஸ் மகா வித்தியாலயம் தங்கப் பதக்கத்தை வென்றது.
யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இந்தப் போட்டி நடைபெற்றது.
நிர்ணயிக்கப்பட்ட இலக்கை 1 நிமிடம், 37 செக்கன்கள், 01 மில்லி செக்கன்களில் அடைந்து தங்கத்தை வென்றது மன்னார் சென். ஆன்ஸ் மகா வித்தியாலயம். 1 நிமிடம், 38 செக்கன்கள், 03 மில்லி செக்கன்களில் அடைந்த யாழ். மத்திய கல்லூரி அணி வெள்ளிப் பதக் கத்தையும், 1 நிமிடம், 38 செக்கன்கள், 09 மில்லி செக்கன்களில் அடைந்த சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வெண் கலப் பதக்கத்தையும் வென்றன. (ம-23)

## குறிஞ்சிக்குமரன் அணி போராடி வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம், செப். 7
மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை போராடி வென்றது குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி.
இருதயராஜாவின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் முடிவில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பதிவுசெய்யவில்லை. இதனால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம். (ம-23)



இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவையொட்டி முல்லைத்தீவ மாவட்ட பொலிஸ் நிலையங்களுக்கு இடையே நடத்தப்பட்ட துடுப்பாட்டத் தொடரில் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவு அணி சம்பியனானது. (ம-ரி7-102)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 7
இலங்கைப்பாடசாலைகளின் கால்பந்தாட்ட சம்மேளனம், யாழ். மாவட்ட பாடசாலைகளின் 15 வயதுக்குட்பட்ட இருபால் அணிகளுக்கும் இடையில் தொடரொன்றை முன்னெடுக்கவுள்ளது.
எதிர்வரும் 13ஆம், 14 ஆம், 15ஆம் திகதிகளில் முன்னெடுக்கப்படவுள்ள இந்தத் தொடர் தொடர்பான கலந்துரையாடல் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இன்று பிற்பகல் 1.30மணிக்கு நடைபெறவுள்ளது. தொடரில் கலந்துகொள்ளவுள்ள பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களை கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-422)

## பல்கலைகளின் எல்லே இன்றும், நாளையும்

யாழ்ப்பாணம், செப். 7
இலங்கை பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான எல்லேத் தொடர் இன்று ஆரம்பமாகிறது. வயம்ப பல்கலைக் கழகத்தின் மைதானத்திலேயே ஆட்டங்கள் அனைத்தும் நடைபெறவுள்ளன.
யாழ். பல்கலைக் கழக ஆண்கள் அணி தனது லீக் ஆட்டங்களில் களனி பல்கலைக்கழகம், பேராதனை பல்கலைக் கழகம், தென்கிழக்கு பல்கலைக் கழகம் ஆகியவற்றுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது. யாழ். பல்கலைக்கழக பெண்கள் அணி தனது லீக் ஆட்டங்களில் பேராதனை பல்கலைக் கழகம், சப்ரகமுவ பல்கலைக் கழகம் ஆகியவற்றுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவச ஆங்கில வகுப்பு
இலகு முறையில் நான்கு மணித்தியாலத்தில் ஆங்கிலம்
காலம்: 11.09.2016 Sunday
Time - 09.00am to 01.00pm
பதிவுகளிற்கு முந்துங்கள்
ELAS Sir Pon Ramanahan Rd, Thirunelveli, Jaffna. (பல்கலை எதிரில்)
Te:- 021 221 2410 Hotline:- 076 697 3040 / 077 050 4446

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதியோர், இளைஞர்கள், யுவதிகள், தொழில்புரிவோர்;வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் 10.09.2016 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. பி.ப 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
வாரநாள் (திங்கள்,புதன்) பிரிவுகள் ஆரம்பம் 12.09.2016
காலை 10.00-12.00 மாலை 04.30-06.00
பாடப்புத்தகங்கள் சான்றிதழ், மற்றும் VIDEO DVD அனைத்தும் இலவசம்.
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

NEW SCIENCE HALL
KANNATHIDDY ROAD JAFFNA
2017 A/L
DAY CLASS
PHYSICS
BY
MR.N கபிலன்
MON → FRI
9.30 - 11.30
ஆரம்பம் : 07.09.2016

பிற்போடப்பட்டுள்ளது
பூமணி சோமசுந்தரம்
நாளை (08.09.2016) வியாழக்கிழமை நடைபெறவிருந்த அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.
இல.12,
நந்தாவில் ஒழுங்கை, குடும்பத்தினர்.
தாவடி, கொக்குவில்.

தொழிநுட்பத்துறை மாணவர்களுக்கான
விசேட செயன்முறை செயலமர்வுகள்
க.பொ.த.உயர்தரம் 2016 பரீட்சைக்கு தோற்றிய பொறியியல், உயிர் முறைமைகள் தொழிநுட்ப மாணவர்களுக்கான செயலமர்வுகள் ஆரம்பம்.
காலம் : 12.09.2016 - 20.09.2016
நேரம் : 8.30 Am - 5.30 Pm
வளவாளர்கள் : துறைசார் நிபுணத்துவம் மிக்க வளவாளர்கள்
எமது கல்லூரியில் உள்ள ஆய்வுகூடத்தில் முற்றிலும் இறுதிப் பரீட்சைக்குரிய அனைத்து செயன்முறைகளையும், நிலையறிப் பரீட்சைகளையும் ஒவ்வொரு மாணவரும் தனித்தனியாக செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் இறுதிப் பரீட்சையில் 25 புள்ளிகளை பெற்றுக் கொள்வதற்கு 100% உத்தரவாதம் தருகின்றோம்.
➡ முற்பதிவுகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு நேர அட்டவணையில் முன்னுரிமை வழங்கப்படும்.
இயக்குனர்: உயர்கலைக் கல்லூரி A9 வீதி, மீசாலை.
T.P : 077 2367520, 021 2270851

# இலங்கைக்கு நேற்று இரக்கமில்லாத அடி

## மக்ஸ்வெல் மிரட்டினார்




இலங்கைக்கு எதிரான முதலாவது ரி-20 ஆட்டத்தில் 85 ஓட்டங்களால் வெற்றிபெற்றது ஆஸ்திரேலியா. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. ஆஸ்திரேலியாவின் ஆரம்ப வீரர்களாக வோர்ணர் மற்றும் மக்ஸ்வெல். இலங்கைக்கு வில்லங்கம் நேற்று மக்ஸ்வெல்லின் வடிவில் ஆரம்பமானது. பவர்பிளே வரை பந்துப்பரிமாற்றத்துக்கு 9 ஓட்டங்கள் என ரி-20 ஆட்டங்களுக்கு உரிய சராசரியிலேயே இன் னிங்ஸ் நகர்ந்தது. ஆஸி 57 ஓட்டங்களைப் பெற்றி ருந்த போது ஆட்டமிழந்தார் வோர்ணர். கவாயாவின் ஆட்டம் அளவுக்கு அதிக அதிரடி என்றும் சொல்லும் வகையில் இல்லை. ஆனால் படிப்படியாக மிரட்ட ஆரம்பித்தார் மக்ஸ்வெல். ஆரம்பத்தில் திசர பெரேரா, சேனநாயக்க இருவரும் முறையாக வாங்கிக்கட்டினர். பின்னர் ராஜித, லக்மல் இருவரும் கவனிக்கப்பட்டனர். 9 பந்துப்பரிமாற்றங்களில் 100 ஓட்டங்களைத் தொட்டது ஆஸ்திரேலியா. 27 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் மக்ஸ்வெல். அணி 154 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆட்டமிழந்தார் கவாயா. மக்ஸ்வெல், ஹெட் இணை இலங்கைச் சிங்கங்களை வேட்டையாட ஆரம்பித்தது. இருவரும் போட்டிபோட்டு சிக்சர்களைப் பறக்கவிட்டனர். 49 பந்துகளில் மக்ஸ்வெல்லின் சதம் பதிவானது. ரி-20 ஆட்டங்களுக்கு என விசேடமாக அழைக்கப்பட்டமைக்கு ஏற்ற அதிரடியாட்டத்தை மக்ஸ்வெல் முழுவதுமாக வெளிப்படுத்தினார்.

250 இற்கும் அதிகமான சராசரியில் ஹெட் அடித்தாடினார். இறுதிப்பந்துப்பரிமாற்றத்தில் 263 ஓட்டங்களை எட்டி ரி-20 ஆட்டங்களில் அதிக ஓட்டங்களை எடுத்த அணி என்ற சாதனையை நிலைநாட்டியது ஆஸ்திரேலியா. மக்ஸ்வெல் 145 ஓட்டங்களுடன் (9சிக்சர்கள், 14 பவுண்டரிகள்) ஆட்டமிழக்காதிருந்தார். ஹெட் 45 ஓட்டங்களுடன் இறுதிப்பந்தில் ஆட்டமிழந்தார்.

120 பந்துகளில் 264 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி களமிறங்கியது இலங்கை. முதல் பந்துப்பரிமாற்றதிலேயே 4 ஓட்டங்களுடன் போல்ட் செய்யப்பட்டார் டில்சான். இலங்கைக் கொடிகள் சுருட்டி மடித்து வைக்கப்பட்டன, சிலர் மைதானத்தை விட்டு வெளியேற ஆரம்பித்தனர். சக ஆரம்ப வீரரான பெரேராவும் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். டி சில்வாவை போல்ட் செய்தார் பல்க்நெர். சந்திமல்லுடன் சிறிய இணைப்பாட்டத்தை வழங்கினார் குசல் மெண்டிஸ். இணைப்பாட்டமாக 31 ஓட்டங்கள் பகிரப்பட்டன. இதுவே முன்வரிசையில் பதிவான ஆகச்சிறந்த இணைப்பாட்டமாக அமைந்தது. 22 ஓட்டங்களுடன் மெண்டிஸ் ஆட்டமிழந்தார். அரைச்சதம் கடந்தார் சந்திமல். சந்திமல் ஆட்டமிழக்க இலங்கையின் சராசரி சடுதியான வீழ்ச்சியடைந்தது. முடிவில் இலங்கை 178-9. 85 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது ஆஸி.

தொடரில் இரு ஆட்டங்கள் எனவே அடுத்த ஆட்டத்தில் இலங்கை வெற்றிபெற்றாலும் தொடர் 1:1 என்று சமநிலையிலேயே முடியும்.

V2 TRAVELS 11/09/2016 ஞாயிற்றுக்கிழமை
பருத்தித்துறை திறப்புவிழாவில் பணப்பரிசு
நீங்கள்
ரூபா 1000/= பணப்பரிசு
வெளிநாட்டுக்கு பார்சல் அனுப்பப்போறீங்களா?
விமானப்பயணச்சீட்டு எடுக்கப்போறீங்களா?
UK-550*/=Kg
DELIVERY IN 3-5 DAYS
முற்பதிவு ஆரம்பமாகி விட்டது
முற்பதிவுகளுக்கு - 0768226240

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 06.09.2016
வெற்றி வாரம் 2027
வர்ணம் நீலம்
மகரம்
வெற்றி இலக்கங்கள்
15 21 22 41
வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 23,94,140 /-
Web: www.dlb.lk
1919

கோடீபதி
சீட்டிழுப்பு வாரம்: 43
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 06.09.2016
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 93,533,440/=
E 10 22 32 39
Web: www.dlb.lk

செவ்வாய்க்கிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 494
சீட்டிழுப்பு திகதி 2016.09.06
வெற்றி இலக்கங்கள்
10 23 53 54 C
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 12,972,560/=
Web: www.dlb.lk



## பெடரரை பின்தள்ளிய

# சௌீனா

பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடர்களில் அதிக வெற்றிகளைக் குவித்தவர்களின் வரிசையில் சுவிற்சர்லாந்தின் பெடரரை பின்தள்ளி முதலிடம் பிடித்தார் செரீனா வில்லியம்ஸ்.

அமெரிக்க ரென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் செரீனா வில்லியம்ஸ் வெற்றிபெற்றார். இந்த வெற்றி பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடர்களில் அவரது 308 ஆவது வெற்றியாகும். இந்தப் பட்டியலில் 307 வெற்றிகளுடன் பெடரர் முதலிடத்தில் இருந்தார். அவரைப் பின்தள்ளி செரினா முதலிடம் பிடித்தார். ஆண்கள், பெண்கள் என இருபால் பிரிவையும் சேர்த்து பன்னாட்டுஅந்தஸ்துபெற்றஆட்டங்களில் அதிக வெற்றிகளைக் குவித்தவராக செரீனா வலம்வருகிறார். (மு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.